திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PUBLIC LIBRARY
12 JUL 1973
MADRAS

CONNEMARA PUBLIC LIBRARY
12 DEC 1968

ஸ்ரீ கன்னிகா பரமேசுவரி

மாலை 11] கீலக - கார்த்திகை - டிசம்பர், 1968 [மணி 3

சென்னை அரசாங்க அறநிலையப்



சிதம்பரம் வட்டம், வளையமாதேவி (வளவன் மாதேவி) வேத நாராயணப் பெருமாள் கோயிலின் துப்புரவு நிலை அமைப்பைப் பாராட்டி, அறநிலைய ஆணையர் திரு. ஆ. இராதாகிருஷ்ணன், M.A.,B.L., அவர்கள், பரம்பரை அறங்காவலர் திரு. டி. பி. சுந்தரலிங்கம் அவர்களிடம் ''சுழல் கோப்பை''ப் பரிசு வழங்குதல் (11—11—68).

பொருளடக்கம்

1. இளங்கோவடிகளும், சேக்கிழாரும்
2. திருமணியின் கூறும் குருமணி
3. அபிராமி அந்தாதி
4. சமயமும் விஞ்ஞானமும்
5. வேழம் காட்டும் விழுப்பொருள்
6. வில்வத்தின் சிறப்பு
7. மணிவாசகரும் திருக்கழுக்குன்றமும்
8. மகாபாரதம்
9. ஸ்ரீராமாயண ரசப்பிரவாகம்

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. 10/- **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 11] கீலக - கார்த்திகை - டிசம்பர், 1968 [மணி 3

இளங்கோவடிகளும் சேக்கிழாரும்

முன்னுரை :

'இளங்கோவடிகளும் சேக்கிழாரடிகளும்' என்னும் தலைப்பு, மிகப் பெரும்பாலோர்க்கு வியப்பினை விளைவித்தல்கூடும். ஏனெனில், மேம்போக்காகக் காண்புழி இவ்விருவருக்கும் இடையே இயைபு எதுவும் இருப்பதாகப், பொதுவாகப் புலப்படவில்லை. இளங்கோவடிகள் இருந்த காலமும், சேக்கிழாரடிகள் நிகழ்ந்த காலமும் வெவ்வேறானவை. இருவர்க்கும் இடைப்பட்டகாலம், ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகும். அன்றியும், சேக்கிழாரடிகள் சிவநெறிப் பெருந்தலைவர்களுள் ஒருவராகத் திகழாநிற்க, இளங்கோவடிகளோ சமண சமயத்தினைச் சார்ந்தவர் என்று, ஒரு சிலராற் கருதப்படுபவர். இளங்கோவடிகள் உலகியற் கலைநோக்கமே பெரிதும் அமையத் தம் அரும்பெரும் நூலினை இயற்றினார்; சேக்கிழாரடிகளோ அருளியல் இறை நாட்டமே பெரிதும் குறிக்கோளாகக் கொண்டு, தமது நூலினை யாத்தருளினார்.

இனைய சில வேறுபாடுகள் காரணமாக இதுகாறும் ஒருவரேனும் இவ்விரு பெருமக்களையும் இணைத்து, ஒப்பிட்டு நோக்கி ஆராயத் தலைப்பட்டிலர். இளங்கோவடிகளையும் சிலப்பதிகாரத்தையும் இன்று பல்வேறு திறமக்களும் மிகவும் போற்றிப் பெருமிதம் கொள்ள முற்பட்டுள்ளனர். ஆனால், சேக்கிழாரடிகளையும், பெரிய புராணத்தையும் சமய அமைப்புகள் மட்டுமே, போற்றிவருகின்றன. 'இளங்கோ' என்று பலர், இன்று தமக்குப் பெயர் வழங்கிக்கொண்டு மகிழ்தலைக் காண்கின்றோம். ஆனால், 'சேக்கிழான்' என்று சமயவுணர்வு மிக்கவர்களுங்கூடத் தம் பிள்ளைகளுக்கு யாண்டும் பெயரிட்டு அழைத்து மகிழ்தலைக் காண்கின்றிலேம். "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர் போல் இளங்கோவைப்போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என்று பாரதியார் அண்மையிற் பாடிப் புகழ்ந்ததனால், இளங்கோவடிகளுக்கு இன்று முன்பிலும் ஒருபுதிய புகழும் பெருமையும் ஏற்பட்டுள்ளன.

ஆனால் சேக்கிழாரடிகள், அத்தகைய புதுப் பெருமைகள் ஏதும் எய்தாமல், ஒரு சில அறிஞர்களுக்கும் பக்தியாளர்களுக்கும் மட்டுமே, உரியவராக விளங்கிக்கொண்டு வருகின்றார். சிலப்பதிகாரம் பற்றிப் பேசுவோர் பெரியபுராணத்தையும், பெரிய புராணம் பற்றிப் பேசுவோர் சிலப்பதிகாரத்தையும், அத்துணை மிகுதியாக மதித்துப் போற்றிப் பாராட்டி மகிழும் வழக்கம் காணப்படவில்லை. எனவேதான், இன்றைய சூழ்நிலையில் இவ்விரு பெருஞ் சான்றோர்களையும், இணைத்து ஒப்பிட்டு நோக்கி ஆராய்ந்துணர்தல் (Comparative Study) மிகவும் நலம் பயப்பதாகும் என்று கருதி விரும்பி, இத்தலைப்பு ஈண்டு எடுத்துக்

கொள்ளப்பெற்றது. இப் பெரும் பொருளைக் குறித்து, ஈண்டு இயன்ற வரையில் ஒரு சிறிது ஆராய்ந்து கண்டு இன்புற முயல்வோம்!

ஒப்புமை இயல்புகள் சில :

(1) இளங்கோவடிகளும் சேக்கிழாரடிகளும் "முத்தமிழ்த் துறையின் முறை போகிய உத்தமக் கவிஞர்கள்" என்பதில் தடையில்லை. இவ்விருவருமே தமிழகம் போற்றத்தகுந்த தலைசிறந்த சான்றோர்கள், அறவோர்கள் ஆவர்!

"உலகப் பெருங்கவிஞர்களின் பேரவையில் இங்கிலாந்து நாட்டின் சார்பாளர்களாக விளங்குதற்கு ஷேக்ஸ்பியரும் மில்ட்டனும் மிகவும் தகுதி உடையவர்கள். ஆயினும் அவர்கள் இங்கிலாந்துக்கு மட்டுமேயன்றி, உலகத்திற்கேயுரிய பெருங் கவிஞர்கள் ஆவர்" என்று ஆங்கில அறிஞர் ஒருவர் குறிப்பிடுகின்றார் (1). அம் முறையிற் கூறுதலுறின், இளங்கோவடிகளும் சேக்கிழாரடிகளும், உலகப் பெருங் கவிஞர்களின் பேரவையில், தமிழ் நாட்டின் சார்பாளர்களாக விளங்குதற்குரிய சிறந்த தகுதியுடையவர்கள் ஆவர், என நாமும் துணிந்து கூறலாம்.

(2) இளங்கோவடிகள் சேரர் குலத்துத் தோன்றல்; சேக்கிழாரடிகள் சோழ நாட்டின் தலைமை முதலமைச்சர்! இருவருமே வாழ்க்கை வளங்கள் பலவும் வாய்ப்புற அமைந்து, 'நிரம்பிய வாழ்க்கை' வாழ்ந்து சிறந்து விளங்கியவர்கள். தமிழகத்துச் சமுதாயத்திற் பெருநிலையும் பெருமதிப்பும் பெற்றுப் பிறங்கியவர்கள்.

(3) இவ்விருவரும் பல வகையில் தம்முள் உணர்ச்சியொத்த உள்ளத்தினராகக் காணப்படுகின்றனர். புலமைத்துறையிலும் சான்றாண்மை நலங்களிலும், இருவரும் ஒருவருக்கொருவர் 'சரி நிகர் சமானமாகவே' விளங்குகின்றனர்.

(4) அரசுரிமை துறந்த இளங்கோவடிகள் 'குணவாயிற் கோட்டம்' என்னும் கோயிலில் இருந்து, சிலப்பதிகாரம் இயற்றினார். அமைச்சுரிமை துறந்த சேக்கிழாரடிகள் தில்லைத் திருக்கோயில் ஆயிரக் கால் மண்டபத்தில் இருந்து, திருத்தொண்டர் புராணம் பாடினார்.

"தவநலஞ் சான்ற சிறந்த பெருமக்கள் தாம் அழியாத பேரிலக்கியங்களை இயற்ற முடியும்" (2), என்பர் அறிஞர். அவ்வாற்றால் நோக்கினும், தூய துறவுள்ளம், உயரிய தவவொழுக்கம் முதலியவற்றில், இளங்கோவும் சேக்கிழாரும் பெரிதொத்துக் காணப்படுகின்றனர்.

(5) பற்றற்ற தூய துறவுணர்ச்சி மிக்க வாழ்வில், இருவரும் தலை சிறந்து விளங்கினராயினும், நாட்டுப்பற்று — மொழிப் பற்று—அருங்கலையார்வம் என்னும் இன்னோரன்ன நலங்களில், ஒரு சிறிதும் குறைவிலா நிறைவினராய், இவர்கள் இருவருமே தமக்கு நிகர் பிறர் எவரும் இன்றித் திகழ்கின்றனர்.

(6) வெறும் கலையறிவும், நூலறிவும் ஆகிய புலமை மட்டுமே, எய்தி நிற்கும் ஏனைய சில கவிஞர்களும் புலவர்களும் போல் அன்றி, "காவற் சாகாடு கைத்து" நாடு காத்தோம்ப வல்ல அறிவாற்றல் ஆள்வினைத் திறங்களும், மிக்குடையவர்களாக இவ்விருவரும் இலங்கினர்.

(7) இசைக் கலையுணர்வும் ஈடுபாடும், மக்கள் மனத்தைப் பண்படுத்திப் புனிதமாக்கும் சிறப்புடையன. "எவன் இசையுணர்வு இல்லாதவனோ, எவனுக்கு இசை கேட்டு உள்ளம் உருகவில்லையோ, அவன் வஞ்சகம் சூழ்ச்சி கொலை கொள்ளை முதலிய கொடுஞ் செயல்களைப் புரியவல்ல இயல்பினன் ஆவான்"(4) என்று ஷேக்ஸ்பியர் பாடுவர்.

---

(1) "England may choose to be represented by Milton and Shakespeare at an international congress of World-poets, but they are more than English. They are of all countries, Milton no less than Shakespeare."

— **Mark Pattison, English Men of Letters.**

(2) "He who is not a seer cannot produce a great literature, 'Nanrish kurute Kavyam.' The intense concentration of mind is essential not only for saintliness but also for artistic creation, The impulse for great literature comes from a higher consciousness. The possession of our mind by a master-spirit is the phenomenon of inspiration....."

— **Dr. S. Radhakrishnan, In a P. E. N. Conference.**

இனியநல் இசையைக் கேட்டும்
இளகிடா திருப்பான் நெஞ்சம்;
துனிதரும் நரகம் போலச்
சூழ்ந்திருள் படர்ந்து நிற்கும்;
முனிதகு வஞ்சம் சூழ்ச்சி
முதற்பல தீங்கே செய்வான்;
நனிமிகக் கொடியன்; அந்தோ!
அவனைநாம் நம்பொ ணாதே!

—மொழி பெயர்ப்பு, ஆசிரியர்.

கலைகளுள் தலைமை சான்ற அத்தகைய இசைக் கலையின்பால் இவ்விருவர்க்கும் பேரீடுபாடு இருந்தது. இளங்கோவடிகள் இசைக் கலையில் ஈடுபாடு கொண்டவர் என்பது, சிலப்பதிகாரத்துள் ஆங்காங்கு இடையிடையே விரவிவரும் இசைக்கலை பற்றிய நுணுக்கக் குறிப்புகளாலும், இசை நலங் கனிந்த வரிப்பாடற் பகுதிகளாலும், தெளிவுறப் புலனாகின்றது. அங்ஙனமே சேக்கிழாரடிகளும் ''மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர்தமிழ்'' இசையிற் பெரிதும் ஈடுபட்டுத் திளைத்து இன்புற்றவர் என்பது அவர்தம் பெரிய புராணத்தால் தெளியப் படுகின்றது.

வண்டு பாடப் புனற்றடத்து
மலர்ந்து கண்ணீர் அரும்புவன,
கொண்ட வாச முகையவிழ்ந்த
குளிர்பங் கயங்க ளேஅல்ல;
அண்டர் பெருமான் திருப்பாட்டின்
அமுதம் பெருகச் செவிமடுக்கும்
தொண்டர் வதன பங்கயமும்
துளித்த கண்ணீர் அரும்புமால்!

உள்ளம் ஆர்உரு காதவர்? ஊர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள், பைங்
கிள்ளை பாடுவ; கேட்பன பூவைகள்!

என்பன போன்று வரும் பெரிய புராணப் பாடல்கள் பல, சேக்கிழாரடிகளுக்குத் திருநெறித் தமிழிசையின்பால இருந்த எல்லையற்ற ஈடுபாட்டின் பெற்றியினை விளக்கும்.

1. "The man that hath no music in himself, Nor is not moved with concord of sweet sounds, Is fit for treasons, strategems, and spoils; The motions of his spirit are dull as night, And his affections dark as Erebus. Let no such man be trusted."

—*William Shakespeare, The Merchant of Venice.*

(8) இவ்வண்ணமே, நல்லிசைக் கவிஞர் அனைவர் மாட்டும் பொதுமைச் சிறப்பியல் பாகக் காணப்பெறும் இயற்கைப் பொருளழகின் ஈடுபாட்டுத் துறையிலும்; மரம், செடி, கொடி, மலர், பறவை, விலங்கு, ஆறு, மலை, காடு, சோலை, நாடு, நகரம் என்னும் இயற்கைப் பொருள்களின் இயல்புகளை நுனித்துணர்ந்து காண்டலிலும், அவையிற்றின் அழகுகளையெல்லாம் இயல்நெறி திறம்பாமல் தன்மை நவிற்சி அமைய உள்ளவாறு விளக்கிப் பாடுதலிலும், இளங்கோவடிகளும், சேக்கிழாரடிகளும் பெரிதொத்த நிலையினராகக் காணப்படுகின்றனர். சிலப்பதிகாரத்தும், பெரிய புராணத்தும் ஆங்காங்கே போதரும் அழகிய இனிய இயற்கைப் புனைவுப் பகுதிகள், இவ்வுண்மைக்குச் சான்று பகரும்.

இயற்கைப் பொருளின் அழகுகளைச் சுவையொழுகக் காப்பியத்தின்கண் அமைத்துப் பாடும் திறனில், இளங்கோவடிகள் சேக்கிழாரடிகள் போன்ற சான்றோர் பெருமக்களுக்கும், பிற்காலக் கவிஞர்களுக்கும் பெரிதும் வேறுபாடுண்மை கருத்திற் பதிக்கற்பாலதாகும். இயற்கைப் பொருளின் இயல்புகளை நுனித்து நோக்கியுணர்ந்து கொள்ளாமல், வெறும் வாய்பாடுமாத்திரத்தான் நூல்களிற் கற்றறிந்தவற்றையே திரும்பப் பாடிச் சென்றொழியும் பிற்காலத்துப் கவிஞர்களைப் போல் அன்றி, இளங்கோவும் சேக்கிழாரும், பொருளியல்புகளையெல்லாம் கூர்ந்து நோக்கி, ஓர்ந்துணர்ந்து ஆராய்ந்து தெளிந்து, புதுமை நலம் தோன்றப் பாடும் மதி நலஞ் சான்றோர் ஆவர்.

(9) இளங்கோவடிகள் தாம் சேரர் குலத்துத் தோன்றல் ஆயினும், ஏனைய சோழ, பாண்டிய வேந்தர்களின் நாடுகளையும், அவர்தம் அறனும் மறனும் ஆற்றலும் பண்பும் விளங்க, நடுவுநிலை சிறிதும் பிறழாது, பொதுமையுணர்வு மேலோங்கிய நிலையிற் சேர நாட்டுடன் ஒப்ப வைத்துச் சிறந்தெடுத்துப் பாடியருள்கின்றார். இங்ஙனமே, சேக்கிழாரும், தாம் சோழ நாட்டின் முதலமைச்சராகத் திகழ்ந்திருந்தனராயினும், ஏனைய பிறநாடுகளையும் வேறுபாடின்றித் திறம் தெரிந்து புகழ்ந்து பாடுகின்றார். அடியவர்கள் அனைவரையும் அவர்கள் எந்நாட்டாராயினும் எக்குலத்தினராயினும், 'இவர்

12 JUL 1973 MADRAS

தேவர் அவர் தேவர் என்று, இரண்டாட்டாது ஒழிந்து, ஈசன் திறமே பேணி' வேறுபாடு சிறிதும் கருதாது, ஒத்த நிலையினராகவே, வைத்து மதித்துப் போற்றிப் புகழ்ந்து பாடிப் பரவுகின்றார்! இத்தகைய நடுவு நிலைப் பொதுமை நல்ல உணர்வில், இளங்கோவும் சேக்கிழாரும், எத்தகைய சிறு வேறுபாடும் இன்றி இணைந்தியைந்து நிகரொத்துத் திகழுகின்றனர்.

(10) தேசீய கவிஞர் பாரதியார் பாராட்டிச் சிறப்பித்துப் பாடியதற்கு ஏற்ப, 'நெஞ்சை யள்ளும்' திறனில், இளங்கோவின் சிலப்பதிகாரம் போலவே, சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணமும், ஒப்புயர்வற்ற தெய்வப் பெற்றிமை சான்று தலைசிறந்து திகழ்கின்றது. எளிமை, இனிமை, தெளிவு முதலிய நலங்கள் அமைந்து, சொற்பொருட் சுவை நலங்கள் மிகுந்து, இழுமெனும் இசையில் ஒழுகிய நடையின் விழுமியது பயந்து, கலைத் திறங்கள் செறிந்து, இணையற்று இலங்கும் இலக்கியப் பெருமணிகளாக அறிவொளி பரப்புதற்கண், இவ்விரண்டும் தமக்கு உவமை தாமேயாக விளங்குகின்றன. தமிழ் நாட்டின் பழம்பெருஞ் சிறப்புகளையும், வரலாறுகளையும், பண்பாடுகளையும் எல்லாம், நம் மனோர் தெளிந்துணர்ந்து கொள்ளுதற்கு இவ்விரு பெருமக்களின் நூல்களே, நமக்குச் செவ்விய துணைக்கருவிகளாகச் சிறந்தொளிர்கின்றன. தமிழ் நாட்டின் நாகரிகப் பண்பாட்டு நலங்களை உள்ளவாறு உணர்தற்குச் சிலப்பதிகாரமும், பெரிய புராணமும் போன்ற சிறந்த இலக்கியங்களே, தலைமை முதலிடம் பெறத் தக்கனவாகும்.

சேக்கிழாரும் சங்க நூல்களும்:

சேக்கிழாரடிகள், சோழ நாட்டின் ''முதிர்ந்த கேள்வித் தொன்னெறி அமைச்சர்.'' அமைச்சர்க்குரிய பண்பு நலங்கள் பலவும் அமைந்து சிறந்தவர். ''மதிநுட்பம் நூலோடு உடையவர்.'' ''ஆராய்ந்த கல்விச் செறிவு'' மிக்கவர். ''நுணங்கிய கேள்வி மேலோர்.'' எனவே திருத்தொண்டர் வரலாறுகளையெல்லாம் திறம்தெரிந்து சிறந்தெடுத்துப் பாடிய அவர், பழந்தமிழகச் செய்திகளையும் பழந்தமிழ்நூற் பொருள்களையும் நுண்ணிதின் ஆராய்ந்து எண்ணிக் கற்றிருந்தாராதல் வேண்டும்! மும்மையால் உலகாண்ட மூர்த்திநாயனார் வரலாற்றுள், மதுரைமாநகர் பற்றிப் பாட வருங்கால் பின்வரும் கருத்து அமையச் சேக்கிழார் பாடுகின்றார். ''நிறைவு மிக்க இயல் இசை நாடகம் என்னும் மூன்று தமிழ்களும், தங்கி நிலைபெற்ற அழகிய இடத்தையுடைய அந்தப் பழமையான மதுரைமாநகரில் நூல்கள் பரவுகின்ற இடங்களில், செய்யுட்கள் பெருமை பெற்று அரங்கேறுகின்ற தமிழ்ச்சங்கங்களும்; எருமைகள் மிகுதியாக வந்து பாய்ந்து படிவதனால், அவற்றின் மடியினின்று சுரந்து பெருகும் பாலும், தாமரை மலர்களினின்று ஒழுகும் தேனும் கலந்து எங்கும் பரவுதலால், அவற்றை உண்டு கொழுத்த சேல்மீன்கள் துள்ளிப் பாய்கின்ற நீர்நிலைகளில், வயல்களில் மிகுதியாகத் தோன்றி, வரப்புகளில் ஏறுகின்ற சங்குகளும் நிரம்ப உள்ளன.''

சால்பாய மும்மைத் தமிழ்தங்கிய
அங்கண் மூதூர்
நூல்பாய் இடத்தும்உள, நோன்றலை
மேதி பாயப்
பால்பாய் முலைத்தோய் மதுப்பங்கயம்
பாய எங்கும்
சேல்பாய் தடத்தும் உள, செய்யுள்
மிக்கேறு சங்கம்

இவ் வினிய செய்யுளின்கண் வரும் ''செய்யுள் மிக்கேறு சங்கம்'' என்னும் சிறந்த தொடர் மிகவும் பொருள்நலம் பொதிந்தது. மதுரை நகரத்திற் செய்யுட்கள் அரங்கேறப்பெறுகின்ற தமிழ்ச் சங்கம் அமைந்துள்ளது; அதன் வயல்களில் சங்குகள் மிகுதியாகத் தோன்றி உலவுகின்றன என்னும் செய்தியை, இப்பாடல் இனிது உணர்த்துகின்றது.

இம்மட்டோ! மதுரையின் சிறப்பையும், அதற்குக் காரணமாக அங்குத் தமிழ்ச் சங்கம் அமைந்திருந்ததனையும், அதன்கண் சிவபிரான் தலைமைப் புலவராக அமர்ந்து பணியாற்றியதனையும், இறையனார் களவியல் என்னும் நூல் இயற்றியருளியதனையும், இனிதெடுத்துக் குறிப்பிட்டுப் பாடுகின்றார் சேக்கிழார்!

''திருவாலவாய் என்னும் கோயிலில் எழுந்தருளி எங்கள் பிறவியைத் தீர்த்தருள்பவர் ஆகிய சிவபெருமான், இறையனார் என்னும் பெயருடைய புலவராக அமர்ந்து தலைமை தாங்கிச் சங்கம்

இருந்து தமிழராய்ந்ததும், மெய்ம்மைப் பொருளாம் தமிழ்நூலின் விளங்கு வாய்மை ஆகிய அகப்பொருள் இலக்கணத்தினை அழகுற விளக்கும் இறையனர் களவியல் என்னும் நூலைத் தந்தருளிய தும், அதற்கு உரை காண்பதில் ஏற் பட்ட சங்கத்தார் கலகம் தீர்த்ததும், ஆகிய திருவிளையாடல்கள் நிகழ்தற்கு ஏதுவாகப் பண்டைத் தமிழ்ச்சங்கம் அமைந்திருந்த தலம் மதுரையேயாகும். அந்நகரம் மூன்று உலகங்களிலும் தனக்கு ஒப்பும் உயர்வும் இல்லாத மேம்பாடு உடையதாகும் அன்றோ?''

மும்மைப் புவனங் களின் மிக்கது
அன்றே அம்மூதூர்!
மெய்ம்மைப் பொருளாம் தமிழ் நூலின்
விளங்கு வாய்மைச்
செம்மைப் பொருளும் தருவார்
திருவால வாயில்,
எம்மைப் பவம்தீர்ப்பவர் சங்கம்
இருந்தது என்றால்!

இவ்வாற்றால், மதுரை மாநகரின்கண் 'தமிழ்ச் சங்கம், அமைந்து விளங்கி யிருந்த செய்திகளைப் புகழ்ந்து பாடியரு ளும் சேக்கிழார் சங்கத் தமிழ் நூல்களைத் தம் இளமையிற் கற்றுச் சுவைத்து மகிழ்ந் திருப்பார் எனத் துணியலாம் அன்றோ? சங்கத் தமிழ் நூல்களைச் சேக்கிழார் தமது இளமைப் பருவத்தில் தகவுறக் கற்றுச் சுவைத்து மகிழ்ந்திருப்பார் என்று துணிந் தனமாயின், நெஞ்சையள்ளும் செஞ்சொற் காப்பியமாம் சிலப்பதிகாரத்தினையும், அவர் கற்றுமகிழ்ந்திருப்பார் எனக்கொள்ளலாம். அங்ஙனம் கொள்ளின், சிலப்பதிகாரத்தின் சொற்பொருட் கருத்துச்சாயல்கள் ஒருசில வேனும், பெரிய புராணத்திற் காணப்படு தல் கூடும். ஆதலின் அவற்றுள் ஒரு சில வற்றை மட்டும் ஈண்டுக் காண்போம்!

இமயத்திற் புலிக்கொடி:

(1) பழந்தமிழ்ச் சோழ வேந்தர்கள் இமயம் வரையிற் சென்று புலிக்கொடி பொறித்து மீண்டு வந்த செய்தியினை, அச் சோழநாட்டின் முதலமைச்சராக விளங்கி யிருந்த சேக்கிழாரடிகள் பெருமிதம் தோன்றப்பாடுகின்றார்.

பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுள்
கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியில்
சூட்டிய வளர்புலிச் சோழர் காவிரி
நாட்டியல் பதனையான் நவிலல் உற்றனன்.

பொன்மலைப் புலிநின் றோங்கப்
புதுமலை இடித்துப் போற்றும்
அந்நெறி வழியே ஆக
அயல்வழி அடைத்த சோழன்

எனவரும் பெரிய புராணப் பாடல்கள், சோழ வேந்தர்கள் இமயத்திற் புலிக் கொடி நாட்டிய செய்தியை வற்புறுத்துதல் காணலாம். இங்ஙனம், சேக்கிழார் பாடி யருளியமைக்குரிய சான்றுகளுள்,

இருநில மருங்கிற்
பொருநரைப் பெறுஅச்
செருவெங் காதலில்
திருமா வளவன்
புண்ணியத் திசைமுகம்
போகிய அந்நாள்,
பகைவிலக் கியதிப்
பயங்கெழு மலை என,
இமையவர் உறையும்
சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி ஒற்றிக்
கொள்கையிற் பெயர்வோன்,
இப்பால் இமயத்து
இருத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொற்கோட்
டுழையதா, எப்பாலும்
செருமிகு சினவேற்
செம்பியன்,
ஒருதனி ஆழி உருட்டுவோன்
எனவே!

என்பன போல வரும் சிலப்பதிகாரப் பகுதி கள், குறிப்பிடத் தக்க சிறப்பின வாதல் ஒருதலை. சேக்கிழாரடிகள் மேலைச் சிலப் பதிகாரப் பகுதிகளைப் படித்துச் சுவைத்து மகிழ்ந்திருப்பார்! மகிழ்ந்ததன் பயனாகவே, சோழ வேந்தர்கள் இமய வெற்பிற் புலிக் கொடி பொறித்த செய்தியைப் புகழ்ந்து பாடி யிருப்பார் என நாம் கருதி மகிழலாம்.

கார் எனும் பருவ நல்லாள்:

(2) சேக்கிழாரடிகள், ஆனாய நாயனர் புராணத்துள், முல்லை நிலத்துக்குரிய கார் காலத்தினையும், மாலைப் பொழுதினையும் அழகுறப் புனைந்து பாடுகின்றார். கார் காலம் தோன்றினாற் காட்டில் முல்லைப் பூக்கள் மலரும்; மயில்கள் ஆடும்; வண்டு கள் பாடும்' சிவந்த பட்டுப் பூச்சிகள் தோன்றிப் பறக்கும். மேகங்கள் வானத் தில் திரண்டு கவியும். மாலை வேளைகளில் மின்னல்கள் தோன்றி அசைந்து பளிச்

சிடும். இவ்வியற்கை நிகழ்ச்சிகளைப் பாட லுறும் சேக்கிழார், "கார்காலம் என்னும் அழகிய பருவ நங்கை யானவள், மயில்கள் அகவவும், வண்டுகள் பாடவும், வெண்மை யான முல்லை மலர்கள் பூக்கவும், சிவந்த நிறமுடைய இந்திர கோபப் பூச்சிகள் பறக்கவும், மின்னல்கள் இடையிடையே தோன்றவும், மாலை நேரத்தில் மேகங்கள் அசையும்படி, மழைகாலம் ஆகிய பருவம் எய்தியது'' என்னும் கருத்தமையப்பாடு கின்றார்.

நீலமா மஞ்ஞை ஏங்க
    நிரைக் கொடிப் புறவம் பாடக்
கோலவெண் முகைஏர் முல்லை
    கோபம் வாய் முறுவல் காட்ட
ஆலும்மின் இடைசூழ் மாலைப்
    பயோதரம் அசைய வந்தாள்
ஞாலநீ டரங்கில் ஆடக்
    கார்எனும் பருவ நல்லாள்

"இத்தகைய அழகிய இனிய சாயல் நமக்கு இல்லையே என்று, மயில்கள் கண்டு மனத்தினில் ஏக்கம் கொண்டு நிற்கவும்; வரிசையாக நின்று, கொடி போன்ற இளம் பெண்கள் முல்லைப் பண்ணைப் பாடவும்; வெண்மையான முல்லை மலர் களே பற்களாகவும், சிவந்த நிறமுடைய இந்திர கோபம் என்னும் பூச்சிகளே எழில் கனிந்த இதழ்களாகவும் தோன்ற; மின்ன லைப் போன்று நுடங்குகின்ற நுண்ணிய இடையுடன், தனது இளங்கொங்கைகள் அசையும்படி, உலகம் ஆகிய நாடக மேடையின்மீது, கார்காலம் என்னும் பருவ நலம் வாய்ந்த அழகிய இளம் பெண் வந்து சேர்ந்தாள்'' என வேறொரு பொருளும் புலப்படுமாறு, உருவக முறை யிற் சிறந்த சொல்லோவியம் ஒன்றைப் பெரிய புராணத்துள் அமைத்துக் காட்டு கின்றார் சேக்கிழார்.

இதனை ஒரு புடையே ஒத்து, இதனுடன் தொடர்பு உடையதோ என நம்மனோர் எண்ணுதற்கு இடனுண்டாமாறு,

"விரிகதிர் பரப்பி உலகம் முழு தாண்ட
ஒருதனித் திகிரி உரவோற் காணேன்!
அங்கண் வானத்து அணிநிலாத் திகழ்தரும்
திங்களஞ் செல்வன் யாண்டுளன் கொல்?
    எனத்
திசைமுகம் பசந்து செம்மலர்க் கண்கள்
முழுநீர் வார முழுமெயும் பனித்துத்
திரைநீர் ஆடை இருநில மடந்தை
அரைசுகெடுத் தலமரும் அல்லற் காலை''

எனவரும் இளங்கோவடிகளின் "அந்தி மாலைச் சிறப்புச் செய்காதை'' வரிகள், அழகுற அமைந்து விளங்குதல் ஒப்பு நோக்கி யுணர்ந்து மகிழற்பாலதாகும்.

'தனது கதிர்களைப் பரப்பி உலகம் முழுவ தும் ஆண்ட, ஒற்றைச் சக்கரத்துத் தேரை யுடைய சூரியன், ஆகிய பேரரசன் மறைந் தான். அடுத்துத் தோன்றி, முடிசூடி ஆளுதற்குரிய சந்திரன் ஆகிய இளவரசன் எங்கே இருக்கின்றானோ? தெரியவில்லையே என்று, திசை ஆகிய முகம் பசலை நிறம் அடைந்து, சிவந்த மலர் போன்ற கண் களினின்று நீர் பெருக, வானம் ஆகிய உடம்பு முழுவதும் பனிகொண்டு, கடல் ஆகிய ஆடையை உடுத்த, நிலம் ஆகிய அரசியானவள், தன் கணவனை இழந்து, செய்வது அறியாது திகைத்து வருந்து கின்ற அந்திமாலைக் காலம்'' என்பது, இவ் வினிய வரிகளின் பொருள்.

புகைகளும் ஒலிகளும்:

(3) இளங்கோவடிகள் தமது சிலப்பதி காரத்தில், கோவலனும் கண்ணகியும் மதுரை மாநகர் நோக்கிச் செல்லுங்கால், மதுரை நகருக்குச் சிறிது தொலைவில் நெருங்கிக் கொண்டிருக்கும் பொழுது, அங்கே பலவகைப் புகைகள் வெளிப்படு தலைக் கண்டனர் என்கின்றார். சமைய லறைப்புகை, அப்பவாணிகர் அப்பம் சுடும் புகை, பெண்களும் ஆண்களும் தம் மாட மாளிகைகளில் இடும் நறுமணப் பொருள் களின் புகை, அந்தணர்கள் இயற்றும் வேள்விகளின் புகை, முதலிய பலவேறு இனிய நல்ல புகைகள், மதுரைமாநகரி னின்று எழுந்து விசும்பிற் பரவி யுலவு தலைக் கோவலனும் கண்ணகியும் கண் டனர்.

அட்டிற் புகையும், அகல் அங்காடி
முட்டாக் கூவியர் மோதகப் புகையும்
மைந்தரும் மகளிரும் மாடத்து எடுத்த
அந்தீம் புகையும் ஆகுதிப் புகையும்,
பல்வேறு பூம்புகை அளைஇ......

இங்ஙனமே, கோவலனும் கண்ணகியும் மதுரை நகரினை நெருங்கி, மிகவும் அணித் தாக நடந்து சென்று கொண்டிருக்கும்

போது, வைகறை ஆகிய விடியற்கால வேளையில், மதுரையினின்று எழும் பல வகை ஒலிகளைக் கேட்கின்றனர். "பாண்டிய மன்னனின் அரண்மனையிற் காலை வேளையில் அறையப்பெறும் முரசத்தின் ஒலியும், அந்தணர்கள் ஓதும் வேதங்களின் ஒலியும், முனிவர்கள் மந்திரங்களை ஓதி வழிபடுகின்ற ஒலியும், நாட்காலையில் வாட்போர் வீரர்கள் எழுப்பும் முரசின் ஒலியும், யானைப் படைகள் பிளிறி முழங்கும் ஒலியும், ஆகிய ஒலிகள் பலவும், கடலின் ஒலியைப்போல அவர்களுக்குக் கேட்டன" என்று இளங்கோவடிகள் பாடுகின்றார்.

காலை முரசக் கனைகுரல் ஓதையும்
நான்மறை அந்தணர் நவின்ற ஓதையும்
மாதவர் ஓதி மலிந்த ஓதையும்
வாளோர் எடுத்த நாளணி முழவமும்
போரிற்கொண்ட பொருகரி முழக்கமும்
வாரிக் கொண்ட வயக்கரி முழக்கமும்
பணைநிலைப் புரவி ஆலும் ஓதையும்
கிணைநிலைப் பொருநர் வைகறைப் பாணியும்
கார்க்கடல் ஒலியிற் கேட்டனர்.........

இச்சிலப்பதிகாரப் பகுதிகளைப் படிக்கும் போது, சேக்கிழார் பாடல்கள் சிலவும் நம் நினைவுக்கு வருகின்றன. "சோழநாட்டு மாடமாளிகைகளையும் சோலைகளையும் பல வகைப் புகைகள் சூழ்கின்றன. அவைகள், கரும்பு ஆலைகளின் நறும்புகையோ, மகளிர் தம் கூந்தலுக்கு இடும் அகிலின் தூபமோ, யூபம் என்னும் தூண்களை நாட்டி நடத்தும் வேள்விகளின் புகையோ, வானத்திற் பரவும் மேகமோ, இவைதாம் என்று சுட்டிச் சொல்லல் அரிது" என்கின்றார் சேக்கிழார்!

கரும்படு களமர் ஆலைக்
கமழ்நறும் புகையோ, மாதர்
சுரும்பெழ அகிலால் இட்ட
தூபமோ, யூப வேள்விப்
பெரும்பெயர்ச் சோலை தோறும்
பிறங்கிய புகையோ, வானின்
வருங்கரு முகிலோ சூழ்வ
மாடமும் காவும் எங்கும்!

கழறிற்றறிவார் என்னும் சேரமான்பெருமாள் நாயனார் வாழ்ந்து, அரசு செலுத்திய கொடுங்கோளூர் என்னும் சேர நாட்டுத் தலைநகரம் பற்றிப் பாடத் தலைப்படும் சேக்கிழாரடிகள், மதுரை நகரில் வைகறைப் பொழுதில் எழும் பலவகை ஒலிகளையும் பற்றி இளங்கோவடிகள் குறிப்பிட்டிருப்பதனை நினைவு கூரும் வகையில், பின்வருமாறு பாடியருளியிருத்தல் ஒப்பிட்டு உணர்ந்து மகிழ்தற்கு உரியது.

"கொடுங்கோளூர் என்னும் மலைநாட்டுத் தலைநகரத்தில், காலை நேரத்திற் பலவகை ஒலிகள் எழுகின்றன. கலைஞர்கள் பலரும் வைகறையிலேயே விழித்தெழுந்து, தத்தம் கலைகளைப் பயிலுகின்ற ஒலியும்; 'வேழம் உடைத்து மலைநாடு, என்பராதலின், யானைப்படைகள் பிளிறுகின்ற ஒலியும்; சோலைகளில் மலருகின்ற பூக்களின் தேனையுண்டு மகிழ்ந்து மிழற்றுகின்ற வண்டுகளின் ஒலியும்; அரபி நாட்டினின்றுவரும் குதிரைப் படைகள் அங்கு மிக்கிருத்தலால், அவைகள் கனைக்கின்ற ஒலியும்; மக்கள் ஒரு குறைவும் அற்று இன்புற்று வாழ்தலினால் நிகழ்கின்ற ஆடல் பாடல் முழவுகளின் ஒலியும்; கடலின் பேரொலியையும் விழுங்கி மிகுந்தெழும் முறையில் விளங்கி, எவரும் வியக்கும்படி திகழ்கின்றது" எனப் பாடுகின்றார் சேக்கிழார்!

காலை எழும்பல் கலையினொலி,
களிற்றுக் கன்று வடிக்குமொலி
சோலை எழும்மென் சுரும்பினொலி,
துரகச் செருக்காற் சுலவுமொலி
பாலை விபஞ்சி பயிலுமொலி,
பாடல் ஆடல் முழவினொலி,
வேலை ஒலியை விழுங்கிஎழ,
விளங்கி ஓங்கும் வியப்பினதால்!

பாலைநிலப் புனைவு:

(4) கோவலன் கண்ணகி கவுந்தி என்னும் மூவரும் உறையூரினின்று நீங்கி, வைகறையிற் புறப்பட்டுத் தென்றிசை நோக்கிச் செல்கின்றனர். வழியில் ஓர் இளமரக்காவின்கண் தங்கினர். அங்கே மாங்காட்டு மறையோன் என்பவனைக் கண்டு அவன்பால் உரையாடினர். அவன் திருவேங்கடமும் திருவரங்கமும் கண்டு தொழுவதற்காகத் தான் வந்த செய்தியைக் கூறினான். அதுகேட்டு மகிழ்ந்த கோவலன், அவனை மதுரைக்குச் செல்லும் வழியாது? என வினவினான். "வெப்பம் மிக்க கொடிய இவ்வேனிற் காலத்தில், இப்பாலை நில வழியில் நடந்தோ, நீங்கள் மதுரை செல்லப் போகின்றீர்கள்?" என நயந்து வினவி, மதுரைக்குச் செல்லும் நெறியை, அவன் கோவலனுக்குத் தெரிவிக்கின்றான். அப்பகுதியில்,

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"

என்னும் அழகிய சிறந்த வரிகள் வருகின்றன. பாலைத் திணையின் இயல்பினை விளக்குதற்குச் சிவஞான முனிவர் முதலிய சான்றோர்கள் பலரும், இச்சிலப்பதிகார வரிகளையே, இலக்கண நூல்களில் மேற்கோள் காட்டுவர். தமிழ் நாட்டில் தனியே பாலை என்று ஒரு நிலம் கிடையாது. வேனிற் கால வெப்பத்தினால், முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும், தம்வளம் குன்றித் திரிதலால், பாலை என்னும் நிலமாகத் தோன்றும். எனவே பாலைக்கு 'நடுவு நிலைத்திணை' என்றும் ஒரு பெயர் உண்டு. பாலைத் திணைக்கு வேனிற்காலமும் நண்பகலும் முறையே பெரும்பொழுதும் சிறு பொழுதும் உரியனவாகக் கூறுவர். பின் பனிக் காலமும் பாலைக்குரிய பெரும்பொழுதாகும். இப்பாலை நிலத்திற்குரிய தெய்வமாக, ஞாயிற்றையும் வாயுவையும் ஒரு சிலர் கூறுவது உண்டு. கலித்தொகை என்னும் சங்க நூலின், பாலைத்திணை பற்றிய பாடல்கள், அவர்தம் கருத்திற்கு அரண் செய்யும். எனினும், கொற்றவையினையே பாலைத் திணைக்குரிய தெய்வமாக இளங்கோவடிகள் கொண்டார். "வேட்டுவவரி" என்னும் சிறந்த பகுதியிற் பாலைநில வேடர்கள் கொற்றவையைப் பரவி வழிபட்டதாக அடிகள் பாடியிருத்தல் கொண்டு, இதனையுணரலாம்.

ஆசிரியர் சேக்கிழார், இளங்கோவடிகளின் கருத்தினையே, தாமும் இயைந்து தழுவிப் பாடியருள்கின்றார். தமிழகத்திற் பாலைநிலம் என்பது ஒன்று தனியே இன்மையின், 'பாலையும் சொலல் ஆவன உள' என்றும்; அவைபரற்கற்கள் நிறைந்த முரம்பு நிலங்களாகும் என்றும்; முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல்பு இழந்த பகுதிகளே பாலைஎனவழங்கப் படுமாதலின், அவற்றை 'முல்லையும் குறிஞ்சியும் அடுத்த சில இடங்கள்' என்றும்; சேக்கிழார் குறிப்பிடுகின்றார். அதற்குரிய தெய்வம் நீலி (காளி, துர்க்கை); பெரும் பொழுது வேனில்; சிறுபொழுது கடும் பகல்; எனச் சேக்கிழாரும் இளங்கோவைப் போலவே சிறந்தெடுத்துப் பாடுகின்றார்.

கோல முல்லையும் குறிஞ்சியும்
அடுத்தசில் இடங்கள்,
நீல வாட்படை நீலி
கோட்டங்களும் நிரந்து,
கால வேனிலிற் கடும்பகற்
பொழுதினைப் பற்றிப்
பாலையும் சொலல் ஆவன
உள, பரல் முரம்பு.

எனப் பெரிய புராணத்தில், திருக்குறிப்புத் தொண்டநாயனார் வரலாற்றுத்தொடக்கத்தின்கண், தொண்டை நாட்டின் ஐந்திணை வளங்களும் பாடப்பெறும் பகுதியில் வரும் அழகிய இனிய பாடல் அமைந்திருத்தல் அறிந்து மகிழ்தற்குரியதாகும்.

மைத்துனக் கேண்மை :

(5) இங்ஙனமே, திருக்குறிப்புத் தொண்டர் வரலாற்றுத் தொடக்கத்தின்கண், தொண்டைநாட்டின் சிறப்பினைப் புகழ்ந்து பாடுங்கால், சேரநாடும் தொண்டை நாடும், தம்முள் 'மைத்துனக்கேண்மை' பேண நீடிய முறைமையின எனச் சேக்கிழார் மொழிகின்றார்.

ஆணையாம்என நீறுகண்டு
அடிச்சேரன் என்னும்
சேண் உலாவுசீர்ச் சேரனார்
திருமலை நாட்டு
வாள் நிலாவுபூண் வயவர்கள்
மைத்துனக் கேண்மை
பேண நீடிய முறையது
பெருந்தொண்டை நாடு.

என்பது பெரியபுராணச் செய்யுள். இங்ஙனம் சேக்கிழார் பாடியமைக்கு அடிப்படை சிலப்பதிகாரமே ஆகலாம் போலும் எனத் தோன்றுகின்றது. சிலப்பதிகாரத்தில் வஞ்சிக் காண்டத்து, நீர்ப்படைக் காதையின்கண்,

மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்
இளவரசு பொருஅர் ஏவல் கேளார்
வளநாடு அழிக்கும் மாண்பினர் ஆதலின்
ஒன்பது குடையும் ஒருபகல் ஒழித்தவன்
பொன்புனை திகிரி ஒருவழிப் படுத்தோய் !

எனவரும் வரிகளால், சேரன் செங்குட்டுவனுக்கு மைத்துனன் ஆகிய சோழன் ஒருவன் இருந்தான் என்பதும்; இளவரசனாக இருந்த அம் மைத்துனச் சோழனுக்குத் தாயத்தார் சிலர் இடையூறு விளைத்து அரசைநிலைகுலையச் செய்து வந்தனர் என்பதும்; நேரிவாயில் என்னும் இடத்திற் போர் நிகழ்த்திச் சேரன் செங்குட்டுவன் அத்தாயத்தார்களை வென்று அடக்கித் தன் மைத்துனச் சோழனின் ஆட்சி நிலைபெறுமாறு துணைபுரிந்தனன் என்பதும், அறியப்படுகின்றன. இவ்வாற்றால் சேரனுக்குச்

சோழன் மைத்துனக் கேண்மையன் ஆதலும், சோழநாட்டின் ஒரு பகுதியாகவே தொண்டைநாடு மிகப் பழங்காலத்தில் விளங்கியதாதலும் கருதியே,சேரனின் மலை நாட்டு வாள்வீரர்கள் மைத்துனக் கேண்மை கொண்டாடத் திகழ்வது தொண்டைநாடு எனச் சேக்கிழார் பாடினராதல் வேண்டும்! இதற்குத் 'தொண்டை மண்டல சதகம்' என்னும் நூல், வேறொரு கதையைக் கூறுகின்றது. எனினும், இங்கு நாம் குறிப்பிட்டதும் ஏற்புடைத்தென்று கொள்ளுதல் கூடும்.

பார்ப்பனவாகை :

(6) பெரியபுராணத்துட் புகழ்ந்தோதப் பெறும் அறுபான்மும்மை நாயன்மார்களுள் சண்டேசுர நாயனார் ஒருவர். அவர் தோன்றியருளிய தலம் திருச்சேய்ஞலூர் என்பது. அங்கே மறையவர்கள் மிகுதியாக வாழ்கின்றனர். அவர்கள் திருநீற்றின்பால் ஒன்றுபட்டு உறைத்த அன்பு கொண்டவர்கள். உபநயனத்திற்கு முன்பு ஒரு பிறப்பும், உபநயனத்திற்குப் பின்பு ஒரு பிறப்பும், ஆகிய இரண்டு பிறப்பின் சிறப்பினைப் பெற்றவர்கள். காட்டுத்தீ வீட்டுத்தீ ஞானத்தீ என்னும் மூன்று எரியினையும் வளர்த்துக் காப்பவர்கள். இருக்கு எசுர் சாமம் அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாகக் கற்றவர்கள். ஐந்துபுலன்களுக்கு அடிமையாகி அவற்றின் பின்னே தாம்செல்லாமல், தமக்கு அவற்றை அடிமையாகக்கொண்டு, தம் பின்னே அவைகள் அடங்கிநின்று தொடர்ந்து வரப்பெறும் மேன்மை வாய்ந்தவர்கள். ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் ஆறு தொழில்களையும் தவறுமற் புரிந்து, உண்மையான ஒழுக்க நெறியில் நிற்பவர்கள். ஆதலின், ஏழு உலகங்களும் அம்மறையவர்களைப் புகழ்ந்து போற்றும் என்று, எண் அலங்காரம் என்னும் அணி நலம் அமையுமாறு, சேக்கிழாரடிகள் அத்தலத்தினைப் புகழ்ந்து பாடியருள்கின்றார்.

செம்மை வெண்ணீற்று ஒருமையினர்;
இரண்டு பிறப்பின் சிறப்பினர்;
மும்மைத் தழல்ஓம் பியநெறியார்;
நான்கு வேதம் முறைபயின்றார்;
தம்மை ஐந்து புலனும்பின்
செல்லும் தகையார்; அறுதொழிலின்
மெய்ம்மை ஒழுக்கம் ஏழுலகும்,
போற்றும் மறையோர் விளங்குவது!

இப்பகுதியானது, சிலப்பதிகாரம் வஞ்சிக் காண்டத்துள் கட்டுரைக்காதை என்னும் பகுதியின்கண், மதுராபதித் தெய்வம், பாண்டிய வேந்தரின் பழம்பெரும் செங்கோற் பண்பினை யெல்லாம், கண்ணகிக்கு எடுத்துக்கூறி விளக்கியதாக வரும் பகுதியில், பராசரன் என்னும் பார்ப்பனன் ஒருவனைப்பற்றிக் குறிப்பிடுவதாக வரும் பகுதியை நினைப்பிக்கும் வகையில் அமைந்துள்ளது.

பராசரன் என்னும் அந்தணன், வீடுபேறு விரும்புதல் ஆகிய ஒன்றுபுரி கொள்கையினன்; கல்வித் தொடக்க நிலைக்கு முன்னர் ஒரு பிறப்பும், அதன்பின்னர் ஒரு பிறப்பும் ஆகிய இருபிறப்பை யுடையவன்; ஆகவனீயம் காருகபத்தியம் தக்கிணாக்கினி என்னும் மூன்று நெருப்பை வளர்த்து வருபவன்; நான்கு வேதங்களையும் முறையே முழுவதும் கற்றவன்; கடவுள் வேள்வி முனிவர்வேள்வி உயிர்வேள்வி மனிதவேள்வி தென்புலத்தார்வேள்வி என்னும் ஐந்து பெருவேள்விகளையும் செய்து ஒழுகுபவன்; ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் ஆறுதொழில்களையும் தவறுமற் புரிபவன். இதனை,

ஒன்றுபுரி கொள்கை இருபிறப் பாளர்
முத்தீச் செல்வத்து நான்முறை முற்றி
ஐம்பெரு வேள்வியும் செய்தொழில் ஓம்பும்
அறுதொழில்அந்தணர் பெறுமுறை வகுக்க
நாவலங் கொண்டு நண்ணார் ஓட்டிப்
பார்ப்பன வாகை சூடினன்.........

எனச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள், எண் அலங்காரம் என்னும் அணியமையப் பாடுகின்றார். மேலைப் பெரிய புராணப் பாடலும், இச் சிலப்பதிகார வரிகளும், தம்முட் பெரிதொத்து விளங்குதல் நினைத்து மகிழ்தற்குரியது.

அருமந்த அரசாட்சி :

(7) மதுரை மாநகரிற் கோவலன் கொலையுண்டதும், கண்ணகி தன் கணவன் கள்வன் அல்லன் என வழக்குரைத்ததும், அதனால் தன் தவறுணர்ந்து கலங்கிய பாண்டியன் நெடுஞ்செழியன் தன் உயிர் துறந்ததும், ஆகிய செய்திகளைச் சேரவேந்தன் ஆகிய செங்குட்டுவன் கேள்வியுற்று, மிகவும் மனம் வருந்துகின்றான். அப்போது செங்குட்டுவன்,

மழைவளம் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயிர் எய்திற் பெரும்பேரச்சம்
குடிபுர வுண்டும் கொடுங்கோல் அஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதகவு இல்லை

என அரசாட்சிப் பொறுப்பினுல் ஏற்படும் அச்சம் கவலை முதலிய அலக்கண் கள் குறித்துக் கூறுவதாக வரும் பகுதி.

மாநிலங் காவலன் ஆவான்
மன்னுயிர் காக்கும் காலைத்
தான் அதனுக்கு இடையூறு
தன்னால், தன் பரிசனத்தால்,
ஊனமிகு பகைத் திறத்தால்,
கள்வரால், உயிர் தம்மால்
ஆனபயம் ஐந்தும் தீர்த்து
அறங்காப்பான் அல்லனே ?

ஒருமைந்தன் தன்குலத்துக்கு
உள்ளான் என்பதும் உணரான்
தருமந்தன்வழிச் செல்கை
கடன்என்று தன்மைந்தன்
மருமம் தன் தேராழி
உறஊர்ந்தான் மனுவேந்தன் !
அருமந்த அரசாட்சி
அரிதோமற் றெளிதோதான் ?

என்னும் அரிய பெரிய புராணப் பாடல்களை, நம்மனோர் நெஞ்சிற் கொணர்ந்து நமக்கு நினைப்பூட்டி மகிழ்விக்கும் தகைமையதாய் விளங்குதல் காண்கின்றோம் அல்லமோ ?

இசைக்கலை நுட்பங்கள் :

இளங்கோவடிகள் இசைக்கலைப் புலமை நிரம்பியவர் என்பதும், அவர்தம் சிலப்பதிகாரம் இசைக்கலை ஆராய்ச்சிக்குரிய கருவூலமாக இன்றும் விளங்கி வருகின்றது என்பதும் தமிழுணர்வு பெற்றோர் அனைவரும் நன்கறிந்த தொன்று. அருட்டிரு விபுலானந்த அடிகளார் அண்மையில் இயற்றியருளிய ''யாழ் நூல்'' என்னும் அரும் பெறல் ஆராய்ச்சி நூல் இவ்வுண்மையை மலையிலக்கென விளக்கா நிற்கும். இங்ஙனமே சேக்கிழார் பெருமானும் இசைக் கலையில் நிரம்பிய புலமை கைவரப் பெற்றவர் என்பது, பெரிய புராணத்தாற் புலனுகின்றது. அவற்றுள் ஓரிடம் மட்டுமே காண்டல் ஈண்டைக்கு அமையும்.

திருவைந்தெழுத்தை உள்ளுறையாகக் கொண்டு, வேய்ங்குழல் வாசித்து ஆனாய நாயனர் சிவபிரானை வழிபட்ட திறத்தினைச் சேக்கிழார் தமது இசைக்கலைப் புலமை நுண்ணுணர்வு வளம் விளங்கப்பாடியருள் கின்றார். “ஆனயர் ஏழுவிரல் இடையிட்ட இன்னிசை வங்கியம் (Flute) எடுத்தார். அதன் துளைகளில் அழகிய தம் இதழ்களை வைத்து, மலர்களில் வண்டுகள் மகரந்தப் பொடியினைக் கவருங்காற் செய்வது போல முரலுதல்—எழுதல்—நிற்றல் என்பன செய்து ஊதினார். முத்திரை முதலிய அனைத்து முறைத் தானங்களையும் சோதித்தார். வைத்ததுளை ஆராய்ச்சிவக்கரனைவழிபோக்கி ஏற்ற நிலையுணர்ந்தார். உணர்ந்ததற்பின் சட்சம் இடபம் காந்தாரம் மத்திமம் பஞ்சமம் தைவதம் நிஷாதம் என்னும் ஏழு சுரங்களின் படிமுறையாகிய வரிசையினை ஆரோசை (எச்சு, ஆரோகணம்), அமரோசை (தக்கு, அவரோகணம்) என்னும் ஓசைப் பாடுகளில் அமைத்தார். மாறிவரும் குறிஞ்சிப் பண்ணின்பின் முல்லைப் பண்ணைத் தோற்றினார். பாலை யாழுக்கு அமைந்த தாரம் உழை என்னும் இரண்டும் கிழமை கொள்ள இடும் தானங்களில், இளையைக் குரல்எனக்கொண்ட பட்டடைக் குரல்ஆகிய கொடிப்பாலையில் நிறுத்தினார். பண் பண்ணியல் திறம் திறத்திறம் என இசையிற் புகல் நான்கிலும், ஆயத்தம் எடுப்பு உக்கிரம் சஞ்சாரம் இடாயம் என்னும் ஐந்து துறைகளிலும் ஏற்ற முறைமைகளை விளைவித்தார். மந்தரம் (மெலிவு), மத்திமம் (சமன்), தாரம் (வலிவு) என்ற மூவகைச் சுருதிகளிலும், சுரத்தானத்துக்கு உரிய துளைகளை உரிய அளவு பெறும்படி விரல் களால் அசைத்து இயக்கினர்.''

எண்ணியநூற் பெருவண்ணம்
இடைவண்ணம் வனப்பு என்னும்
வண்ண இசை வகையெல்லாம்
மாதுரிய நாதத்தில்
நண்ணிய பாணியும் இயலும்
தூக்கும் நடைமுதற் கதியில்
பண்ணமைய எழும் ஓசை
எம்மருங்கும் பரப்பினர்.

இங்ஙனம் பல இசைநுணுக்கக் குறிப்புக்கள் அமைய வரும் பெரிய புராணப் பகுதிகள், இளங்கோவடிகளைப் போலவே சேக்கிழாரடிகளும் இசைக்கலைப் புலமையும் ஈடு பாடும் மிக்கவராக விளங்கிய செய்தியினைப் புலப்படுத்தும்.

பத்தினிப் பெண்டிர் வரலாறு :

(9) சிலப்பதிகாரம் வஞ்சினமாலை என்னும் பகுதியிற் கண்ணகியானவள், பத்

தினிப் பெண்கள் எழுவரின் வரலாறுகளைக் குறிப்பிட்டு, அத்தகைய கற்பு நலஞ் சான்ற "மட்டார் குழலார் பிறந்த பதிப் பிறந்தேன்; பட்டாங்கு யானும் ஓர் பத்தி னியே யாம்ஆகில், ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையையும், என்பட்டிமை யும் காண்குறுவீர்" எனச் சூள் உரைத்து வஞ்சினம் சாற்றுகின்றாள். அவ்விடத்தில்,

"நற்பகலே
வன்னிமரமும் மடைப்பளியும் சான்றுக
முன்நிறுத்திக் காட்டிய மொய்குழலாள்"

எனவரும் வரிகள், சிலப்பதிகார காலத் திற்குப் பின்னர்த் திருஞான சம்பந்தப் பெருமான், வைப்பூர்த்தாமன் என்னும் வணிகனின் மகள்பால் இரக்கம்கொண்டு, அரவு தீண்ட இறந்த அவள்தன் அரு மைக் காதலனைத் திருமருகல் என்னும் தலத்தில் திருப்பதிகம் பாடி உயிர் பெற் றெழச் செய்து, காத்தருளியதாகப் போத ரும் பெரிய புராண வரலாற்றினை, ஒரு புடைக் கதையொப்புமை பற்றி, ஓராற்றால் நினைவூட்டா நிற்கின்றன.

மனு நீதிச் சோழன் :

(10) இனி, ஆசிரியர் சேக்கிழாரடிகள், தமது பெரிய புராணத்துள் திருநகரச் சிறப்பின்கண், மனுநீதிச் சோழன் வர லாற்றினை மனமுருகவும், சுவை நலங்கள் பெருகவும், அழகுறப் பாடியருளி இருக் கின்றார்! இவ்வாறு அவர் பாடியிருத்தற்கு அடிப்படைக் காரணமும், சான்றும் சிலப் பதிகாரமே யாகும் என, நாம் தயங்காது துணிந்து கூறலாம்.

"புறவு நிறைபுக் கோன்,
கறவை முறைசெய்தோன்" (1)

"எள்ளறு சிறப்பின்
இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண்
தீர்த்தோன்; அன்றியும்
ஆவின் கடைமணி உகுநீர்
நெஞ்சுசுடத் தான் தன்
அரும்பெறற் புதல்வனை
ஆழியின் மடித்தோன்" (2)

புறவுநிறை புக்குப்
பொன்னுலகம் ஏத்தக்
குறைவில் உடம்பரிந்த
கொற்றவன்யார் அம்மானை?
குறைவில் உடம்பரிந்த
கொற்றவன் முன்வந்த
கறவை முறைசெய்த
காவலன்காண் அம்மானை! (3)

எனச் சிலப்பதிகாரத்துள், ஆங்காங்கு இடையிடையே வரும் சில வரிகளின் விரி வான பொருள் விளக்கமாகவே, பெரிய புராணத்துள் மனுநீதிச் சோழனின் வர லாறு, சோணாட்டமைச்சராய சேக்கிழா ரால் சிறப்புறப் பாடப் பெற்றுள்ளது. 'கறவை முறை செய்த காவலன்' ஆகிய மனுவேந்தனைப் பற்றிய மிகப் பழமையான குறிப்பு, சிலப்பதிகாரத்தின்கண் தான் முதன்முதற் காணப்படுகின்றது. எனவே, சேக்கிழாரடிகள், நெஞ்சையள்ளும் சிலப் பதிகாரத்தின் செஞ்சொற்சுவை நலங் களில் ஈடுபட்டு மகிழ்ந்ததன் பயனாகவே, மனுவேந்தனின் அரிய வரலாற்றினை, அழகிய முறையில் தமது நூலுட்சுவை துளும்பப் பாடியருளினர் எனத் துணிதல் பொருந்துவதேயாகும்.

மற்றும் சில மாட்சிகள் :

இம்மட்டோ! கோவலனும் கண்ணகியும் புணர்ந்து மகிழ்ந்தனர் என்னும் செய்தி யினை இடக்கர் அடக்கித் "தாரும் மாலையும் கையற்று மயங்க" என நுட்பமும் சுருக்க மும் அமைய இளங்கோவடிகள் நுவன் றிட்டார். அவ்வாறே திருநீலகண்டர் பரத் தைபால் அணைந்துபோந்த செய்தியினை "இளமை மீதூர இன்பத் துறையினில் எளியரானார்" எனச் சேக்கிழாரடிகள் நயத் தக்க நாகரிக நலம் தோன்றக் கூறியிருக் கும் மாட்சிமையினை என்னென்பேம்!

மதுரையிற் பாண்டிய மன்னன் உயிர் துறந்ததனையும், அவனுக்கு நேர்ந்த பழிச் சொல்லினையும் "தென்னர் கோமான் தீத் திறம்" என்றும் "செம்மையின் இகந்த சொல்" என்றும் செங்குட்டுவன் குறிப்பிட்டதாக, இளங்கோவடிகள் இயம்புகின்றார். இம் முறைமைக்கு ஏற்பவே "முன் நின்ற பாத கனும் தன் கருத்தே முற்றுவித்தான்" எனவும், "தான் நினைந்த அப்பரிசே செய்தான்" எனவும் சேக்கிழாரடிகள் தெரி விக்கின்றார். இவ்வருமைப்பாடு எண்ணுந் தோறும் நம் மனத்தை உருக்கி இன்பம் பயக்கின்றதன்றோ?

மேலும், பெண்மையழகின் இயல நலங் களைப் பிற்காலக் கவிஞர்கள் பாடும் முறை களுக்கும், இவ்விருவரும் பாடும் முறைக்குந் தான், எத்துணைப் பெரு வேறுபாடு உள் ளது! தமது உயர்ந்த தவவொழுக்க மேம் பாட்டிற்கும், மிக மேலான சான்றாண்மை நலங்களுக்கும், சற்றும் மாறுபடா வகை

யில், தூய்மையுணர்வே சிறந்து விளங்குமாறு, இளங்கோவும், சேக்கிழாரும் புனைந்து பாடக் காண்கின்றோம்! மாதவியானவள் தன்னை அடிமுதல் முடிகாறும் அழகுபடுத்தி ஒப்பனை செய்து கொண்ட வகைகளை யெல்லாம் வகுத்துக் கூறும் கடலாடு காதைப் பகுதியும் (75—110), திருஞான சம்பந்தரால் உயிர் பெற்ற திருமயிலைப் பூம்பாவை அழகினுக்கு அணியாய் நின்ற தன்மைகளை விதந்து புகழ்ந்து கூறும் (1095—1109) பெரிய புராணப் பாடல்களும், இவ்வுண்மையைச் செவ்விதின் வற்புறுத்துவனவாகும்.

முடிவுரை :

இளங்கோவடிகளுக்கும், சேக்கிழாரடிகளுக்கும் இடையே, இன்னோரனைய பல கருத்தொப்புமைகளும், பண்பொப்புமைகளும் காணப்படுதலை, ஒப்புமையாய்வு முறையினாற் கண்டுணர்ந்து, அவ்விருவர் தம் நூல்களையும் பல்காற் பயின்றோதிச் செவ்விதிற் சுவைத்து மகிழ்ந்து, நாம் அனைவரும் தமிழ்ச் சைவ நலங்களெல்லாம் பெற்று, நன்கினிது வாழ்ந்து உய்ய முயலுவோமாக!

[அண்மையில் மறைந்த அருந்தமிழ் ஆர்வலர் திரு. வி.கே.சி. நடராசன், I.A.S. அவர்கள் நிறுவிய "தமிழ் வட்டம்" சார்பில், திரு. டி. எஸ். இராமலிங்கம் பிள்ளை M.A.B.L., அவர்களின் தலைமையில், நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது.
(9—11—68) —ஆசிரியர்.]

வேண்டுகோள்

(திருப்பாவை - திருவெம்பாவை மத்தியக்குழு)

நமது நாட்டில் ஆஸ்திக மதத்திற்கு அஸ்திவாரமாகவுள்ளவை, நாயன்மார்கள் முதலியோருடைய பன்னிரு திருமுறைகளும், ஆழ்வார்களுடைய திவ்வியப்பிரபந்தங்களும், இவைகளுக்கு மூலாதாரமாக இவைகளால் போற்றப்படும் நான்மறை ஆறு அங்கங்களுமேயாகும். வேதங்களும், திவ்வியப்ரபந்தங்களும், திருமுறைகளும் தொன்றுதொட்டு நம் ஆலயங்களில் பாராயணம் செய்யப்பட்டு வருகின்றன. பிரபந்தங்களின் சாரமே திருப்பாவை, திருமுறைகளின் சாரமே திருவெம்பாவை என்று, பெரியோர் கூறுவர்.

அரன், நாரணன் என்னும் இருபேருடையதாய், மேனி ஒன்றாய் மறை எனும் நூலால் உரைக்கப்படுவதாயுள்ள பரம்பொருளை, அம்மறையெனும் வேதவிதிப்படி வழிபடும் சிவபக்தர்களும், விஷ்ணு பக்தர்களும் முறையே திருவெம்பாவையையும், திருப்பாவையையும் கொண்டு மார்கழித் திங்களில் தொன்றுதொட்டு வழிபட்டு வருகிறார்கள். சிவ பக்தர்களும், விஷ்ணு பக்தர்களும் ஒருங்கே சேர்ந்து ஓர் அரங்கில் தெய்வ பக்தியையும், அதைச் சார்ந்த குணங்களையும் குன்றாமல் வளர்க்க வேண்டியது இக்காலத்தில் இன்றியமையாதது. அதிலும் முக்கியமாகக் குழந்தைகளின் மனத்தில் இத்தெய்வீக எண்ணங்களை ஏற்படுத்த வேண்டியது நம் பொறுப்பு. இந்நோக்கத்துடன் ஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளின் ஆசியுடன், சென்ற பத்தொன்பது வருஷங்களாக இத் திருப்பாவை - திருவெம்பாவைக் குழு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

சென்னை அறநிலையப் பாதுகாப்புத் துறையினரின் ஒத்துழைப்புடன் தேவஸ்தான டிரஸ்டிகள், அதிகாரிகள், பாவைப் புத்தகங்கள் லட்சக் கணக்கில் அச்சிட்டுப் பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கு வழங்கவும், கோயில்களில் ஆங்காங்குச் சிறந்த முறையில் மகாநாடுகள் நடத்தவும், பரிசுகள் வழங்கவும் ஏற்பாடுகள் செய்து வரப்பட்டு மேன்மேலும் இப்பாவை இயக்கம் வளர்ந்து வருகிறது.

வரப்போகும் மார்கழி மாதத்திற்குள், ஆரம்பப்பள்ளிகளில் பயிலும் 5—ஆம் வகுப்புக் குழந்தைகளுக்குத் திருப்பாவை—திருவெம்பாவைப் பாசுரப் புத்தகங்களை வழங்கி, மார்கழி மாதத்தில் அருணோதய காலத்தில், சிறுவர் சிறுமியர் அவற்றைப் பாடிக்கொண்டு வீதிவலம்வரச்செய்ய, ஆங்காங்குள்ள ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களும், திருக்கோயில்களின் அறங்காவலர்களும், நிர்வாக அதிகாரிகளும், ஊக்கம் எடுத்துக்கொள்ள வேண்டுகிறோம். பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான பாவைப் புத்தகங்கள் பெற விரும்புவோர், பின்வரும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

"திருப்பாவை திருவெம்பாவை மத்தியக்குழு"
19, பெரிய கடைத்தெரு, மாயூரம்.

சிக்கல், சிங்காரவேலர்.

திருமணியின் கூறும் குருமணி

முன்னுரை :

இற்றைக்கு எழுநூறு ஆண்டுகட்கு முன்னர், அதாவது கலியுகம் 4370, சாலி வாகன சகம் 1191, கி. பி. 1268, விபவ ஆண்டு, புரட்டாசித் திங்கள், திருவோண நன்னாளில், காஞ்சிபுரத்தில் திருத்தண்கா விளக்கொளி எம்பெருமான் சந்நிதியைச் சேர்ந்த தூப்புல் என்னும் புனிதத் தலத்தில், அனந்த சோமயாஜி என்னும் அந்தணருக்கும், அவர்தம் கற்பிற்சிறந்த மனைவியாகிய தோதாத்திரி அம்மைக்கும், திருவேங்கடமுடையானுடைய திருமணியின் கூறாக, வேதாந்த தேசிகர் என்னும் ஸ்ரீமந் நிகமாந்த மகா தேசிகர் தோன்றியருளினார்.

திருமணி :

நெடுங்காலமாக, மகப்பேறு வாய்க்காமல் இருந்து, திருவேங்கட மலையிற் கோயில் கொண்டுள்ள ஸ்ரீவேங்கடேசப் பெருமாளைப் பெரிதும் வழிபட்டு, அவனருளால் தாம் கண்ட கனவின்படி, திருவேங்கட மலைக் கோயிலின் கண்டை என்னும் திருமணியின் கூறாக, அனந்த சோமயாஜியும், தோதாத்திரி அம்மையும், வேதாந்த தேசிகரை மகவாகப் பெற்றெடுத்தனர்.

திருவேங்கடமுடையானுடைய திருமணியே, ஸ்ரீவேதாந்த தேசிகராகத் தோன்றினதாகப் பல பிரமாணங்களினால் விளங்குகின்றது. சுவாமி தேசிகன் அவர்களே, தமது சங்கல்ப சூர்யோதயம் என்னும் நாடக நூலில், இவ்வுண்மையினைக் குறிப்பிட்டுள்ளார். இவர் தம் திருக்குமாரர் ஆகிய வரதாசார்யர் என்பவர் பணித்தருளியுள்ள தேசிக மங்களம் என்னும் துதி நூலில் வரும் சுலோகம் ஒன்றும், இச்செய்தியைச் சுட்டுகின்றது. ''திருமலைமால் திருமணியாய்ச் சிறக்க வந்தேன்'' எனவரும் திருநாமப் பாவின் பகுதியும், இங்குக் கருதற் பாலது.

திருவேங்கடவன் திருவருளால், தாம் பெற்றெடுத்த திருமைந்தனுக்குப் பெற்றோர்கள், வேங்கடநாதன் எனப் பெயரிட்டு வளர்த்து வந்தனர். இவருக்கு வேதாந்தாசாரியர், வேதாந்த தேசிகர், நிகமாந்த மகாதேசிகர், கவிதார்க்கிக கேசரி, சர்வதந்திரசுவதந்திரர், சமஸ்யா சகஸ்ரீ முதலிய பல விருதுப் பெயர்கள் உண்டு. ''ஓணத்தான் உலகாளும் என்பர்களே'' என்றபடி, திருவோணத்தில் அவதரித்த சுவாமி தேசிகன், 'விளையும் பயிர் முளையில் தெரியும்' என்னும் பழமொழிக்கு ஏற்பத் தமது ஞானத் திறனால் உலகை யாளவல்ல, உணர்வு நலம் மிக்குடையவராக விளங்கினார்.

வேங்கடநாதர்க்கு உரிய பருவத்தில் உபநயனம் முதலிய சடங்குகள் யாவும், செவ்விதிற் செய்யப் பெற்றன. தமது மாதுலரான கிடாம்பி அப்புள்ளார் என்பவர் பால், இவர் கலைகள் யாவும் கற்கத் தொடங்கினார். இளமையில் பதினாறு ஆண்டுகளுக்கு உள்ளாகவே, உபய வேதாந்த ரகசியார்த்த சம்பிரதாய நூல்களையெல்லாம், இவர் முறையே கற்றுத் துறைபோயினார். மிக இளம் பருவத்திலேயே இவருக்கு அமைந்திருந்த அறிவாற்றலையும், நினைவுத் திறனையும் வியந்து, நடாதூர் அம்மாள் (வரதாசாரியார்) என்னும் வைணவப் பெரியார், வேங்கடநாதரைப் பெரிதும் உவந்து, ''இராமானுசரைப் போலவே இவரும் நமது சமயத்தை வளர்த்துப் பரப்பி நிறுவும் நற்பெரும் சான்றோராக விளங்கக் கடவர்'' என வாழ்த்தியருளினார்.

கருடன் காட்சியும், அயக்கிரீவர் அருளும் :

ஆசிரியரும் மாதுலரும் ஆன கிடாம்பி இராமானுசர் என்னும் அப்புள்ளார், இவருக்கு இலக்கணம், இலக்கியம், தருக்கம், மீமாம்சம், சுருதி, ஸ்மிருதி, இதிகாசம்,

புராணம் முதலிய பல்வேறு கலை நூல்களையும், ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம், பகவத் விஷயம் முதலிய வைணவ சமயப் பெரு நூல்களையும், புரையறப் போதித்து வந்தார். அவரால் இவருக்குக் கருட மந்திரமும் உபதேசிக்கப் பெற்றது. அதனைப் பலகாலும் செபித்து வழிபட்டு வந்த இவருக்கு, கருடாழ்வாரின் காட்சியும் அருட்பேறும் கிடைத்தன. கருடாழ்வார் இவருக்கு அயக்கிரீவ மந்திரத்தை உபதேசித்தார்.

தல யாத்திரையாகத் திருவகீந்திரபுரம் சென்ற வேங்கடநாதர், அங்குள்ள தெய்வ நாயகனின் கோயிலில், அழகிய சிங்கரின் சந்நிதியின் திருமுன்பிருந்து, அயக்கிரீவ மந்திரத்தை நெடுநாள் பக்தியுடன் செபித்து வழிபட்டு வந்தார். அதன் பயனாக, வெள்ளைப் பரிமுகர் ஆகிய அயக்கிரீவப் பெருமான், வேங்கடநாதர்க்குக் காட்சி தந்தருளி, அளப்பரும் பெரும் புலமையையும், அமுத மயமான வாக்கு வல்லமையையும், அளித்து மறைந்தருளினர்.

சுவாமி தேசிகன் தமக்கு முதலிற் காட்சியளித்த, கருடாழ்வார் துதியாகக் கருட பஞ்சாசத் என்னும் நூலையும், தாம் அயக்கிரீவ தரிசனம் பெற்ற திருவகீந்திரபுரத்தில் உள்ள தெய்வ நாயகனின் துதியாக, தேவநாயக பஞ்சாசத் என்னும் நூலையும் அருளிச் செய்துள்ளார்.

கருட பஞ்சாசத் :

கருட பஞ்சாசத் என்னும் நூலில், பின்வருமாறு வேங்கடநாதர் கருடாழ்வானைத் துதிக்கின்றார். ''பறவை அரசனின் இடத் தோளில் ஆதிசேடன் திருவாபரணமாகத் திகழ்கின்றான். அதற்கு அருகில் வாசுகி பூணுலாக விளங்குகின்றது. அதன் அடியில் அரைஞாணாகத் தட்சகன் உள்ளான். கழுத்திலிருந்து தொங்கும் மாலையாகக் கார்க்கோடகன் காட்சியளிக்கின்றான். பத்மன், மகாபத்மன் என்னும் நாகங்கள், வலக்காதிலும், இடக்காதிலும் குண்டலங்களாகத் திகழ்கின்றனர். சங்கபாலன் திருமுடியில் தங்கியுள்ளான். குளிகன் வலத் தோளில் ஊர்கின்றான். இங்ஙனம், நாகங்களையே நல்லணிகளாகக் கொண்டுள்ள பறவை அரசன், எம்மைப் பாதுகாக்கட்டும்'' என்பன போன்ற, இனிய ஐம்பது சுலோகங்கள் அத்துதி நூலில் அழகுற அமைந்துள்ளன.

''மானச சரோவரம் என்னும் தடாகத்தில் வாழும் அன்னம்போல, வழிபடுவார் மனத்தில் எழுந்தருளி வீற்றிருப்பவர், அயக்கிரீவ மூர்த்தி. அப்பெருமானை எவன் தன் உள்ளத்தில் இடைவிடாது நினைத்துத் தியானிக்கின்றானோ, அவனுக்குச் சொற்கள் யாவும் தங்கு தடையின்றிப் போட்டியிட்டுக் கொண்டு, பணி செய்யத் திரண்டோடி வருகின்றன. அயக்கிரீவரின் திருப்பெயரை மும்முறை கூறும் அன்பனின் நாவில் இருந்து, கங்கை வெள்ளம்போலக் கவிதை வெள்ளம் பெருகும்'' என்றெல்லாம், இவர் அயக்கிரீவ மூர்த்தியின் அருட்பெருமைகளை விளக்கியுள்ளார்.

தேவநாயக பஞ்சாசத் :

அடியார்க்கு மெய்யனை தேவநாயகனைக் குறித்து, இவர் பின்வரும் கருத்துக்கள் அமையத் தேவநாயக பஞ்சாசத் என்னும் நூலைப் பாடியுள்ளார். ''தேவாதீசனே! தேவரீர் தரித்துள்ள மணிகள் பதித்த திருமுடி, ஆயிரங்கோடி சூரியர்களின் ஒளியெல்லாம் ஒன்று சேர்ந்தது போலப் பிரகாசித்து, என் உள்ளத்தில் உள்ள அறியாமை இருளை, அகற்றிக் கொண்டிருக்கின்றது. அடியவர்க்கு மெய்யனே! நின் திருமுகம் சந்திரனைப் போன்றுள்ளது; நினது கிரீடம் சூரியனைப் போன்று விளங்குகின்றது. நினது முகமாகிய தாமரையைச் சூழ்ந்து திரண்ட, வண்டொழுங்கு போன்ற நின் தலைமுடி, இருள்மிக்க இரவைப் போன்றுள்ளது. ஒரே சமயத்தில் நிலவும் — வெய்யிலும் — இரவும்—ஆகியவற்றை: நீ தரித்திருப்பது, உன்னுடைய எல்லையற்ற பேராற்றலை விளக்குகின்றது. தேவாதி ராசனே! நினக்கு அருகில் வாழ்தலும், நின்பால் தூய பக்தி செலுத்துதலும், நினது அடியார்களின் கூட்டுறவும், என்னும் இவை எனக்குக் கிடைக்குமாறு நீ அருள் செய்து விடுவாயானால்,எனக்கு இந்தஇருள்தருமாஞாலமே வைகுந்தம் என்னும் பேரின்ப வீடாகும்'' என்றெல்லாம், இவர் 'தேவநாயக பஞ்சாசத்' என்னும் நூலில் அழகுறக் குறிப்பிடுகின்றார்.

வரதராச பஞ்சாசத் :

திருவகீந்திர புரத்திலிருந்து காஞ்சிபுரம் திரும்பி, அங்கேயே பலகாலம் வாழ்ந்து

வந்த வேங்கடநாதர், அங்குள்ள வரத ராசப் பெருமானைக் குறித்து, வரதராச பஞ்சாசத் என்னும் சிறந்த துதிநூலைப் பாடி யுள்ளார்.

''அத்திகிரி மத்தகத்தின் மேலே எழுந் தருளியுள்ள அருளாளப் பெருமானே! அயனுடைய அயமேத வேள்வியின் வேதி யில் நீலநிற நெருப்பு எழுந்தாற்போல, பிராட்டியாகிய பூங்கொடி படரும் கற்பக மரம்போலத் தோன்றியருளும் பெரு மானே! நுமது திருவருள் எமக்கு நன்மை செய்யட்டும்.''

வரதராசனே! உன்னுல் வந்த வாக்கு வன்மையைக் கொண்டு, உன் உகப்புக் காக, இந்தத் துதியை நான் செய்தேன் என்ருல், அதில் ஏதும் வியப்பில்லை. கூண்டுக் கிளியின் மழலைப் பேச்சு, கற் பித்து வைத்த தலைவனின் மனத்தையே கவர்ந்து களிப்பிக்கின்ற தன்ருே?''

''கிரீசனே! உன்னுடைய நித்தியவாசத் தானமான வைகுண்டமும், அழகிய திருப் பாற்கடலும் உள்ளபோது, இந்த இழிந்த உடலுக்குள், எனது உள்ளமாகிய சிறிய குகை உனக்கு உகந்த இடமாக எவ்வாறு ஆயிற்று?''

''வரதராசப் பெருமானே! முன்னொரு காலத்தில் மலையினுல் அணைகட்டி, மாகட லைக் கடந்து, இராவணனின் தலைகள் பத் தையும் ஒரு கொத்தென உதிர்த்தீர். இப் பொழுது அந்தச் சேதுவைத் தரிசனம் செய்பவர் அனைவரும், பசி, தாகம், சோகம், மோகம், மூப்பு, இறப்பு என்னும் ஆறு வகைத் துக்க அலைகள் நிறைந்த பிறவிக் கடலைத் தாண்டுகின்றனர். ஞானேந் திரியம், கன்மேந்திரியம் என்னும், பத்து இந்திரியங்களாகிய தலைகளை உடைய, மனமாகிய இராவணனை வெல்லுகின்ருர் கள்.''

''கரிகிரிமேற் கமலையுடன் ஆட்சிபுரியும் அரசே! அவதார காலங்களில் பிறரோடு புரையறக் கலந்து பழகும் தன்மையினுல், நீ உன் பெருங் குணங்களை மறைத்துக் கொண்டாலும், உன் அடியவர்கள் அவற் றைக் கண்டு கொள்ளுகின்றனர். மேகத் தினுல் மறைக்கப்பட்டாலும், சூரியனின் கதிர்கள் புலப்படுகின்றன அன்ருே!''

''அத்திகிரி அருளாளா! துயரமாகிய நஞ்சு கலந்த நுனியை உடையதும், பிர மன் முதல் சிறிய எறும்பு வரையில் எதிர்ப் பார் இல்லாததும், குறி தவருததும், என் முன்னைத் தீவினையின் விளைவாவதும் ஆன, உன் கோபமாகிய அம்புக்கு எதிர் அம்பு, என் கைகூப்பு ஒன்றே.''

''நாகமலை நாதனே! நீ உவப்புறுவை யாயின், யான் உன் அருகில் இருக்கப் பெறுவேனுயின், உன்பால் எனக்கு மாளாத தூய காதல் உண்டாகுமாயின், அனைத்திற்கும் மேலாக உன் அடியார்களை யான் நட்பாக அடையப் பெறுவேனுயின், எனக்கு இந்த உலகியல் வாழ்வே, மிக மேலான வீடுபேற்றின்பமாகும்.''

தயாசதகம் :

இத்தகைய பல சிறந்த கருத்துக்கள், வேதாந்த தேசிகர் இயற்றிய வரதராச பஞ் சாசத் என்னும் நூலில் காணப்படுகின்றன. இவ்வாறே, அவர் திருவேங்கட மலையிற் கோயில் கொண்டுள்ள வேங்கடேசப் பெருமாளைச் சென்று தரிசித்து வணங்கிய போது, அப்பெருமாளின் தயை அல்லது அருளின் சிறப்பை வியந்து, தயாசதகம் என்னும் சிறந்த துதி நூல் ஒன்றை இயற்றி அருளியுள்ளார். இறைவனின் அருள் ஆகிய தயை என்னும் பண்பு எங்ஙனமெல்லாம் புகழ்ந்து கொண்டா டத் தக்கது என்பதனை, அந்நூல் நமக்கு நன்கினிது அறிவிக்கின்றது.

''எம்பெருமானுக்குத் தனிப்பட்ட பெரு மைகள் இரண்டு. ஒன்று உலகத்தைப் படைத்துக் காத்து அழிப்பது; மற்ருென்று உலகுயிர்களைக் கரையேற்றிப் பரம பதத் தில் அவர்களுக்கு இடம் அளிப்பது. வேதங்கள் மிகவும் முதன்மையாக இவ் விரண்டு செயல்களையே சிறந்தெடுத்துப் போற்றுகின்றன. இவ்விரண்டு செயல் களையும், தயையின் தொடர்பினுல்தான் இறைவன் செய்தருள்கின்ருன்.''

''சிறந்தகுணங்களெல்லாம்செறிந்திருக் கை; குற்றம் எதுவும் இல்லாமை; ஆகிய இவ்விரண்டு இயல்புகள் உடையவன் ஆதல் பற்றியே, இறைவன் இறைவன் எனப்படுகின்ருன். இவ்விரண்டு இயல்பு களும், தயை என்னும் சால்புடைமையி னுலேயே, இறைவனின்பால் அமைந்து சிறப்பெய்துகின்றன.''

''ஞானம், பலம், ஐசுவரியம், வீரியம், சக்தி, தேஜஸ் என்னும் குணங்கள் ஆறும், தயை என்ற குணம் இல்லையாயின் சிறப்

புடையனவாக மாட்டா. தயை இல்லை யாயின், இவைகள் ஆறும் நவைகள் ஆக வும் முடியும்.''

''ஞானம், சக்தி முதலிய தனது குணங்க ளால், நம்முடைய தீவினைகளை உணர்ந்து, அவற்றை நம்மிடமிருந்து போக்கவும், நமக்கு நலம் செய்யவும், வழி தெரியாமல் கலக்கமுறும் இறைவனுக்குத் தயை என்ற பண்பு ஒன்றுதான் ஆறுதல் அளிக்கவல்ல தாக உள்ளது. தயா குணம் என்ப தொன்று மட்டும் இல்லாமற் போயின், அவனது ஏனைய குணங்களால் நமக்கும் பயனில்லை; எம்பெருமானுக்கும்பயனில்லை.''

''எவ்வளவு குற்றம் செய்தவர்களாக இருந்தாலும், எம்பெருமானிடத்தில் அடைக்கலம் புகுந்துவிட்டால், அக்குற்றங் களால் அவனுக்கு ஏற்படும் கோபம் முழு வதும் நம்மிடமிருந்து மாற்றப்பட்டு, நமக் குப் பகைப் பொருள்களான நமது பாபங் களின்மேற் செலுத்தப்படுகிறது. பயிரில் தோன்றும் களையைப் பறித்தெறிவது போல, இறைவனின் கோபத்தைத் தனக் குரிய பணியாளனாகக் கொண்டு, நமது பாபங்களைக் களைந்து தயாதேவியே நம் மைக் காப்பாற்றுகின்றாள். அனைவரிடமும் தனது தயவைக் காட்டியருளும் இறைவன் தனது அடியவர்களாகிய நம்மைப் பற்றி யுள்ள பாவக் கூட்டங்களுக்கு மட்டில், சிறிதும் தயவு காட்டாமல் அடியோடு அழித்தொழிக்கின்றான்'' என்பன போன்ற பல சுவைமிக்க சிறந்த கருத்துக்கள், தயாசதகம் என்னும் நூலிற் செறிந்து காணப்படுகின்றன.

இரகசியத் திரய சாரம் :

ஸ்ரீ வேதாந்த தேசிகர் அருளிச் செய்த நூற்றுக்கு மேற்பட்ட நூல்களில், 'இரகசி யத் திரய சாரம்' என்பது மிகவும் சிறப் பாகக் குறிப்பிடற்பாலது. அதன்கண் அவர் வைணவப் பெருஞ்சான்றோர்கள் பலரின் திருவுள்ளக் கருத்துக்களையும் ஒருங்கே திரட்டித் தொகுத்து, அழகுற அருளிச் செய்துள்ளார். ''குருவின் தொடர்பு இல்லாமற் போனால் ஒருவன் குருடனாகத்தான் இருப்பான். ஒருவன் எத்துணைத் தீவினையாளனாயினும், பெரி யோர்களின் தொடர்பும் அருளும் பெற் றால், இறைவனைப் புகலடைந்து இன் புறும் பேறுபெறுவான். இறைவன் எல் லாக் குணநலங்களும் நிரம்பியவன். உயிர்கள் ஆகிய நாம், அவனுக்கு அடிமை யும் உடைமையும் ஆவோம். பிற பொருள்களெல்லாம் அறிவற்றவை என் னும் உண்மையைத் தெரிந்து கொண் டால், நமக்கு ஏற்படும் பலவகை மயக்கங் களும் ஒழிந்துவிடும்.''

''பெருமானுக்குத்தொண்டு செய்வதுடன் பாகவதர்களையும் வழிபட்டால்தான், நமக்கு முழுப் பேறு வாய்க்கும். வீடுபேறு அடைய விரும்பி இறைவனைச் சரணாகதி அடைந்தவர்கள், பெரியோர்களும் கோயில் குளங்களும் உள்ள புனிதத் தலத்திலேயே, வசித்து வருதல் வேண்டும். நாம் எண்ணில்லாத பிறவிகளில் செய்து வந்துள்ள தீவினைகள் குறித்துப் பெரிதும் மனவருத்தமுறும் திருமாலை, மகிழ்ச்சியுறச் செய்வது, நாம் அவன்பால் சரணாகதி அடைவதே ஆகும். பாவங்களிலிருந்து விடுபட்டு, உலக மக்கள் என்னை அடைந்து இன்பம் எய்துவதற்காகச் சொல்லப் பெற் றிருக்கும் பக்தி யோகம் முதலியவற்றைச் செய்ய முடியாதவர்கள், என்னைச் சரணம் அடைவார்களாக! நான் அவர்களின் பாபங்களையெல்லாம் போக்கிப் பாதுகாத் தருள்கின்றேன். கவலையுறுதல் வேண்டா என்று, பெருமாள் நமக்கு 'சர்வதர்மாந் என்னும் மந்திரத்தால் அருளிச் செய்துள் ளார்.''

''சிஷ்யன் என்பவன் பரிபூரணமான குரு பத்தி உள்ளவனாகவும், நல்லொழுக்கம் உடையவனாகவும், நல்லகதியை அடைவ தற்காக நான் ஆசாரியனை அடைகின் றேன், என்ற எண்ணத்துடன், அகப்பற்று புறப்பற்றுக்கள் அற்றவனாகவும், இருக்க வேண்டும்.''

சங்கற்ப சூரியோதயம் :

பகவத் அபசாரத்தினும், பாகவத அப சாரம் மிகவும் கொடியது. பாகவத அப சாரப் பட்டால், இறைவனின் திருவுள்ளம் சீறும். இறைவன் சீறினால் நமக்கு வீடு பேறு கைகூடாது. எல்லாக் குற்றங்களி லும் மிகக்கொடிய பெருங்குற்றம், பாகவத அபசாரமேயாகும் என்பதனை, சங்கற்ப சூரி யோதயம் என்னும் நாடக நூலில், சுவாமி தேசிகன் விளக்கியுள்ள திறம், சுவைமிக வாய்ந்தது.

"நூறு யோசனை நீளமுடைய மீன் 'திமி' எனப்படும். அதைவிடப் பெரியதாய், அதனை விழுங்கவல்ல மீன் 'திமிங்கிலம்' எனப்படும். அந்தத் திமிங்கிலத்தினையும் விழுங்கவல்லதாய் அதனைவிட ஆயிரம் யோசனை நீளமுடைய மீன், 'திமிங்கிலகிலம்' எனப்பெறும். அதனினும் பெரியதாய், அதனையும்விழுங்கவல்ல ஆற்றலுடையதற்குத் திமிங்கிலகிலகிலம் என்று பெயர். இப்படியே மீனின் பெயர்கள் நீண்டுகொண்டே செல்லும். இவ்வாறே நல்வினை தீவினைகளும் தம்முள் ஒன்றையொன்று விழுங்கி மேன் மேல் நீண்டு வளர்ந்து செல்லும் என நூல்கள் கூறுகின்றன. அங்ஙனம்வளர்ந்து விரிந்து நீண்டு செல்லும் மிகப்பெரிய பாவங்கள் அனைத்தையும் விழுங்கவல்ல பெரும்பாவம் பாகவத அபசாரம்! அது பகவானுக்குச் சீற்றத்தைவிளைவித்து, மிகச் சிறந்தபிரபத்திநெறியையும், நமக்குப் பயன் தர வொட்டாதபடி தடுத்துவிடும். பாகவத அபசாரம் செய்யலாகாது" என்னும் கருத்தை, இங்ஙனம் சுவைமிக விரித்து வேதாந்ததேசிகர் விளக்கியிருக்கும் திறம், பெரிதும் மகிழ்ந்து போற்றற்பாலது.

அன்பர் பன்னிருவர் :

இங்ஙனம், திருவேங்கடவனது கோயிற் றிருமணியின் கூறாகத் தோன்றியருளிய குருமணியாகிய ஸ்ரீ வேதாந்த தேசிகர், சுவைமிக வெளியிட்டுள்ள அரும்பெருங் கருத்துக்களும் அழகிய நூல்களும், மிகப் பலவாகும்.

"சீர்ஒன்று தூப்புல் திருவேங் கடம்உடையான்
பார்ஒன்றச் சொன்ன பழமொழியுள்—ஓர்ஒன்று
தானே அமையாதோ? தாரணியில் வாழ்வார்க்கு
வான்ஏறப் போம்அளவும் வாழ்வு"

எனப் பிள்ளைலோகாசார்யர், ஸ்ரீ தேசிகரது உபதேச மொழிகளின் சிறப்பினை உளமுவந்து போற்றியுள்ளார். குமார வரதாசார்யர், பிரம்ம தந்த்ர சுவதந்த்ர ஜீயர், வெண்ணெய்க் கூத்த ஜீயர், பிரபாகர ஜீயர், குஞ்சப்பூர் இராமானுஜாசார்யர், கந்தாடை எம்பார், திருமலை ஸ்ரீநிவாசாசார்யர், திருமலை நல்லான், தீர்த்தப் பிள்ளை, கிடாம்பிப் பிள்ளை, கோமாண்டூர்ப் பிள்ளை, தூப்புல் அப்பை ஆகிய பெருமக்கள் பன்னிருவர், சுவாமி தேசிகனின் திருவடிகளில் அன்புடன் ஈடுபட்டுச் சிறப்புற்றனர்.

முடிவுரை :

இத்தகைய பெருஞ்சிறப்பு மிக்க, "சந்த மிகு தமிழ் மறையோன்" ஆகிய தூப்புற் குருமணியையும், அவர் அருளிச் செய்து போந்துள்ள அரும்பெறல் நூல்களையும், நம்மனோர் அனைவரும் அன்புடன் போற்றிப் பயன்கொண்டு, நலம்பெற்று உய்யமுயலுவோமாக!

— ஆசிரியர்.

வாழிஅணி தூப்புல் வரும்நிகமாந் தாசிரியன்!
வாழிஅவன் பாதார விந்தமலர்!—வாழி அவன்
கோதிலாத் தாள்மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்
தீதிலா நல்லோர் திரள்!

(சுவாமி தேசிகன் துதிகள்)

வித்தகன் வேதியன் வேதாந்த தேசிகன் எங்கள் தூப்புல்
மெய்த்தவன் உத்தமன் வேங்கட நாதன் வியன்கலைகள்
மொய்த்திடு நாவின் முழக்கொடு வாதியர் மூலம்அறக்
கய்த்தவன் என்றுரைத்தேன்; கண்டிலேன் என் கடுவினையே!

காவலர் எங்கள் கிடாம்பிக் குலபதி அப்புளார்தம்
தேமலர்ச் சேவடி சேர்ந்து பணிந்து,அவர் தம்அருளால்
நாவல ருந்தென் வடமொழி நற்பொருள் பெற்றநம்பி!
காவல! தூப்புற் குலத்தரசே! எம்மைக் காத்தருளே!

அருள்தரும் ஆரண தேசிகனே! எங்கள் தூப்புல் தலைவ!
வரு கவி தார்க்கிக சிங்கமே! வாதியர் வாழ்வறுத்தாய்!
இருகையும் கூப்பி உரைக்கும்இவ் விண்ணப்பம் ஏற்றருளி
உருவ எனக்கு அருளாய்,எண்ணும் உள்ளம்உன் தொண்டரையே!

—ஸ்ரீ நயினாராசார்யர், பிள்ளை அந்தாதி.

அபிராமி அந்தாதி

(மூலமும் உரையும்)

மங்கலை, செங்கல சம்முலை யாள், மலை யாள், வருணச்
சங்குஅலை செங்கைச் சகல கலாமயில், தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை ஆளுடையாள்,
பிங்கலை, நீலி, செய் யாள், வெளி யாள், பசும் பெண் கொடியே.

(பொழிப்புரை) மங்கல வடிவினள் ஆகிய அபிராமியம்மை, சிவந்த குடம் போன்ற தனங்களை உடையவள்; மலையரசனுக்கு மகளாகத் தோன்றியவள்; நிறம்பெற்ற அழகிய சங்கால் ஆகிய வளையல்கள் அசைகின்ற சிவந்த கைகளையுடையவள்; எல்லாக் கலைகளுக்கும் தலைவி; மயில் போன்றவள்; தாவிப் பாய்கின்ற கங்கையாற்றினது, உயர்ந்தோங்கி வீசுகின்ற அலைகள் அடங்கித் தங்குகின்ற, முறுக்குண்ட சடையை யுடைய சிவபிரானது, இடப் பக்கத்தைத் தனக்கே உரியதாக ஆட்கொண்டவள்; பொன்மை கருமை செம்மை வெண்மை பசுமை என்னும் ஐந்து நிறங்களும் உடைய பெண்கொடியாக அவள் விளங்குகின்றாள்.

(குறிப்புரை) மங்கலை - மங்கல வடிவினள்; "விண்ணோர் அமுதுண்டும் சாவ ஒருவரும் உண்ணாத நஞ்சுண்டும் இருந்து அருள் செய்யும்" பெருமானைக் கணவனாகப் பெற்றவள் ஆதலின், என்றும் சுமங்கலியாக விளங்குபவள். கலசம் - குடம். வருணம் - நிறம். அடியார்களுக்கு வேண்டுவன எல்லாம் உடனுக்குடனே அளித்தலாற் சிவந்த கை ஆதலின் 'செங்கை' என்றார். "நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த மறைந்திருந்தாய்" எனச் சிவபிரான் ஐந்து நிறங்கள் உடையவனாகக் கூறப்படுதல் போல, இங்கு அம்பிகையையும் ஐந்து நிறங்கள் உடையவளாகக் குறிப்பிட்டார். பிங்கலை - பொன்மை நிறம் உடையவள்; காமாட்சி எனினுமாம். நீலி - நீலநிறம் உடைய காளி, (துர்க்கை). செய்யாள் - செம்மை நிறம் உடைய திருமகள்; (லலிதாம்பிகை). வெளியாள் – வெண்மை நிறம் உடையவள்; 'வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு, வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும்' கலைமகள். பசும் பெண் கொடி - பசுமை நிறமுடைய மீனாட்சி; உமாதேவி.

இனி, பிங்கலை - காகினி, நீலி, சாகினி; செய்யாள் - டாகினி, லாகினி; வெளியாள் - ஆகினி; பசும்பெண்கொடி - ராகினி எனவும் கூறுவர். கருதுவார் கருதும் வடிவமாய்ப் போந்து கருணைபுரியும் அம்பிகையின் சிறப்பை வியந்தபடி. (21)

கொடியே, இளவஞ்சிக் கொம்பே, எனக்குவம் பேபழுத்த
படியே, மறையின் பரிமள மே, பனி மால்இமயப்
பிடியே, பிரமன் முதலாய தேவரைப் பெற்றஅம்மே,
அடியேன் இறந்திங் கினிப்பிற வாமல்வந் தாண்டுகொள்ளே.

(பொழிப்புரை) இளைய வஞ்சிக்கொடி போன்றவளே! அழகிய பூங்கொம்பை ஒத்தவளே! எனக்குக் காலம் அல்லாத காலத்திலே பழுத்த திருவுருவமே! வேதங்கள் ஆகிய

மலரினின்று பரவுகின்ற நறுமணமாகத் திகழ்பவளே! பனிவடிவமாகிய பெரிய இமயமலை யின்கண் உலாவுகின்ற பெண்யானை போன்றவளே! பிரமன் முதலிய தேவர்களை யெல் லாம் புதல்வர்களாகப் பெற்றெடுத்த அன்னையே! நின் திருவடியைப் புகலாக அடைந்த எளியேன் இவ்வுலகத்தில் இறந்து, பின்னர் மீட்டும் பிறவாதபடி, என்பால் எழுந்தருளிப் போந்து, ஆட்கொண்டு காத்தருள்வாயாக!

(குறிப்புரை) அம்பிகையினது திருவுருவச் சிறப்பின் மென்மையும் இளமையும் அழகும் விளங்கக் 'கொடியே', இளவஞ்சிக் கொம்பே' என்றார். தமக்கு ஒரு தகுதியும் இல்லாதிருந் தும், "வாவா என்று என்னைப் பூதலத்தே வலித்தாண்டு கொண்டான்" என்றபடி, அம்பிகை தானே தனது பெருங் கருணைத் திறனால் வலித்து ஆண்டுகொண்ட தன்மையை வியந்து "எனக்கு வம்பே பழுத்த படியே" என்று புகழ்ந்தார். மலரினின்று வெளிப்பட்டு, மணம் யாண்டும் பரவி யாவரையும் மகிழ்வுறுத்துதல் போல, வேதங்களால் விளக்கி விரித்துரைக்கப் பெற்று, எங்கும் பரவி எல்லோரையும் மகிழ்வித்து உய்யக் கொள்ளும் அருட்பெருமையினை யுடைமையால், 'மறையின் பரிமளமே' என அம்பிகையைப் போற்றினார். மணமுடைமை யால்தான் மலருக்குச் சிறப்பு ஏற்படுகின்றது; அதுபோல அம்பிகையின் புகழை விளக்கி விரித்துரைப்பதினாலேயே, வேதங்கள் சிறப்புறுகின்றன என்பது கருத்து. 'பிரமன் முதலாய தேவரைப் பெற்றவள்' என்றதனால் தம்மைப் பெற்ற தாயும் அவளேயாதல் சொல்ல வேண்டு வதில்லையாயிற்று. 'அடியேன்' என்றது 'நின் திருவடியைப் புகலாக அடைந்த யான்' என்னும் குறிப்புடையது.

தமக்கென ஒரு செயலும் ஆற்றலும் இன்மையால் 'வந்து' எனவும், வருதல் மட்டுமே அமையாது ஆதலின் 'ஆண்டுகொள்' எனவும் கூறினார். இனிப் "பிறவாமல் ஆண்டுகொள்" என்றாராயினும், இங்கு இறவாமலும் காத்தருள்க என்பது குறிப்பு. (22)

கொள்ளேன் மனத்தில்நின் கோலமல்லாது; அன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன்; பரசம யம்விரும் பேன்; வியன் மூவுலகுக்கு
உள்ளே; அனைத்தினுக் கும்புறம் பே; உள்ளத் தேவிளைந்த
கள்ளே; களிக்குங் களியே; அளியவென் கண்மணியே.

(பொழிப்புரை) பரந்து விரிந்த மூன்று உலகங்களுக்கும் உள்ளே கலந்திருந்து உறை பவளே! அவை எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டுப் புறத்தே கடந்துநின்றும் விளங்குபவளே! உள்ளம் ஆகிய சோலையின்கண் முதிர்ந்து பெருகிய இன்பத் தேனே! அன்பர்கள் அனு பவித்து மகிழ்கின்ற பெருமகிழ்வே! நினது இரக்கத்திற்குரிய எனது, கண்ணின்மணியைப் போன்ற அபிராமி அம்மையே! நின்னுடைய திருவுருவத்தை அல்லாமல், வேறு ஓர் உரு வத்தையும், யான் என் மனத்திற் கொள்ளமாட்டேன்; நின்னுடைய அடியார்களின் திருக் கூட்டத்தை விட்டுப் பிரியமாட்டேன்; பிறசமயங்களை விரும்ப மாட்டேன். (என்னைக் கை விடாது காத்தருள்க).

(குறிப்புரை) அம்பிகை உலகத்துப் பொருள்கள் எல்லாவற்றிலும் உடற்குயிர்போற் கலந்துநின்று இயக்கி வருதலான் "வியன் மூவுலகுக்குள்ளே என்றார். கண்ணிற்கு ஒளி நல்கினும், பொருட்டன்மையால் அதனினின்று வேறுபட்டு நிற்கும் சூரியன்போல, உலகத்துப் பொருள்களையெல்லாம் படைத்து இயக்கிவரினும், அவற்றைக் கடந்து அப்பாற்பட்டும் நிற் றலின் 'அனைத்தினுக்கும் புறம்பே' என்றார். "பருகியும் ஆரேன் விழுங்கியும் ஓல்லகில்லேன்" என்றாற்போல, தேனும் இன்னமுதமுமாய்ப் பெருகித் தித்தித்து நிற்றல் பற்றி "உள்ளத்தின் விளைந்த கள்ளே" என்றார். களிப்பைத் தருவது களி எனப்படும். அடியார்களைக் களிப்படையச் செய்து, தானும் களிப்படைந்து மகிழும் இயல்பு பற்றிக் 'களிக்கும் களியே' என்றார்

"துயரறு சுடரடி" என்பதற்குச் சான்றோர் விரித்த பொருள்நுட்பம் கருதுக. 'அளிய' என்றது, இளிவரவுகுறித்தன்றி ஈண்டுப் பெருமிதநிலையுணர்த்தி நின்றது. "தரியேன் நாயேன் தான் எனைச் செய்தது" எனவும் "பொறுப்பரிய பேரன்பு" எனவும், "வழங்குகின்றாய்க்கு உன் அருளாரமுதத்தை வாரிக்கொண்டு விழுங்குகின்றேன்" எனவும் வருமாறு போலப் பேரின்ப அருளனுபவம் பெருகிநிற்றலின் "அளிய" என்றார். உயிர்க்குயிராய்த் தம்மோடு பிரிவற உடனிருந்து பொருள்களை யுணர்த்தியும் நுகர்வித்தும் இயக்கி நிற்றலாற் 'கண் மணியே' என்றார். உலகிற் கலத்தல், உலகைக் கடத்தல், உலகை இயக்குதல் (ஒன்றாதல், வேறாதல், உடனாதல்) ஆகிய கடவுள் இயல்புகள் மூன்றும், "உள்ளே - புறம்பே - கண் மணியே" என்னும் தொடர்களால் முறையே இப்பாடலின்கண் புலப்படுத்தப் பட்டன.

மணியே, மணியின் ஒளியே, ஒளிரும் மணிபுனைந்த
அணியே, அணியும் அணிக்கழகே, அணு காதவர்க்குப்
பிணியே, பிணிக்கு மருந்தே, அமரர் பெருவிருந்தே,
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே.

(பொழிப்புரை) மாணிக்கம் போன்றவளே! மாணிக்க மணியின்கண் ஒளியாகத் திகழ்பவளே! ஒளி விடுகின்ற மணிகள் பதித்து, அழகு பொருந்தச் செய்யப்பெற்ற, அணிகலன் போன்றவளே! அணியப்படும் அணிகலன்களுக்கெல்லாம் அழகைத் தரு பவளே! நின்னை அணுகாமல் புன்னெறியிற்புக்கு உழலுபவர்களுக்கு மறக் கருணையினால் நோயை விளைவிப்பவளே! நின்னைப் புகல் அடைந்தோரின் நோய்களைத் தீர்க்கும் மருந்தாக விளங்குபவளே! தேவர்களுக்குப் பெருவிருந்தாகத் திகழ்கின்றவளே! நின்னுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்கிய பிறகு, யான்வேறு ஒருவரையும் வணங்கமாட்டேன்.

(குறிப்புரை) பெறுதற்கரிய சிறப்புடைமையால் 'மணியே' எனவும், கண்கவரும் பேரழகுடைமையால் 'மணியின் ஒளியே' எனவும், ஒளிமிக்க மணிக்கும் ஒளியைத் தந்து நிற்பவளாதலின் 'மணிபுனைந்த அணியே' எனவும் குறிப்பிட்டார். பிறரெல்லாம் தாம் அணி யும் அணிகலன்களால் அழகுபெற, அம்பிகையோ தான் அணியும் அணிகலன்களுக்குச் சிறப்பையும் அழகையும் அளித்தருள்பவளாதலின், 'அணியும் அணிக்கு அழகே' என்றார். அம்பிகையைச் சரண் அடையாதார்க்குத் துன்பங்கள் நேர்தலும், அடைந்தார்க்கு அவை நீங்குதலும் பற்றி 'அணுகாதவர்க்குப் பிணியே' எனவும் 'பிணிக்கு மருந்தே' எனவும் குறிப் பிட்டார்.

"நலமிலன் நண்ணார்க்கு; நண்ணினர்க்கு நல்லன்;
சலம்இலன்; பேர்சங் கரன்"

என்னும் திருவருட்பயன் செய்யுளும்,

"பிணிக்கு மருந்து பிறமன், அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து"

என்னும் திருக்குறளும், ஈண்டு அறிந்து இன்புறுதற்கு உரியன. தேவர்கள் கண்டு தொழுது மகிழுமாறு அருட்காட்சி வழங்கும் பேரொளிப் பிழம்பு வடிவினளாதலின், 'அமரர் பெரு விருந்தே' என்றார். அம்பிகை தன்னை அன்பினாற் பணிந்து வழிபடும் "எப்புன்மையரையும் மிகவே உயர்த்தி, அவர்க்கு விண்ணோரைப் பணிவிக்கும்" மேதகவு உடையவளாதலின், "நின் பத்ம பாதம் பணிந்தபின் வேறு ஒருவரைப் பணியேன்" என்றார்.

பின்னே திரிந்துன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண் டேன்,முதல் மூவருக்கும்
அன்னே! உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே !
என்னே இனி,உன்னை யான்மற வாமல்நின் றேத்துவனே.

(பொழிப்புரை) முதன்மை வாய்ந்த மும்மூர்த்திகளுக்கும் தாயே! உலகில் உள்ள உயிர்களின் பிறவிப்பிணியை நீக்குதற்பொருட்டு, அபிராமி என்னும் பெயரும் வடிவமும் கொண்டு எழுந்தருளியிருக்கும் அரிய சிறந்த மருந்தே! நின் அடியார்களின் பின்னே தொடர்ந்துசென்று, அவர்களை வழிபட்டு, என்னுடைய பிறவிநோயைப் போக்கிக் கொள்ள, முற்பிறவிகளிலேயே தவங்கள் பலவற்றை யான்முயன்று செய்துவைத்தேன். உன்னைஎன்றும் மறவாமல் நிலைபெற்றுத் துதிசெய்வேன். இனி எனக்கு என்ன குறை உள்ளது?

(குறிப்புரை) உலகத்தைப் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழிலும் செய்கின்ற, சிறப்புடைய மும்மூர்த்திகளையும் தோற்றுவிப்பவள் அம்பிகையேயாதலின், "முதல் மூவருக்கும் அன்னே" என்றார். அபிராமியம்மை, உலகிலுள்ள உயிர்களின் பிறவி நோயைப் போக்கி நலம் செய்பவள் ஆதலின் 'உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே' என்றார். 'அபிராமி என்று பல்காற் சொல்லுதலே, பிறவிநோய்க்கு மருந்தாகும்' எனக் கொள்ளினும் பொருந்தும். அடியவர்க்குப் பணிசெய்தலே, இறைபணியாய் அமைந்து பிற விப்பிணி அறுக்கும் ஆதலானும், இப்பிறவியின் நலங்களுக்கு முற்பிறவியிற் செய்த தவங்கள் காரணமாம் ஆதலானும், "பின்னே திரிந்து உன் அடியாரைப் பேணிப், பிறப்பறுக்க முன்னே தவங்கள் முயன்று கொண்டேன்" என்றார். 'பிறப்பறுக்க' என்பது சிங்கநோக் காய் இடைநின்றது. "உண்ணுமை உள்ளது உயிர்நிலை ஊன் உண்ண அண்ணுத்தல் செய்யாது அளறு" என்றாற் போலத் தாப்பிசைப் பொருள்கோள் எனினுமாம்.

"எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள்"

என்றபடி, அம்பிகையைத் துதித்து வழிபடுங்கால், மறவாமையும் மனம்அலையாமையும் இன்றியமையாதனவாதலின், "மறவாமல் நின்று ஏத்துவன்" என்றார். முன்னே தவங்கள் முயன்று கொண்டதனாலும், இப்பிறவியில் மறவாமல் நின்று ஏத்துதலாலும், "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" என்னும் துணிவும் அநுபவமும் எய்தியதனால், "என்னே இனி?" எனச் செம்மாப்புடன் வினவிச் சிந்தை மகிழ்ந்தார். (25)

ஏத்தும் அடியவர் ஈரேழ் உலகினை யும்படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவ ராம்,கமழ் பூங்கடம்பு
சாத்துங் குழல்அணங் கே,மணம் நாறும்நின் தாள்இணைக்குஎன்
நாத்தங்கு புன்மொழி ஏறிய வாறு நகையுடைத்தே.

(பொழிப்புரை) கடம்ப மலரை அணிகின்ற கூந்தலையுடைய தேவியே! நின்னைத் துதிக்கும் அடியவர்களே, பதினன்கு உலகங்களையும் படைத்தும் காத்தும் அழித்தும் தத்தமது தொழிலை நடத்தித் திரிகின்றவர் ஆகிய மும்மூர்த்திகள் ஆவர்; அத்தகைய பெருமை வாய்ந்த நினது நறுமணம் கமழ்கின்ற இரண்டு திருவடிகளுக்கு, மிகவும் இழிந்த என்னுடைய நாவில் தங்கிய புல்லிய சொற்களும் துதிகளாக அமைந்து, ஏற்றம் எய்தியது நகைப்பிற்குரிய செயலேயாகும்.

(குறிப்புரை) அம்பிகையின் சிறப்பை விளக்குதற்கு, முத்தொழிலைச் செய்யும் மும் மூர்த்திகளும், நின்னை 'ஏத்தும் அடியவர்கள்' என்றார்.

"குடங்கை நீரும் பச்சிலையும் இடுவார்க்கு இமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையும் தருவாய் மதுரைப் பரமேட்டி"

— பரஞ்சோதி முனிவர்.

என்றபடி, அம்பிகை தன்னை ஏத்தும் அடியவர்க்கு "ஈரேழ் உலகும் காத்தும் படைத்தும் அழித்தும் திரியும்" மும்மூர்த்திகளின் பதவிகளை வழங்கியருள்வள் எனக் கொள்ளுதலும் பொருந்தும்.

"விரும்பும் பெரும்புலியூர் எம்பிரான் அருள்மேவில் ஒரு
துரும்பும் படைத்து அழிக்கும் அகிலாண்டத் தொகுதியையே"

எனவரும் குமரகுருபரர் திருமொழியும் ஈண்டுச் சிந்திக்கற்பாலது. "நாறுதல்" தோன்றுதல் எனவும் பொருள்படுமாதலின், "மணம் நாறும் தாள்இணை" என்பதற்கு 'மணம் வீசுகின்ற திருவடிகள்' என்றல்லாமல், "மணம் தோன்றுதற்கே இடமாக உள்ள திருவடிகள்" எனவும் பொருள் கொள்ளலாம். மும்மூர்த்திகள் புகழும் புகழ்ச்சியோடு, தமது புன்மொழியையும் அம்பிகை ஏற்றருளிய செயல், வியப்பிற்குரியது எனத் தம்பணிவுடைமை தோன்ற "நகையுடைத்தே" என்றார். "நகவே தகும் எம்பிரான் என்னைநீ செய்த நாடகமே" "என்றனக்கே நகைதருமால்" என்பனபோல வரும் சான்றோர் திருமொழிகள், இங்கு நினைந்து மகிழ்தற்கு உரியன. (26)

உடைத்தனை வஞ்சப் பிறவியை; உள்ளம் உருகும்அன்பு
படைத்தனை; பத்ம பதயுகம் சூடும் பணிஎனக்கே
அடைத்தனை; நெஞ்சத்து அழுக்கை எல்லாம்,நின் அருட்புனலால்
துடைத்தனை; சுந்தரி! நின்அருள் ஏதென்று சொல்லுவதே.

(பொழிப்புரை) பேரழகியே! எளியேனது வஞ்சகப் பிறவியைத் தகர்த்தாய்! உருகாத என் உள்ளம் உருகும்படியான அன்பை, அதன்கண் தோற்றுவித்தாய்; தாமரை போன்ற நினது திருவடிகள் இரண்டையும், என் தலையால் வணங்கும் தொண்டினை, எனக்கெனவே தனியுரிமையாக ஒப்படைத்தாய்; எனது நெஞ்சத்தின் மாசுகள் அனைத்தையும், நினது அருள் ஆகிய நீராற் கழுவிப் போக்கினாய். இங்ஙனமெல்லாம் செய்த நின்னுடைய அருளை, யான் எத்தகையது என்று எடுத்துரைத்துப் புகழ்ந்து போற்றுவது!

(குறிப்புரை) அம்பிகையின் அருளாற் கிடைக்கும் பயன்களுள் எல்லாம், மிகமேலான முடிந்த முடிபானபயன், பிறவி அறப் பெறுதலேயாதலின், "உடைத்தனை வஞ்சப் பிறவியை" என்றார். நலம் செய்தற்காகப் போந்து, கேடு விளைவிப்பதாய் மாறிநிற்றலின் "வஞ்சப்பிறவி" எனப்பட்டது. உள்ளம் உருகுதலும், அன்பு பெருகுதலும், உயிர்ப்பேற்றுக்கு ஆக்கம் பயப்பனவாகலானும்; அவை இரண்டும் நிகழப் பெறுதல் அம்பிகையின் அருளால் அன்றி அமையாதாகலானும்; "உள்ளம் உருகும் அன்பு படைத்தனை" என்றார். இறைவியின் திருவடிகளைத் தமது தலையால் வணங்கும் தொண்டு ஒன்றிலேயே தாம் உறைத்து ஊன்றி நிற்றலையும் அதற்குக்காரணமான இறைவியின் அருட்டிறத்தையும் வியந்து "பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே அடைத்தனை" என்றார். அடைத்தல் - அடைவித்தல், ஒப்படைத்தல். சமயவாழ்வு என்பது "மனத்துக்கண் மாசிலன் ஆதல்" என்பவாதலின், "நெஞ்சத்து அழுக்கை யெல்லாம் நின் அருட்புனலால் துடைத்தனை" என்றார்.

"அத்தா உன் அடியேனை அன்பால் ஆர்த்தாய்;
அருள் நீரால் தீர்த்தநீர் ஆட்டிக் கொண்டாய்"

எனவரும் திருத்தாண்டகம் இங்கு நினைத்தற்குரியது. இங்ஙனமெல்லாம், தமக்கு அம்பிகை செய்த அருள், எல்லை யில்லதாய்ச் சொல்லிறந்து நிற்றலின், "நின் அருள் ஏது என்று சொல்லுவதே?" என வியந்து துதித்தார். (27).

—ஆசிரியர்.

சமயமும், விஞ்ஞானமும்

சமயத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் ஏதோ முரண்பாடு இருப்பது போல, நம்மிற் பலர் நினைப்பதும் பேசுவதும் உண்டு. விஞ்ஞானம் வளர வளர, சமயமும் சமய நம்பிக்கைகளும் தாமே மறைந்துவிடும் என்றும், ஒரு சிலர் வலியுறுத்திக் கூறுவர். சமயவுணர்வும் நம்பிக்கையும் உடையவர்களைப் பிற்போக்காளர்கள்—குருட்டு நம்பிக்கை கொண்டவர்கள்—எனக் குறிப்பிட்டுச், சிலர் ஏளனமும் செய்யா நிற்பர். மற்றும் சிலர், தமக்குச் சமயவுணர்வும் நம்பிக்கையும் இல்லை என்று சொல்லிக் கொள்ளுதலை, முற்போக்கு நெறியாகவும், நாகரிகப் பாங்காகவும், கடைப்பிடித்தொழுகுதலையும் நாம் காண்கின்றோம்.

ஆனல் உண்மையிலேயே ஆராய்ந்து பார்த்தால், விஞ்ஞானத்திற்கும் சமயத்திற்கும்—அறிவியலுக்கும் அருளியலுக்கும்—இடையே எத்தகைய முரண்பாடும் இருப்பதாகத் தெரியவில்லை. உண்மையிற் சமயமும் விஞ்ஞானமும் தமக்குள் எவ்வகையிலும் மாறுபட்டன அல்ல. விஞ்ஞானம் ஐம் புலன்களுக்குள் அகப்படும் புறப்பொருள்களையும், பருப் பொருள்களையும் (Phenomena) மட்டுமே, ஆராய்ந்தறிய முயலுகின்றது; சமயமோ ஐம்புலன்களுக்கு எட்டாமல் அப்பாற்பட்டு விளங்கும் அகப்பொருள்களையும், நுண் பொருள்களையும் (Noumena), ஆழ்ந்துணர்ந்து அநுபவிக்க வழிவகுக்கின்றது. இவ்வாற்றல் இரண்டினுடைய எல்லையும், குறிக்கோளும், செயல்முறைகளும், தனித்தனியாக விளங்குதல் காணலாம். ஆதலின், இவையிரண்டிற்கும் எத்தகைய போட்டியோ, பூசலோ, முரண்பாடோ, ஏற்படக் காரணமே யில்லை.

'எங்கே விஞ்ஞானம் செயலிழந்து முடிவுற்று நிற்கின்றதோ, அங்கே யிருந்து தான் சமயம் தொடங்குகின்றது'[1]. விஞ்ஞானம் என்பது வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு கலையே; அஃது இன்னும் குழவிப் பருவத்திலேயே இருந்து வருகின்றது. அதன் வளர்ச்சி முறையிலும், ஆராய்ச்சி நெறியிலும், எத்தனையோ இடையீடுகளும் மாறுபாடுகளும் நேரலாம். ஆதலின் விஞ்ஞானம் சமயத்துக்கு முரண்பட்டதென்று நாம் முடிவு கட்டிவிடுதல் பொருத்தம் ஆகாது. மேலும் 'விஞ்ஞானம் என்பது இயற்கைப் பொருள்களின் இயல்புகளை விளக்கக்கூடுமே யன்றி, அதன் காரணங்களையும் அடிப்படைகளையும் விளக்க வல்லதன்று'[2]. விஞ்ஞானம் எனப்படுவது வெறும் அறிவே; ஆனல் சமயமோ, அதன் பயனுகிய சிறந்த அநுபவமாக அமைவது. எனவே சமயமும் விஞ்ஞானமும் தம்முள் ஒன்றை யொன்று தழுவிப் பிணைந்து

---

(1) "Where science ends, there religion begins."

(2) "Science cannot tell the ultimate 'Why' of things and events. Hydrogen and Oxygen combine to form water, but why should they? We all know Newton's Law of inverse squares. Science does not tell us why it cannot be the Law of inverse cubes. Natural laws are what they are, but why they are not something else, science does not say."

—W. C. Dampier Whetham.

நிறைவுறுவனவேயன்றி, முரண்படுவன அல்ல என்றுணரலாம்[3].

"சமயம் கலவாத விஞ்ஞானம் முடத் தன்மையுடையது; விஞ்ஞானம் கலவாத சமயம் குருட்டுத் தன்மை வாய்ந்தது"[4] என்பர், ஆல்பெர்ட் ஐன்ஸ்டைன்! "சமயத்தோடு இயைபில்லாத விஞ்ஞானம் அகந்தை மிக்கது; விஞ்ஞானத்தோடு சேராத சமயம் மூடநம்பிக்கை பொருந்தியது"[5] என்பர், பேரறிஞர் இராதா கிருஷ்ணன்! "வெறும் அரைகுறை அறிவே நாத்திகம் பேசும்; ஆழ்ந்து நிறைவுற்ற அறிவோ சமய வுணர்வில் தலைப்பட்டுத் தழைத்து நிற்கும்"[6] எனக் கட்டுரைக்கின் ருர், பிரான்ஸிஸ் பேக்கன்!

"விஞ்ஞானி என்பவன் நாத்திகனுக இருத்தல் இயலாது. இயற்கைப் பொருள் களை ஆராய ஆராய, இறைவனின் அருமை பெருமைகள் விஞ்ஞானிக்குத் தான் நன்கினிது விளங்கும்" என்பது, விஞ்ஞானப் பேரறிஞர் ஆகிய ஐன்ஸ்டைனின் கூற்று. முதலிற் கடவுளுணர்ச்சி இல்லாமல் இருந்த விஞ்ஞானிகளிற் பலர் பின்னர் நாளடைவிற் கடவுளுணர்ச்சி உடையவர்களாக மாறி யிருக்கின்றனர்[7].

விஞ்ஞானத்தின் போக்கு இப்பொழுதெல்லாம் ஒரு திருப்பம் அடைந்து, சமயத்தை நோக்கித் தழுவிஇணையவே முற்பட்டு வருகின்றது. இதனை ரெனிஃபுலாப் மில்லர்[8] என்னும் அறிஞர், பின்வருமாறு நீதி மன்றத்தின் உருவக முறையில் அழகுற விளக்குகின்ருர்:—

"அறிவுக்கும் (Reason), நம்பிக்கைக்கும் (Faith), விஞ்ஞானத்திற்கும் சமயத்திற்கும், இடையே ஒருவழக்கீடு ஏற்பட்டு நிலவி வந்தது. அறிவு வாதியாக அமைய, நம்பிக்கையே பிரதிவாதியாக இருந்தது. அறிவு நலனும் பரந்த மனப்பான்மையும் கொண்ட ஆண் பெண் இருபாலாரும் அடங்கிய நடுவு நிலைக் குழுவினர் அதனை ஆராய்ந்தனர். மில்லிக்கன், எட்டிங்டன், ஜீன்ஸ், வொயிட் ஹெட், ஹால்டேன் போன்ற பேரறிஞர்கள் சான்று கூறினர். அச் சான்றுரைகளை அடிப்படையாகக் கொண்டு பிரதிவாதியாகிய நம்பிக்கையின் மீது கொணரப் பெற்ற வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனல் வாதியாகிய அறிவுதான் 'புரட்சிகர மான பிற்போக்கு மனப்பான்மை கொண்

(3) "Increasing number of important Physicists, astro-physicists, mathematicians, and biologists are now of the opinion that science and religion are not only not at all inimical to each other, but constitute only in their intimate inter-relation a complete picture of the world".

—*Rene Fulop Miller*.

(4) "Religion without science is lame; science without religion is blind".

—*Dr. Albert Einstein*.

(5) "Religion without science is superstition; science without religion is arrogance".

—*Dr. S. Radhakrishnan*.

(6) "A little philosophy inclineth a man's mind to atheism, but depth in philosophy bringeth men's minds about to religion".

—*Francis Bacon*.

(7) "Even the skeptic Heine wrote in a postscript to his Romanzero: Yes, I have returned to God. I am the prodigal son: I was overcome by heavenly nostalgia. There is after all a divine spark in every human soul".

(8) "At the present time things are taking a decidedly different turn. The odds are clearly against reason. More and more often the witnesses called in from the laboratories and studies of exact science turn evidence for the defence and materialsm is told a great many unpleasant things by its own experts and authorities.

The jury, composed of intelligent and liberal modern men and women, bases its verdict on the views expressed by the witnesses Millikan, Eddington, Jeans, White head, Haldane. The case against faith is dismissed.

Reason, the original plaintiff, is now suspected of being really the one that is guilty of reactionary backwardness but the case is not pressed for it seems that the new defendant is honestly desirous of mending his ways".

—*Rene Fulop Miller*.

டுள்ள உண்மையான குற்றவாளி' என்ற ஐயுறவு நேர்ந்துளது. ஆயினும் தன்குற்றத்தை யுணர்ந்து கொண்டு, மெய்யாகவே திருந்திவிடக்கூடிய நிலையில் மாறிவருவதனால், அறிவு ஆகிய புதிய பிரதிவாதியின் மீது, அக்குற்றம் வலியுறுத்தப் படாமல் பரிவு காட்டப்பெறுகின்றது."

விஞ்ஞானப் பேரறிஞர்களுள் ஒருவராகிய மார்க்கோனி என்பவர், "தாம் காலைமாலை வேளைகளில் செய்யும் செபமும் பிரார்த்தனையும் எங்கேயோ பரமண்டலத்திலுள்ள பரம பிதாவுக்கு எங்ஙனம் கேட்டல் இயலும் ?' என்று தமக்குச் சிறுவயதில் இருந்த ஐயப்பாடு, கம்பியில்லாத் தந்தியைத் தாம் கண்டுபிடிக்க முடிந்ததன் வாயிலாகத் தீர்ந்துவிட்டது என்றும்; அன்பர்கள் செய்யும் வேண்டுகோள்களையெல்லாம் உலகம் எங்கணும் பரவி விரவி நிற்கும் இறைவன் செவிமடுத்து மனமிரங்கி அருள்புரிகின்றான் என்பது முற்றிலும் உண்மையே" என்றும், குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்நாளைய அறிவியலறிஞர்கள் பலர் ஆராய்ந்து வரும் தெளிவுக் காட்சி (Clairvoyance), தெளிவுக் கேள்வி (Clairaudience), தொலைவிலுணர்தல் (Telepathy), மறைபொருளாராய்ச்சி (Occultism), ஆவியுலக ஆராய்ச்சி (Spirit-World Study) முதலிய அறிவியற் கலைகள் அனைத்தும், சமயமும் விஞ்ஞானமும் ஒன்றையொன்று தழுவிப் பிணைந்து வளர முற்படும் காலம், தொலைவில் இல்லை என்று, அறிவுறுத்துகின்றன.

"விஞ்ஞானிகளிற் பலர், இன்று சமயவுணர்வும் நம்பிக்கையும் கொள்ளத் தலைப்பட்டுள்ளனர். விஞ்ஞானம் உலகாயத நிலையில் இருப்பதாக இன்றும் பேசிவருதல் பொருந்தாது. இந்நாளைய விஞ்ஞானிகள் மெய்ஞ்ஞானிகளோடு சேர்ந்து இறைவனை இயற்கையின்மூலம் உணர்ந்து துதித்துப் பரவி வழிபடுகின்றனர்" என்று மில்லிகன் என்னும் விஞ்ஞானி சொல்லுகின்றார்". [9].

இதுகாறும் கூறியவாற்றால், உண்மைச் சமயமும், உண்மை விஞ்ஞானமும் தமக்குள் ஒரு போதும் மாறுபடுவன அல்ல என்னும் உண்மையைச் செவ்வியின் உணர்ந்து கொண்டு, நாம், அவ்விரண்டையும் நலமுறப் போற்றி ஒழுகி, உய்ய முயலுவோமாக !

—ஆசிரியர்.

(9) "Is there anyone Who still talks about the materialism of science? Rather does the scientist join with the psalmist of thousands of years ago in reverently proclaiming, 'the Heavens declare the glory of God and Firmament showeth His Handiwork'."

—Robert Andrews Millikan.

சமயத்தின் சிறப்பு

இலகுறு சமயம் என்னும் எழில்இயல் இறைமைச் சொல்லில்,
நிலைபெறு நிதிய வைப்பின் நிறைவெலாம் நிகழ்த்தற் காமோ?
உலைவில்பொன் வெள்ளி மற்றும் உலகிலுள் பொருள்கள் எல்லாம்
விலைமதித் திடற்கீ டாகா, வியன்பெரு மாட்சித் தாமே!

—மொழிபெயர்ப்பு, ஆசிரியர்.

"**Religion**! What a treasure untold
Resides in that heavenly word ;
More precious than silver and gold
Or all that this world can afford"

—William Cowper.

"வேழம் காட்டும் விழுப்பொருள்"

(திரு. என். எஸ். தாத்தாச்சாரியார், தஞ்சை)

"தேனேங்கு சோலைத் திருவேங்கடம் என்றும்
வானேங்கு சோலைமலை என்றும் - தானேங்கு
தென் அரங்கம் என்றும் திருவத்தியூர் என்றும்
சொன்னவர்க்கும் உண்டோ துயர்"

முன்னுரை: மேலே குறிப்பிட்ட பாடலில் ஒரு புலவர், தேனேங்கு சோலையைத் திருவேங்கடத்தின் சிறப்பாகவும், வானேங்கு மலையை அழகர் மலையின் சிறப்பாகவும், தானேங்கு தென்னரங்கத்தைத் திருவரங்கத்தின் சிறப்பாகவும் பாடி வைத்தார். "தேனேங்கு சோலை" என்ற அடித்தொடரே இப்பாவின் உயிர்நாடி. தேன் என்பது திருமந்திரப் பொருளான திருமலை அப்பனைக் குறிக்கும் உருவகச் சொல்லாகும். ஆழ்வார்கள் ஆசாரியர்கள் அனைவரும் போற்றி நின்ற அரங்கனுக்கு அடுத்தபடியில் எடுத்துப் பேசப்படும் பெருமை பெற்றவன் வட வேங்கடத்தான். அவனே இராமாநுச மதத்தின் ஆழ்பொருளாக விளங்குகிறான் என்றும் சமயப் பேரறிஞர் பகர்வர். நம்மாழ்வார் தாம் அவதரித்த ஆழ்வார் திருநகரிப் பெருமான் ஆதிநாதன் இருக்க, இத் திருவேங்கடவன் திருவடிகளையே பற்றுசாகக் கொண்டு உள்ளத்தால் தாவிவந்து "புகலொன்றில்லா அடியேன் உனதடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" எனத் தஞ்சம் புகுந்தார். திருமங்கையாழ்வாரும், தமது பெரிய திருமொழியில், "வந்தாய், என் மனம் புகுந்தாய், மன்னி நின்றாய்" என்ற திருவாக்கால், மண்ணை நண்ணாத் தேவர்களும், விண்ணிடை நடை கொள்ளா மனிசர்களும், ஒருங்கே பாங்காய் வந்திக்க நின்றவன் திருவேங்கடத்தான் என்று குறிப்பிட்டார். நம்மாழ்வாரும் இக்கருத்தினை "நிகரில் அமரர் முனிக் கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே" எனக் காட்டியருளினர். அவனைக் காணும் தொறும், சொல்லும் தொறும் உள்ளெலாம் உருகி, உடலெலாம் குழைய நின்றார். இளங்கோ அடிகளும் "விரி திரைக் காவிரி வியன் பெருந்துருத்தித் திருஅமர்மார்பன் கிடந்த வண்ணமும்" என்று அரங்கமாநகர் அமர்ந்த வள்ளலைப் பாடிய திருநாவால்,

"மின்னுக்கொடி உடுத்து விளங்குவில் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகை அணங்கு ஆழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி
நலம்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு
பொலம்பூ ஆடையில் பொலிந்து தோன்றிச்
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்"

எனத் திருவேங்கட நாதனைப் புகழ்ந்தார். திருவரங்கத்தில் காவிரிக்கரையில் பள்ளிகொண்ட நீலமேகமே, மின்னற்கொடி படரத் திருமலையின் மேல் காண்கிறது என்றார். மேகத்தில் மின்னல் படர்ந்தால் நல்ல மழை பொழியும் என்ற உட்பொருளைக் காணலாம். குலசேகர ஆழ்வாரும், திருவேங்கடப் பதிகத்தில்,

"இன்பமரும் செல்வமும் இவ்வரசும்
யான் வேண்டேன்"

"திருமலையில் செண்பகமாய் நிற்கும்
திருவுடையேன் ஆவேனே"

"படியாய்க் கிடந்து உன்
பவளவாய் காண்பேனே"

"செம்பவளவாயான் திருவேங்கடம் என்னும்
எம்பெருமான் மலைமேல் ஏதேனும்
ஆவேனே"

என்றெல்லாம் கனிந்து பாடிக்கரைய நின்றார். உருவவழிபாட்டின் உயர்ந்த நிலை இதுவே. இவ்வுருவ வழிபாட்டிற்கு வைணவ சமயத்தில் ஆழ்வார்களே அடிகோலிகள். இயற்கையழகும் செயற்கையழகும் தேனும் பாலுமென ஒன்றாய்க்கலந்த திருமாலின் திருவுருவ வடிவழகின் சிறப்பினைப் பேசப் புகுந்த பெரியவாச்சான்பிள்ளை— "நோக்காதே அழிக்கிலும் விட ஒண்ணாத வடிவு" என்றார். மேலும்—"ஐயோ! இந்த அழகினை விடமுடியாது என்று காதல் ஒரே பிடிவாதமாயிருக்கும்படி அமைந்திருக்கிறது அவன் வடிவு" என்பன போன்ற பல கருத்துக்களைத் திவ்வியப் பிரபந்த உரைகளில் காணலாம். "இப்படி பகவத் ஸ்வருப ரூப குணவிபூதிகளை அனுபவித்து அது உள்ளடங்காமை வழிந்து புறப்பட்ட சொல்லாயிற்று இப்பிரபந்தங்கள்" எனவும் ஈட்டில் கூறப்பட்டிருக்கிறது. ஆழ்வார்கள் தமது அருளிச் செயற் பாடல்களில் தலங்களையும், தலப்பெருமான்களையும், தலத்தில் காணும் அருமையான இயற்கைக் காட்சிகளையும் புனைந்து பாடுங்கால், அவர்களின் திருவுள்ளங்களில் ஓடிநிற்கும் அழகிய சமயக் கருத்துக்களும், இலைமறை காய்கள் என வெளிப்பட்டு விடுகின்றன. இதற்குச் சான்றாக முதலாழ்வார் மூவர்களில் நடுவரான பூதத்தாழ்வார் திருப்பாசுரத்தைக் காணலாம்.

"பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
இருகண் இளமூங்கில் வாங்கி—அருகிருந்த
தேன்கலந்து நீட்டும் திருவேங்கடம் கண்டீர்
வான்கலந்த வண்ணன் வரை"

துவயம்: இப்பாடலின் கருத்துச்செறிவை நுகர்வதற்கு முன், அறிந்து கொள்ள வேண்டிய வைணவ சமய நெறிகளில் ஒன்றினைப் பற்றிச் சில கூறுவாம். அதனை "ரகசியத்திரயம்" என அழைப்பார்கள். "ரகசியத்திரயம்" அதாவது மறைபொருள்கள் மூன்று எனப் பொருள். வைணவர் திரளிலே பேசப்படும் இந்த ரகசியங்கள் மூன்றும் வைணவர்களுக்கு ஓதி உணர வேண்டிய விழுப் பொருள்களாகும். இந்த மூன்று மறை பொருள்களை உணர்த்துவதுபோல், வைணவர்களின் நெற்றியில் இட்ட நீண்டு உயர்ந்த மூன்று நாமங்கள் தென்படும் என்றும் ஒருவகையில் கூறலாம். இம்மூன்றினுள் முதலாவது எட்டெழுத்து மந்திரமாகிய நாராயணா என்னும் நாமம். இதனை மூலமந்திரம் என்றும், ஓதுகிறவர்களுக்குத் தந்தை போன்றது என்றும் கூறுவார்கள். இரண்டாவது "ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே—ஸ்ரீமதே நாராயணாயநம." என்ற இரு மந்திரப் பகுதிகள் கொண்ட துவயம் என்பது. இதனை மந்திரரத்தினம் என்றும், ஓதுகிறவர்களுக்குத் தாயனையது என்றும் உரைப்பார்கள். மூன்றாவது பகவத்கீதை 18-வது அத்தியாயத்தில் வரும் 66-வது செய்யுளான சரம சுலோகம் என்பதாகும். இதனை ஆசான் போன்றது என்பார்கள்.

ஆக இம்மூன்றினையும் ஆசாரியனிடம் உபதேசம் பெற்று, நிச்சலும் முறையுடன் ஒரு வைணவன் ஓதி வரவேண்டும் என்பது வைணவ நெறியாகும். இம்மூன்று ரகசிய மந்திரங்களில் இரண்டாவதான துவயத்திற்கே அளவற்ற ஏற்றம் தரப்படுகிறது. இந்த மந்திரத்தை இன்னார் இனையர் என்று இன்றி, எந்நேரமும் மனிதராய்ப் பிறந்த யாவரும் ஓதலாம்; ஓதி உயர்பதம் பெறலாம் என்பதே இந்த துவயத்துக்கு ஏற்பட்ட ஏற்றமாகும். மற்றும் அம்மந்திரத்தில் தான் திருமகளின் திருப்பெயர் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது. வைணவ சமயக் குறியில் இடையே காணப்படும் 'ஸ்ரீசூர்ணம்' என்ற பகுதியை துவயத்தின் நிலையில் அமைக்கலாம். "அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கை உறைமார்பா" என்று நம்மாழ்வாரால் அழைக்கப்பட்ட திருவேங்கடவனின் திருமலையானது, துவயத்திற்கு விளக்கம் தரும் இடமாகும். ஆகவே, துவயத்தினை விளக்கிக் காட்டும் பூதத்தாழ்வார் பாசுரமும், திருவேங்கடப்பாசுரமாய் அமைந்துள்ளது.

பாசுர விளக்கம்: மேலே குறிக்கப்பட்ட பூதத்தாழ்வார் பாசுரம், நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தில் இயற்பா என்றபகுதியில், இரண்டாம் திருவந்தாதியில் வரும் பாசுரமாகும். இப்பாசுரத்திற்கு முந்திய பாசுரத்தில் " யானே இருந்தமிழ் நன் மாலை இணையடிக்கே சொன்னேன் " என்றார். "நானே பெருந்தமிழன்; திருமலை அப்பன் திருவருளாலே இன்தமிழ்க் கவிதை பாடும் திறம் எனக்கு ஏற்பட்டது" என்றும் குறிப்பிட்டார். உடனே திருமலையப்பன் அவர்முன் தோன்றி "நீர்தாம் ஒரு கவி சொல்லிக் காணீர் " என்றார்.

அதனடியாக இப்பாசுரம் தலை எடுத்தது என்ற கருத்தினை, அப்பிள்ளை என்பார் தமது உரையில் காட்டியுள்ளார்.

இப்பாசுரத்தில் வரும் இயற்கைக் காட்சியின் வருணனையைக்காணலாம். திருவேங்கட

மலையில் ஒருமித்த காதலுடன் வேழமும் பிடியும் வாழ்ந்து வருகின்றன. காதல் துறையில் முறை கொண்டது யானை இனம் என்பது கவிமரபு. மதநீர் பெருகும் இளம் காளைப் பருவத்தில் செழுமை கொண்ட ஆண் யானையின் தலைவியான பிடி கருவுற்றது. ஆண் யானைதன் மனைவியைக் கண்ணெனக் காத்து வருகிறது. இயற்கையின் போக்கில் கருவுற்றவர்களுக்குக் காணும் மயக்கம், தயக்கம், மனச்சோர்வு, நாணம், விருப்பம், அழகு, இளைப்பு, தளர்ச்சி போன்ற அறிகுறிகள் ஏற்படுகின்றன. பெண் யானைக்கு மலைத்தேன் பருக, அவா மேலிடுகிறது. வெட்கம் தலை எடுக்கவே, தனது கருத்தினைக் கணவனிடம் வெளியிடாது விட்டது பெண் யானை. ஒன்றுபட்ட உள்ளம் கொண்ட ஆண் யானை, தலைவியின் உள்ளக் கிடக்கையை உணர்ந்து விடுகிறது. தேனோங்கு மலையில் தேனுக்குக் குறைவுண்டா? களிறு கற்பினிற் சிறந்த தன் பிடிக்குச் சிறப்பான தேனைக் கொணர விரும்புகிறது.

ஆர்வம் கொண்ட ஆண் யானை மலையின் ஓர்புறத்தே ஓடுகிறது. அங்கு ஓர் இடத்தில் அருவி எனத் தேன் பாய்கிறது. அத்தேன் வெள்ளத்திலிருந்து மனைவிக்குத் தேனை எவ்வாறு எடுத்துச் செல்வது என நினைந்து தயங்கி நிற்கிறது. வாயில் மாந்திச் செல்லலாமென்றால்; ஒரு கால் போதாமல் போகுமோ? அல்லது அது எச்சிலாகி விடுமோ என்றெல்லாம் சிந்திக்கிறது. அப்புதரில் ஓர் இளம் மூங்கில் இருந்தது. அதன் மணத்தால் ஈர்க்கப்பட்ட வண்டுகள் அவ்விள மூங்கிலின் அடியிலும் முடியிலும் சிறு துளை போட்டுள்ளன. மூங்கிற்குள்ளே இடைக்கணுக்கள் வழிவிட்டிருக்கின்றன. மூங்கிலில் இட்ட தேன் கெடாதன்றோ? அதனால் இவ்விள மூங்கிலைப் பெயர்த்தெடுக்கிறது. மூங்கிலின் தோகையினால் தேனில் மொய்த்துக் கொண்டிருக்கும் தேனீக்களை விரட்டிற்று. மூங்கிலைக் குறுக்காக நீட்டி எடுத்துக் கொண்டது. தேன் வெள்ளத்தில் நின்று கொண்டது. இதனை உரையாசிரியர் "மூங்கில் குருத்தும் தேனும் தன்னிலே யொன்றிஒருநீராம்படி தோய்த்து" என அருமையாகக் குறிப்பிடுகிறார். இரு துளைகளின் வாயிலாகத் தேனை மொண்டு கொண்டது. விரைவில் மனைவியின் இருப்பிடத்திற்கு வெறி கொண்டது போல் ஓடி வருகிறது. விரைந்துவரும் தலைவனைக்கண்ட பெண் யானை பிரிவாற்றாமையாலும், தலைவனிடத்து ஏற்பட்ட ஐயப் பாட்டாலும், ஊடல் கொண்டு விடுகிறது. ஆண் யானை அருகே வந்தது. தேன் குழாயை நீட்டிற்று. தலைவி அதனை ஏற்க மறுக்கிறது. இருப்பினும் அன்புள்ளம் கொண்ட யானை முன்னின்று வேண்டி நிற்கிறது. இத்தகைய காட்சி கொண்டது, வான் கலந்த வண்ணனை திரு வேங்கடவன் மலை என்று முடிக்கிறார் ஆழ்வார். இத்தகைய ஊடலைப் பற்றியதொரு பாசுரம் பேயாழ்வார் பாசுரத்திலும் வருகிறது. அப்பாசுரத்தில் கூறப்படும் காட்சியும் திரு வேங்கடமலையினைப் பற்றியதே.

புரிந்து மதவேழம் மாப்பிடியோ டூடித்
திரிந்து சினத்தாற் பொருது— விரிந்தசீர்
வெண்கோட்டு முத்துதிர்க்கும் வேங்கடமே
மேலொருநாள்
மண்கோட்டுக் கொண்டான் மலை

என்பதே அப்பாசுரமாகும். இவ்வாழ்வார் இவ்விதம் ஊடற் சாட்சியைத் திருமலையில் வருணிப்பது, தலவரலாற்றினைக் குறிப்பதாகும். திருப்பதி மலையப்பனிடம் ஊடல் கொண்ட பதுமாவதி நாச்சியார், புறத்தே ஒதுங்கித் திருச்சானூரில் எழுந்தருளி இருப்பதை, இக்கருத்துக் குறிப்பதாகும். அகத்துறையில் யானையின் தொடர்பு உண்டு என்பதை அகப்பாடல்களிற் கூறப்படும் "களிறு தருபுணர்ச்சி" போன்றனவற்றால் அறியலாம்.

உட்பொருள்: இம்மலையில் யானையின் நிகழ்ச்சியைக் குறிப்பதால், யானையின் தன்மையையும், திருவேங்கடமுடையான் தன்மையையும், ஒற்றுமைப்படுத்துவதாகவும் கூறலாம். யானையானது தனது காலைக் காட்டியே மனிதனை மேலே தூக்கும். இவ்வண்ணமே திருவேங்கடமுடையானும்,

"அடிக்கீழ் அமர்ந்து புகுந்து அடியீர்
வாழ்மின் என்றென்று அருள்கொடுக்கும்
படிக்கீழ் இல்லாப் பெருமான்"

என்ற ஆழ்வார் திருவாக்கிற்கிணங்க, தமது வலது திருக்கையால் திருவடியினைக் காட்டி, அத்திருவடியின் பலத்தால் அண்டிய பக்தர்களை மேலே தூக்குகிறான். இன்றும் திருமலையில் திருவேங்கடவன் உருவத்தைக் கண்டால் இந்நிலையை அறியலாம். ஆக ஆண் யானை எனப் பாசுரத்தில் குறிப்பிட்டது, திருவேங்கடத் தானையும்; "மாப்பிடி" என்று குறிப்பிட்டது அலர்மேல்மங்கை நாச்சியாரையும்; இளமூங்கில் என்று குறிப்பிட்டது, ரகசியத்திரயத்தையும்; அம்மூங்கிலில் உள்ள இருதுளைகள், இருபகுதிகள் கொண்ட துவயம் என்ற மாபெரும் மந்திரத்தையும்; மூங்கிலில் இருபால் பாய்ந்த தேனை நாராயண மந்திரம் சரமசுலோகம் என்றும், அத்தேனே மயக்கத்திற்கும் ஆசைக்கும் தகுந்த மருந்தென்றும் குறிப்பிட்டதாகக் கொள்ளலாம். தேசிகர் என்ற மாபெரும் மகான், ஸ்ரீ வைணவர்களைப் பச்சை இளம் மூங்கிலுடன் ஒற்றுமைப்படுத்திப் பேசி யிருப்பதும், ஈண்டு நினைந்து இன்புறுதற்கு உரியது.

வில்வத்தின் சிறப்பு

திரு க. இராமகிருஷ்ணன் அவர்கள், சித்த மருத்துவர்,
சித்தவைத்தியசாலை, வைத்தீசுவரன்கோயில்.

வில்வமரம், நம் நாட்டில் சிவாலயங்கள் உள்ள எல்லா இடங்களிலும், வைத்து வளர்க்கப்படுகின்றது. வில்வதளம் பொதுவாகப் பெரும்பாலும் மூன்று இதழ்களைக் கொண்டதாக இருக்கும். 5, 7, 9, 11, 13, 15 இதழ்களைக் கொண்ட வில்வ தளங்கள், சிவ பூசைக்கு மிகவும் சிறந்ததாகக் கருதப்படுகின்றன.

வில்வம் சங்கோசனகாரி; அதாவது சரீரத்தை இரத்தம், சீழ் முதலியவைகள் வெளிப்படாமல் சுருக்கி வற்றலாக்கக்கூடிய தன்மையுடையது. அதனால்தான் சமாதிக்கிரியைகளி ், விபூதியுடன் வில்வத்தையும் சேர்க்கிறு கள் போலும்.

குடலுக்கு வில்வம் வலுவைக் கொடுத்துப் பேதியை நிறுத்தும், மலபந்தத்தை நீக்கும். பலவீனம் உடையவர்களுக்குக் காணுகின்ற பேதி, அதிசாரம், கிரகணி, வழக்கமான மல பந்தம் ஆகிய நோய்களுக்குக் கொடுக்க நல்ல மருந்து வில்வம்.

இதன் பூ, பிஞ்சு, காய், பிசின், இலை, பட்டை, வேர் என்பன, பலவீனம் உடைய குடலுக்கு வலுவூட்டக்கூடியதாகவும், கிருமி நாசினியாகவும் பயன் படுகிறது. மேலும் வில்வமானது வாதகுன்மம், வாயு, கபம், பித்த சோகை, நீரேற்றம், சன்னி, உடல்வலி, அக்கினி மாந்தம், விக்கல், பித்த சுரம் இவைகளை நீக்கித் தேகத்தின் அழற்சியைப்போக்கி, அழகையும் திண்மையையும் அதிகப்படுத்தக் கூடிய, ஒப்பற்ற சஞ்சீவி மூலிகையாகும்.

வில்வம் ஆண், பெண் ஆகிய இரு பாலார்களுக்கும் ஏற்படக்கூடிய பிரமேகம், வெட்டை, வெள்ளை, தலைநோய், சுரம், கண் நோய் இவைகளை நீக்கும்; சிறு நீரையும் பிரிக்கும். உடலில் மிகுதியாகக் காணப்படும் பித்தத்தையும் கபத்தையும் குறைக்கும். இஃது இனிப்பு, துவர்ப்பு, வீரியம், கார்ப்பு ஆகிய குணங்களை உடையது. மூளையைப் பற்றிய பிணிகளையும், தொழுநோய் போன்ற கொடிய நோய்களையும் குணப்படுத்தும் ஒரு சிறந்த மூலிகை இது.

வில்வப்பூ, பிஞ்சு ஆகிய இரண்டையும் இந்துப்பு சேர்த்து, ஒரு விராகனிடை மல்லி சுக்கு, சோம்பு, ஏலம், ஆரஞ்சுப் பழத்தோல் ஆகியவையுடன் கஷாயம் செய்து உட்கொண்டால், குடலில் ஏற்படும் புண், குன்ம வலி குணமாகும். கீழ்க்காணும் முறைப்படி லேகியமாகச் செய்தும் சாப்பிடலாம்.

வில்வ வேர்ப்பட்டையை நன்கு இடித்து, 4மரக்கால் நீர்விட்டு ஊறவைத்து, மறுநாள் ¼ மரக்கால் ஆகும் வரை வற்றக்காய்ச்சி வடிகட்டி, வடிகட்டிய கஷாயத்துடன் 15 பலம் வெல்லம் சேர்த்துச் செவ்வியம், மிளகு, சீரகம், திப்பிலி, சுக்கு, கொடிவேலி வேர்ப்பட்டை, அதிமதுரம், கண்டதிப்பிலி, சாதிப்பத்திரி, இலவங்க் பத்திரி, ஏலக்காய் வகைக்கு 1 பலம் எடுத்துப் பொன்னிறமாக வறுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து, பாகில் சேர்த்துக்கிளறிப் பதத்தில் இறக்கவும். ஆறியபின் தேன் 1/2 படி சேர்த்துக் கிளறி வைத்துக் கொண்டு காலை, மாலை ஆகாரத்திற்கு முன் 5 கிராம் அளவு சாப்பிடவும். இச்சா பத்தியம்.

மேற்சொன்ன லேகியம் சாப்பிட்டால் மூலம், சுக்கில நாசம், எலும்புருக்கி, மலச்சிக் கல் ஆகிய கொடிய வியாதிகளையும் போக்கும். 8 வித குன்மங்கள் வயிற்று வலி, விக்கல், குமட்டல், கிராணிக் கழிச்சல், காசம், ஆஸ்த் துமா எனப்படும் சுவாச அடைப்பு, காமாலை, விஷப்பாண்டு முதலிய நோய்கள் தீரும். நாக் குக் குளறுதல், தாள் திறக்கக் கூடாமை முதலியனவும் தீரும்.

வில்வப்பிசின் : அறியாமை காரணமாக, இளமையில் சுக்கிலத்தை விரயம் செய்த வாலி பர்களுக்கு ஏற்படும் வீரிய நஷ்டத்தை ஈடு செய்வதுடன், முற்றிலும் நீர்த்துக் கெட்டுப் போன சுக்கிலத்தையும் கெட்டிப் படுத்தி ஆண்மையை விருத்தி செய்யும். இரவில் பசும் பாலுடன் வில்வப் பிசின் உலர்த்திய தூளு டன் சம எடை சீனிக்கற்கண்டு, கசோர்க் காய், பாதாம் பருப்பு சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் சுக்கில சம்பந்தமான குறைகள் அறவே நீங்கிவிடும். நல்ல ஞாபக சக்தியை யும் உண்டாக்கும்.

நிலவாகை வேர், வில்வப்பட்டை ஆகிய இரண்டையும் கொஞ்சம் மிளகு சேர்த்து, எலுமிச்சம் சாறுவிட்டு அரைத்து, இரவில் படுக்குமுன் பூசி, உலர்ந்த பின் படுத்துறங் கிக் காலையில் அரைப்புத் தேய்த்துக் குளித் தால், சொரி, படை, நமைச்சல், அரிப்பு, புண் புரைகள் நாளடைவில் குணமாகி, உடல் தங்கம் போல் பிரகாசிக்கும்.

பெண்கள் தினம் வில்வ இலையும், மிளகும் சேர்த்து உண்டு வந்தால், சூதகம் தடை படுதல், சூதகவலி, மிகச்சூடு, சோமரோகம், கை கால் எரிச்சல் முதலியவற்றைப் போக்குவதுடன், கருப்பப் பையையும் சுத்தி செய்யும். மண்டைக் கரப்பான் என்னும் நோய்க்கு, தலைமுடியை நீக்கி விட்டு, வில்வ இலையுடன் பச்சரிசி மாவை யும் சேர்த்துக் கட்டினால், சீழ் வெளிப் பட்டுக் குணமாகும்.

சூரிய உதயத்திற்கு முன் சுத்த நீரில் குளித்த பின்பு, மிளகுடன் 2, 3 வில்வ இலைகள் சேர்த்துச் சாப்பிட்டால், குஷ்டம் முதலிய சகல மேக ரோகங்களையும போக்கும்.

காசியில் முள் இல்லாத வில்வங்கள் காணப் படுகின்றன. அவற்றின் பழம் மிகவும் பெரியது, இனிப்பு அதிகம் உடையது. பழத்திற்குள் இருக்கின்ற பசை போன்ற சோற்றில், டானிக் ஆசிட் இருக்கின்றது. நல்ல பழத்தின் சதையை எடுத்து ஒரு பாத்திரத்திலிட்டு, இரண்டு மணி நேரம் பிசைந்து தூவிக் கெட்டியான துணியில் வடிகட்டவும். செவ்வரத்தம் பூச்சேர்த்துப் பிறகு அதை எட்டில் ஒன்றாகச் சுண்ட வைத்து, சுண்ட வைத்த கஷாயத்துடன் சர்க்கரை சேர்த்து, இளம்பாகு பதத்தில் 10 எலுமிச்சம் பழம் சேர்த்து, இலவங்கப் பட்டை, சோம்பு, கிராம்பு வகைக்கு 1 பலம் இடித்து வஸ்திரகாயம் செய்த தூளை அதனுடன் கலந்து வைத்துக் கொண்டு, காலை, மாலை ஒன்று அல்லது இரண்டு அவுன்சு வீதம் வெந்நீரில் கலந்து சாப்பிடலாம். இவ்விதம் சாப்பிட்டால் இரத்தம் சுத்தியாகும். இரத்தக் கொதிப்பு நீங்கும். நல்ல பலன் தரும். மேற்கூறிய வில்வப்பழச் சர்பத் உயர்ந்த டானிக்காகக் கருதப்படுகிறது.

பெண்களுக்கு வெப்ப மிகுதியினால் ஏற் படும் வெட்டைச் சூடு, வெள்ளை ஆகிய நோய்களுக்கு வில்வ இலை 10 பலம் இடித்து மிளகு, சோம்பு வகைக்கு 1/4 பலம் சேர்த்து 1 படி தண்ணீரில் கொதிக்க வைத்து, 1/4 படியாகக் காய்ச்சி வடிகட்டிச் சீனிக்கற் கண்டு, பசு வெண்ணெய் சேர்த்து, 1/2 மண்டலம் (24 நாட்கள்) சாப்பிட்டால், கருப்பப்பைக் கோளாறுகள் அறவே நீங்கும்.

வடக்கு நோக்கிப் போகும் வில்வ வேரின் மேல்பட்டைத் தோலுடன், சம அளவு நாகப் பட்டைத் தோலும் சேர்த்துச் சம அளவு குறுவை அரிசியைக் கலந்து, கல்லுரலில் இட்டு இடித்து மாவாக்கி, நெய் பனை வெல்லம் சேர்த்துப் பிசைந்து, அமாவாசை முதல் மூன்று நாட்கள் உட்கொண்டால், பவுத்திரம் என்னும் மூலநோய் குண மாகும். இச்சா பத்தியம் தேவை.

அருநெல்லிக் காய்ச்சாறு, எலுமிச்சம் பழச் சாறு, கருவேப்பிலைச் சாறு, ஆகிய மூன்றும் ஒரு அவுன்சு, வில்வப் பிஞ்சை இடித்துப் பிழிந்த சாறு 3 அவுன்சு, தேன் 1/2 அவுன்சு சேர்த்துச் சாப்பிட்டால், இரத்தபித்தம், பித்த மயக்கம், தாகம், உட்சூடு, மூலக்கொதிப்பு நீங்கி வெப்பம் தணியும்.

உலர்த்திய வில்வ இலைச் சூரணம் 2 பங்கு, ஆவாரம் பூ 2 பங்கு, ஆவாரம் பிசின் 1 பங்கு, ஏல அரிசி, மூங்கிலுப்பு 1/2 பங்கு வீதம் இடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் காலை, மாலை ஆகாரத்திற்கு முன் பசும்பாலில் சாப்பிட்டு வந்தால் மதுமேகம், நீரிழிவு

அதிமூத்திரம், பிரமேகம், இவைகளால் ஏற்படும் உறுப்புகளின் உணர்ச்சியின்மை முதலிய வியாதிகள் குணமாகும். இதுஉயர்ந்த அனுபோக முறை. இச்சாபத்தியம்.

வில்வஇலை அரைத்த விழுது கொட்டைப் பாக்கு அளவு, மான் கொம்பு, அரைத்த விழுது சமபாகம் சேர்த்துப் பன்னீர் கலந்து சாப்பிட்டு வந்தால், நான்கு மாதத்திற்குமுன் ஏற்படும் கருப்பச்சிதைவைப் போக்கலாம். பொதுவாகப் பெண்களுக்கு அதிக வெப்பத்தால் ஏற்படும் வெள்ளை என்னும் நோய் குணமாகும்.

சகல மூலநோய்களுக்கும், குறிப்பாக இரத்தமூலத்திற்கு, வில்வப் பிஞ்சை மேலோடு கறுக்கும் படியாகச்சுட்டு, உள்ளிருக்கும் சத்தை 10 வெள்ளை மிளகுடன் சேர்த்துக் காலையில் மட்டும் சாப்பிட்டு வந்தால், மேற்சொன்ன வியாதிகள் குணமாகும்.

மாவிலிங்க இலை, வில்வஇலை இரண்டும் சமமாகச் சேர்த்து இடித்துச்சாறு பிழிந்து, மூன்று அவுன்சு, சாறுடன் 1 கரண்டி நல்லெண்ணை சேர்த்து, மூன்று நாட்கள் சாப்பிட்டால், மஞ்சட்காமாலை நீங்கும். இது அனுபோக முறை. உப்பில்லாப் பத்தியம் இருக்கவும்.

வில்வவேரின் பட்டை, சீந்தில்கொடி இவைகளைக் கஷாயமிட்டுத் தேன் கலந்து உட்கொண்டால், சன்னிபாத தோஷசுர வாந்தி தீரும்.

வில்வப்பட்டையைச் சிறு தீயில் இட்டு வாட்டி, இடித்துப்பிழிந்த சாற்றுடன் ரசத்தை மத்தித்து நன்கு அரைத்தால் ரசம்கட்டும். நூற்றெருமுறைசாரணைசெய்யரசமணியாகும் இதை மோதிரத்தில் அணிந்து கொண்டால் சகல வியாதிகளையும் போக்கும். அஷ்டமா சித்திகளை உண்டாக்கும் என்பர் பெரியோர்.

....

தேசிகன் வாழித் திருநாமப்பா

வஞ்சப் பலசமயம் மாற்றவந்தோன் வாழியே !
மன்னுபுகழ்ப் பூதூரான் மனம்உகப்போன் வாழியே !
கஞ்சத் திருமங்கை களிக்கவந்தோன் வாழியே !
கலியன்உரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே !

செஞ்சொல் தமிழ்மறைகள் தெளிந்துரைப்போன் வாழியே !
திருமால் திருமணியாய்ச் சிறக்கவந்தோன் வாழியே !
தஞ்சப் பரகதியைத் தந்தருள்வோன் வாழியே !
தண்தமிழ்நல் தூப்புல்திரு வேங்கடவன் வாழியே !

தேசிகன் திருநாட்பா

வாதா சனவரர் இவர்என வரும்மா பாடியம் வகைபெறுநாள்!
வகுளா பரணப் பெருமாள் தமிழின் வாசி அறிந்திடும்நாள் !
பேதா பேதம் பிரமம் எனுவகை பிரமம் தெளிவித் திடும்நாள் !
பேச்சொன் றுக்குச் சதநூ டணியைப் பேசிய தேசிகன் நாள் !

தீதா கியபல மாயக் கலியைச் சிக்கென வென்றிடும் நாள் !
திக்கெட் டும்புகழ்ச் சீபா டியத்தைத் தெளிய உரைத்திடும் நாள்!
ஓதாது ஓதும் வேதாந் தாரியன் உதயம் செய்திடும்நாள் !
உத்தம மான புரட்டா சித்திரு வோணம் எனும்நாளே !

மாணிக்கவாசகரும், திருக்கழுக்குன்றமும்

அருட்டிரு. அழகர் அடிகளார்,

[திருக்குறள் பீடம், மாம்பாக்கம் குருகுலம், மதுராந்தகம்]

(முற்றொடர்ச்சி)

மலங்கி னேன்கண் ணில் நீரை
மாற்றி மலங்கெ டுத்தபெ ருந்துறை
விலங்கி னேன்வினைக் கேட னேன்
இனி மேல்வி ளைவத றிந்திலேன்
இலங்கு கின்றநின் சேவடிகள்
இரண்டும் வைப்பிட மின்றியே
கலங்கி னேன்கலங் காம லேவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே !

பதிகத்தின் நோக்கம் :

மலங்கினேன் கண்ணில் நீரை மாற்றி மலங்கெடுத்த பெருந்துறைவிலங்கினேன்-குறுக்குவழியிலே தடிப்பாகச் சென்று மயங்கித் துன்பங்களை அடைந்த அடியேனின் கண்களில் வடிந்த நீரை மாற்றி அடியேனது மலத்தை ஒழித்த அருட்பெரும் பதியாகிய திருப்பெருந்துறையை விட்டுப் பிரிந்து விட்டேன் என்று,

பதிகத்தின் நோக்கம் இப்பாடலில் விளக்கப்பட்டிருக்கிறது; திருவடி வைப்புக்குக் காரணமும், வழங்குதல் அடைதலாகிய நற்செயல் நற்பேறுகளும், திருப்பெருந் துறை திருக்கழுக்குன்றம் ஆகியவற்றின் தொடர்பும் பிறவும் இதில் குறிப்பிடப்படுகின்றன.

மலங்குதல் :

மலங்குதல்—மயங்கிக் குறுக்கிடுதல். குறுக்கிடுதலில் இரண்டு வகை; தாக்கிக் கொண்டு குறுக்கே போதல் (மலங்குதல்); விலகிக் குறுக்கேபோதல் (விலங்குதல்). எருமை குறுக்கே போனால் வலிவாக உரசிக்கொண்டுபோகும், மலங்கும்; பறவைகள் குறுக்கே போனால் விலகிப்போகும், விலங்கும். மலங்குமீன் என்றொருமீனுண்டு. தான் போகும்வழியே வலிந்து போவதனால்தான் அதற்கு அப்பெயர் வந்தது. எருமையும் மீனும் அப்படி இருக்கலாம்; மக்கள் அப்படியிருக்கலாமா? கூடாது; ஆனால் அருள்பெறாத மக்கள் அப்படித்தான் மலங்குவார்கள். வழியில் எவரேனும் எதிர்ப்படுகிறபோது விலகிப் பிறர் வாழ்க்கைக்குக் குறுக்கேயும், கேடு சூழ்கிற முறையிலும் போவார்கள்.

இராவணன் :

குறுக்கு வழியிற் போகிறவர்கள், அறிவு மயங்கியே அவ்வாறு செய்வார்கள். அவர்களின் துடிப்பான போக்கெல்லாம் மயக்கத்துக்குரிய பொருளை எதிர்ப்படுகிற நிலையில்தான். குறுக்கே செல்வதற்குக் காரணம் திறமற்ற அறிவு; மயங்கிய அறிவு; இராவணன் எவ்வளவோ தவமும் வலிவும் உடையவன்; ஆனால், ஆணவத் துடிப்பு மிக்கவன்; அவன் நெறி மயங்கி அழிந்ததாக அறிகிறோம். அப்படியே சூரனும் தேவர்கள் வாழ்வில் குறுக்கிட்டுச் சிங்கமுகன் அறிவுறுத்தலையும் கேளாமல் நெறி மயங்கினான். இறுதியில் அழிவு எய்தினான்.

பெருந்துறை :

இப்பாடலால் ஆளுடைய அடிகள், தமது இளமைக் காலத்தில் அமைச்சியல் வாழ்க்கையில் இருந்தபோது, உலகியற் பதவிகளிலும் பிறவகைகளிலும் மயங்கி இன்புற்றிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இளமையில் அடிகள் நன்றாய்ப் படித்து அமைச்சியற் பதவி பெற்றதும், அந்நிலை நேர்ந்திருக்கலாம் போலும்! என்றாலும், மயங்குகின்றோம் என்று தெரிந்து அவற்றிலிருந்து மீளவும், ஞான குரவரை எதிர்ப்பட்டுஅருள் மொழி (உபதேசம்) பெறவும், அவர் ஏங்கி ஏங்கி, அமைச்சியல் நிலையிலிருந்து வேறு படத் தக்க வாய்ப்பை நோக்கிக் கொண்டிருந்தார். (திறமை நோக்கி

அரசன் அவர்க்குஇடந்தராமலிருக்கலாம்). குதிரை வாங்க நேர்ந்தபோது திருப்பெருந் துறையில் திருவருளால் ஞான குரவரை எதிர்ப்பட்டுத் தம் நினைவிழந்து உணர்ச்சி வயமாகி உருகிச் சிவப்பணியிற் புகுந்து விட்டார். தமது பழைய நிலையை எண் ணியே அடிகள், 'மலங்கினேன்' என்றும், அதனால் வடித்த கண்ணீரைப் பெருந் துறை மாற்றினது என்றும், அதாவது பெருந்துறையில் குருவடிவமாக வந்த இறைவன் மாற்றினார் என்றும், அத்தகைய பெருந்துறையைக் குருவின் மறைவுக்குப் பிறகு அவர் ஆணைப்படி பிரிய நேர்ந்தது என்றும் குறிப்பிடுகின்றார்.

மலங்குதற்குக் காரணம் மலம். அது கெடவே மலங்கிய காரணத்தால் வந்த துன்பக்கண்ணீர் மாறி விட்டது. பெருந் துறையில் இறங்கினர், மலம் நீங்கியது. மலங் கெடுத்த நிலை பெருந்துறையா யிற்று. குருவருள் பெருந்துறையிலேதான். அதாவது, அருள் இணக்கத்திலேதான்! புறத்திற் பெருந்துறை, அகத்தில் அருள் பரந்தவுள்ளம். புறத்தில் ஆசிரியர் எதிர்ப் பட்டார், அவரருள் மொழியினால் செம்மை விரிந்தவுள்ளம் வாய்த்தது; அவ்வுணர்ச்சி, ஆணவத்தை அழித்தது; அதாவது மலத் தைக் கெடுத்தது. (மலம்—இங்கே ஆண வம்).

அழுகை நெறி :

மலங்குவது உயிர்களுக்கு இயல்பு. ஆனால் மலங்குகிறோம் என்று தெரிந்ததும் அதிலிருந்துமீளவேண்டும்; ஏங்கிக் கண் ணீர் விட்டுக்கதற வேண்டும்; கதறினால் அதைமாற்றி ஆளக் குரு வருவார். "அழு தடி அடைந்த அன்பர்" என்றே அடி களுக்கு ஒரு பெயர் உண்டு. ஆகவே அவர்களைப் பின்பற்றி நாமும் நம்குறை களை உணர்ந்து வருந்திக்கொண்டு புனித வாழ்விற் செல்ல வேண்டும்.

அழுவது என்பது, உலகியலில் பெரும் பாலும் நன்றி அல்லது வருத்தம் தெரிவிக் கிறார்களே முகமனுக்கு, அதுபோல் அன்று. உள்ளபடியே உருகி நெஞ்சங்கரைய வேண்டும். கரைந்து, தூய்மையில், அதாவது தூய நினைவு சொற் செயல் களில் ஒன்றவேண்டும். அடிகளே "அழு தால்உன்னைப் பெறலாமே" என்கிறார் பிறி தோரிடத்தில். எது எதற்கோ அழு கிறோம்; பிறர்க்காகப் பிறர் முன்னிலையில் அழுவது போல் அழுகிறோம். இறந்தவர் களை எண்ணி அழுகிறோம்; நாமும் இறந்துவிடுவோமே என்று அழுகின்றோம். நாம் அழவேண்டியது, நம் அவலநிலையை எண்ணி. அதனால் உருக வேண்டியது நமது தடிப்பு நிலை. "நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே" என்பதனால் உருக்கமான அழுகை, அருளை எளிதில் நம்மிடம் சேர்க்கும் என்று உணரலாம்.

கண்ணோட்டம் :

இயற்கை ஆற்றலை, அருளை எண்ணி னால், நமது அழுகிய சிறுமை நிலை நன்கு புலப்பட்டு உருக்கம் பெருகும். அமிழ்த மயமான இந்த உருக்க உணர்வு விரிந்து, உயிர்களிடத்து ஓடுகின்ற நிலையைத்தான் 'கண்ணோட்டம்' என்பர் சான்றோர். நாக ரிகம் என்பதற்கே 'கண்ணோட்டம்' என்று பொருள்கண்ட நாடு தமிழ் நாடு. அருளை நினைந்து உருக உருக ஆணவம் கழலும். தடிப்பு அகன்ற மெல்லிய உள்ளத்தில் பிறர் மனம் நோகாதபடி நடக்கும் பேரன்பு நிலைமுகிழ்ப்பது இயல்பே! அதுதானே நயத்தக்க நாகரிகம்! அவ்வாறு கூறு கிறார் திருவள்ளுவர்.

உருக்க உணர்வும்; அதன் பயனான நாகரிக (கண்ணோட்ட) வாழ்வும், இயல் பாக நம்மிடம் அரும்பத் துணை செய்வது வழிபாடு. இயற்கையின் ஆற்றலையும் அதனால் உயிர்கள் பெறும் நலங்களையும் கருதக்கருத, அதைப்படைத்து இயக்கும் எல்லையற்ற பேரறிவும் பேரருளும் உடைய ஒரு பொருளின் உண்மையும், அதன் பெருமையும், நம் சிறுமையும் தெளிவாகத் தெரியும். வழிபாடு என்பது இவ்வாறு இயற்கை என்னும் அருள் நலங்களிலும், உயிர்களின் நலங்களிலும் கருத்தை இருத்துவதே. அதன் பயனே, மேற் சொன்ன நாகரிக வாழ்க்கை.

தலவழிபாடு :

இயற்கை நலங்களில் படிந்து இறை உணர்வு தலைக்கூடி அதன் பணிவிலும், பணியிலும் சிறத்தற்கே மூர்த்தி தலம் தீர்த்தங்களை முறையாக வழிபடுவது! இத்தகைய வழிபாட்டுக்காகச் செய்யும்

திருப்பயணங்களைப் புரிந்து இயற்கை நலங்களில் திளைப்பதோடு, அங்கங்கும் நிகழ்ந்த ஆன்றோர் வரலாற்று நலங்களில் ஈடுபட்டு, அவ்வவ்விடங்களில் அவர்கள் பெற்ற நல் உணர்வுகளை நாமும் பெற முயலலாம். திருப்பெருந்துறைக்குச் சென்றால், அங்கே மணிவாசகர் பெற்ற அருள்நலங்களை எண்ணி உருகலாம்; நமது மலங்கெட அது பெரிதும் உதவிசெய்யும். திருவெண்காடு என்னும் திருவூருக்குச் சென்றால், அது மெய்கண்ட தேவரின் பெற்றோர் நன்மகவு வேண்டி நோன்பிருந்த இடம் என்ற உணர்வோடு வழிபட்டு, நன் மக்களை உலகுக்கு உதவத் தக்க அருளைப் பெறலாம்; அல்லது நன்மக்கள் அங்கங்கும் தோன்றுக, என்னும் நன்னினைவுங் கொள்ளலாம். இப்படியே ஒவ்வொரு திருவூருக்கும் தனிச் சிறப்பான பயன்கள் உண்டு. அவற்றைத் தக்கோர்வழி அறிந்து அங்கங்கே ஈடுபட வேண்டும். முடிந்த பரிபாக நிலையை வேண்டுவோர்க்குத் திருக்கழுக்குன்றம் ஏற்ற இடம்.

பெருந்துறையில் அறியாமை என்கிற ஆணவமலங் கெடக் குருவருள் மொழி (ஞானோபதேசம்) பெற்ற அடிகளார், ஞானத்தின் பயனாக வீடுபேறு அடைந்திருக்கலாம்; ஆனால் பெற்ற நலத்தைப் பிறர்க்கு வழங்காமல் அவ்வாறு ஆதல் என்பது அருளின் காரியங்களுக்கே மாறுபட்ட தாதலின், குருவடிவாக வந்த இறைவனும் அடிகளை இவ்விடமே இருக்கச் செய்து பிரிந்துவிட்டான்.

பணிபுரிதல் :

அடிகளும் பல தலங்களுக்கும் சென்று தாம் பெற்ற திருவடிஞானத்தைப் பின்னும் பெருக்கி முடிவாகப் பலருக்கும் பயன்படும் படி திருக்கழுக்குன்றத்தில் வைக்க நேர்ந்தது. இது கொண்டு ஆசிரியரின் அருள், எப்போதும் இவ்வாறு பணிகொள்ளுதலாகத்தான் இருக்கும் என்று இனிது உணரலாம்.

பிறக்கும் போதே பிறவி நலத்தாலும், பிறப்பின் அமைப்பு சூழல் நலத்தாலும் அமைந்த, கல்வி அறிவு ஒழுக்கம் செல்வம் முதலியவற்றை மேலும் மேலும் பிறர்க்கு வழங்கவும் அதற்காக அவற்றைத் தக்கபடி வளர்க்கவும் முயலுவதே பணி. முடிவான அருள் நிலை இதனால் தான் கிட்டும். ஆருயிர்த்தொண்டே ஆண்டவன் தொண்டு. அதை நினைப்பூட்டவே கோயில் குளம் முதலிய குறிகளும் பிறவும் உள.

குடும்பத்துக்குக் குழந்தை வேண்டும் என்று எண்ணுகிறோம். சேர்த்து வைத்துள்ள பணத்துக்கும் பெயருக்கும் அல்ல; நாம் உலகத்துக்குச் செய்த நன்மையை மேலும் வளர்த்துத் தொடர்ந்து செய்யவே என்று எண்ணவேண்டும். "தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது" என்கிறார் திருவள்ளுவர். நலம் அடைவது பிறர்க்கு நலம் செய்யவே; தன்னலம் பிறர் நலத்தை வளர்த்தலே என்று கருதவேண்டும்.

இக்கருத்தோடு நாம் எத்தகைய நலங்களையும் அடையலாம்;அடைய முயலலாம். உணவு, உடை மற்றுமுள்ள உலகியல் நலங்களை எல்லாம் விரும்பலாம். ஆனால் அவற்றால் மயங்கித் திளைக்காமல் பிறர் நலத்துக்காகவே பெற்றுப் பயன் கொண்டு சிறந்து சிறப்பிக்கவேண்டும்.

மலங் கெடுத்தல் :

உலகப் பொருள்கள் எல்லாம் மாயை. மாயை நம்மைக் கெடுக்கவும் எடுக்கவும் வல்ல மழை போன்றது. மும்மலங்களில் ஆணவமும் கன்மமுமே நம்மைக் கெடுப்பன; மாயை அவற்றிலிருந்து நம்மை விடுவிக்க வந்த கருவி! ஆனால் அம்மாயையில் மயங்கிவிட்டால் அதுவும் நம்மைக் கெடுத்துவிடும். மயங்காமல் தரம் அறிந்து பயன் படுத்திக்கொண்டால் அது நம்மை எடுக்கும்; (உயர்த்தும்). அறிவு மதுகையால் உலக நலங்களில் மயங்காமல் உயர்ந்து, அவற்றை அடைந்து பிறருக்கு நலம் பயக்கமுயலவேண்டும்.

எடுத்துக்காட்டாகப் பொருள் வேண்டும்; கல்வி அதனினும் முதன்மையாக வேண்டும். ஆதலின் இவற்றிற்குள்ள தரத்தையும் வேறுபாட்டையும் அறிந்து, ஒன்றுக்கு மற்றொன்றைத் தக்கபடி பயன்படுத்தி வளர்த்து வழங்கவேண்டும்.

செல்வம் செல விட்டால் அழியும்: உடல் உழைக்க உழைக்கத் தளரும். கல்வி வளரும் இயல்புடையபொருள். வளர்கின்ற கல்வியும் உணர்வும் ஆகிய பொருள்களை நாம்சேர்ப்பதில்லை. தேய்கின்ற செல்வத்தையும் உடம்பையுமே ஓம்பமுனைகின்றோம். நம் நினைவை, ஆற்றலை, நேரத்தை, பெருமிதத்தை, அவற்றிற்காகவே செல வழிக்கின்றோம். கல்விக்கும் உணர்வுக்கும் முதன்மைதந்து செல்வத்தை அதற்காகவே பயன் படுத்தவேண்டும். "பிறந்து மொழி பயின்ற பின்பெல்லாம் காதல் சிறந்து" என்கிறார் காரைக்காலம்மையார். "பிறந்து செல்வம் பயின்றபின்பெல்லாம் உடல் சிறந்து" என்று சொல்லவில்லை. மொழி, காதல் என்பன முறையே கல்வியையும் உணர்வையும் குறிப்பன. இப்படிப் பெறுகின்ற கல்வியும் உள்ளுணர்வும் வையத்து வழங்கத்தக்கன.

"செவியறிவுறூஉ" சொல்மருந்து என்பனவெல்லாம் உள்ளுணர்வை வளர்ப்பன. மனமாசுகளைக் (நோய்களை) கழுவுவன. இத்தகைய பெருமருந்து கொடுக்கிற சான்றோர்களை உலகம் இன்று சரிவர மதிப்பதில்லை. இகழ்வாக (அலட்சியமாக) எண்ணுகிறது. குறிப்பாக நம்நாட்டில் அத்தகையோர்க்கு இன்று நல்ல ஆதரவேயில்லை. அதனால் இழப்பு உலகத்துக்கே தவிரச் சான்றோர்களுக்கன்று.

பயன் கருதாப் பணி :

விலங்கினேன் என்கிறபோது, விலங்க முடியாத நிலையில் விலங்கிய ஏக்கம் புலப்படுகிறது. அருள் கிட்டிவிட்டாலும், அதை உலகோர்க்கு வழங்க வேண்டி இருத்தலின், குருவின் ஆணைப்படி விலக வேண்டி இருந்தது. மாயையில் மயங்காமல் அதன் மயக்கத்திலிருந்து நீங்கி உகுத்த கண்ணீரால் அருளும், அவ்வருளால் மலக்கேடும் உண்டாயின என்றலும், பெருந்துறையில் ஆணவமலம் மட்டுமே கெட்டது; விளைந்த கன்ம மலம் கெடவேண்டுமல்லவா? பயன் கருதாப் பணியினாற்றான் அது கெடும். ஆதலினாற்றான் பெருந்துறையிலிருந்து விலகும்படி நேர்ந்தது. வினைக் கேடனேன் இனி மேல் விளைவது அறிந்திலேன்—இங்கே (திருக்கழுக்குன்றத்தில்) வினைக்கேடு உடையவனானேன்; மேல் விளையக்கூடியது இனி அறியப்படுவதில்லேன்; (தற்போதம் இன்மையால்) மேல் விளையக் கூடிய அருள் நிலை இனி என்ன என்று தெரியாதவனுமானேன்.

உலகியல் முடிந்த இடம் திருக்கழுக்குன்றமாதலின், அங்கே அடிகளாரின் வினையனைத்தும் கெட்டது; அதாவது அதன் தாக்குதல் (மேல் விளைவு) அற்ற நிலை எய்தியது. இத்தகைய நிலையே வினைக்கேடுடையநிலை. செயல் எப்போதும் நடக்கும். முடிவான வீட்டுநிலையிற்றான் செயல் இராது. மலநிலையில் அதற்கு வினை என்றும், அருள் நிலையில் அதற்குப் பணி என்றும், தொண்டு என்றும் பெயர். முன் நிலையில் அதன் தாக்குதலும் பெருக்கமும் (விளைவும்) உண்டு; பின் நிலையில் அவைஇல்லை; முன்னரும் இது விளக்கப்பட்டிருக்கிறது. முதல் அடியில் அடிகள் தாம் எய்திய தூய்மைநிலையின் வளர்ச்சி நிலையை விளக்கி இருப்பதாலும், வினைக் கேடனேன் என்று வினை கெட்டதன்மையைக் குறிப்பிட்டிருப்பதாலும்; மேல் வினை விளைவற்ற நிலையை அவர்கள் எட்டிவிட்டார்கள் என்பது நன்றாகத் தெரிகிறது; தெரியவே மேல் விளைவு பற்றி அறிய முடியவில்லை என்பதை அறியவேண்டுவதும், (மேல் விளைவு ஒன்றுமில்லை ஆதலின்) இல்லை என்று கொள்ள வேண்டும். வினை கெட்ட இடத்தே அருட்பெருக்கமாகிய சிவானந்த விளைவு தோன்றும்; அவ்விளைவு யானென்னும் நினைவுக்கு (தற்போதத்துக்கு) எட்டுவதன்று. அவ்விளைவு தன்னுணர்வால் அறியப்படுவதில்லாமையால் அக்கருத்துந் தோன்ற 'இனிமேல் விளைவதறிந்திலேன்' என ஆராமையாற் கூறினமையும் புலப்படுகின்றது. இலங்குகின்ற நின் சேவடிகள் இரண்டும் வைப்பிடமின்றியே கலங்கினேன்—மேலும் மேலும் ஒளி விட்டுத் திகழ்கின்ற நின் திருவடிகள் இரண்டையும் வைக்கும் இடந் தெரியாமல் கவலையுற்றேன்.

இலங்குகின்ற சேவடி :

இலங்குதல்—மேலும் ஒளிவிட்டுத் திகழ்தல், நிழலாடுதல்; விளங்குதல் என்பது இயல்பாக ஒளிவிட்டுக்கொண்டிருத்தல். இலங்குதல் என்பது இயல்பாக உள்ள

ஒளிமேல் பிறிதோர் ஒளிபட மேலும் விளங்கித்திகழ்தல். வைர ஒளி, நல்ல ஒளி யில் மேன்மேலும் ஒளிவிட்டுத் திகழும். சேவடி—சிவந்த திருவடி, தூயஞானம், மெய்யுணர்வு. இயல்பாக உள்ள உயி ரறிவு மலமாக நீங்கி ஒளிவிடத்தொடங் கியதும், அதன்மேல் அருள் ஒளி படப்பட மெய்யுணர்வாகிய பேரொளி அதன்கண் அரும்பும். அதுமேல்மேல் வளர்ந்து விரிந்து எல்லையின்றித் திகழக் கூடியது. ஆதலின், இலங்குந்தன்மை உடையது என்க.

இலங்கும் சேவடி இரண்டு என்பன, உண்மையும் (சத்து), அறிவும் (சித்து). ஒன்றின் ஒன்று நீங்காத இவை இரண்டை யும் பற்றினல்தான் இன்பம் கிட்டும். உண்மையைப் பற்றுவதும், அதனை அறி வதும் இன்பமாதலை அறியாதாரும் உண்டா? சத்து சித்து என்னும் இவற் றின் இணக்கமே, அதாவது பிரிவற்ற நிலையே ஆநந்தம். அதனல் இவற்றின் கூட்டுணர்வைச் (சச்சி தானந்தம்) என்பது வழக்கு.

அம்மையப்பர் :

உலகச் சமயங்களில் "சைவம்" இறை வனை 'மாதொருபாகன்' என்று பிரியாப் பாகமாக வைத்து வழிபடுகிறது. உண்மை யும் அறிவும் ஆகிய இவற்றின் ஒன்றிய நிலையையே அது இப்படிக் கொண்டிருக் கிறது. இது போலக் கொண்ட பிறிதொரு சமயம் உலகில் இல்லை. வாழ்க்கையின் மூலமாக இயற்கையில் அமைந்த இவ்விரு வேறு ஆண் பெண் தன்மைகளைவைத்து உண்மை யறிவை வளர்ப்பது எவ்வளவு இயற்கையாகவும் விளக்கமாகவும் நுட்ப மாகவும் இருக்கிறது!

உலகுயிர்களை இயக்கும் 'மூலப்பொருள்' இரண்டு பிரிவாக இருந்து ஒற்றுமையோடு காரியங்களைச் செய்கிறது. ஒன்று அரு வாக இருக்கிறது. மற்றொன்று உருவாக இருக்கிறது; ஒன்று காரணமாக இருக் கிறது; மற்றொன்று காரியமாக இருக் கிறது. ஒன்று கடந்த ஒன்ருக இருக்கிறது. பிறிதொன்று தெரிந்த ஒன்ருகஇருக்கிறது. (சத்து) உண்மையாகவும், (சித்து) அறிவா கவும் உள்ள இவை இரண்டும் தனித்து நில்லாமல், பிரிவுக்கிடையே ஒன்றை ஒன்று பற்றிக்கொண்டு செயலாற்றுவத ஞல்தான், உலகம் ஓர் ஒழுங்கில் இயங்கிக் கொண்டிருக்கிறது. பயனும் விளைந்து கொண்டிருக்கிறது. தனித்தனியே இருத் தலோ இயங்குதலோ இப்பொருள்களின் இயல்பன்று; அப்படியிருக்க ஏதுவில்லை. இயல்பாகவே அவை அப்படி மொச்சை யின் இருபருப்புப்போல ஒன்றிக்கொண் டிருக்கின்றன. இறையாற்றலை 'அம்மை யப்பர்' என்பது இதனுற்ருன்.

திருவள்ளுவர் விளக்கம் :

திருவள்ளுவர் இவ்விரு மூலப் பொருளை யும், அவற்றை அறிந்தோர், அவர்கள் அறிவுரை என்னும் நான்கையுமே, தமது பாயிரத்தில் விளக்குகிருர். கடந்த ஒன்றை (ஒரு திருவடி) முதலதிகாரத்திலுைம், தெரிந்த ஒன்றை, உருவை (பிறிதோர் திருவடி) இரண்டாம் அதிகாரத்திலுைம் விளக்குகிருர். கடவுள் வாழ்த்தும், வான் சிறப்பும் அம்மையப்பர் வழிபாடு என்றே சொல்லவேண்டும். உண்மையைக் கடவுள் வாழ்த்திலுைம், தெரியாத அதைவிளக் கும் மழையை (வாழ்க்கைக்கு உதவியாக இருந்து அதனல் உண்மையை அறியும் படி செய்கிற வானை) வான் சிறப்பிலுைம், போற்றுகிருர். தெரியாத ஒன்றின் ஆற்ற லாம் மழை தெரியும்படி வருகின்றது. அதுபோலச் செயல் நடைபெறவேண்டும்; செய்வாரும் தெரியவேண்டும் என்பது கட்டாயமன்று; செய்கை ஆற்றலுடைய தாய் ஆக ஆக, அதனைச் செய்வார் புலப் பட முடியாமல் இருத்தலே இயல்பாயிருக் கிறது. செய்வாரின் செய்கையேபுலனுதல் இயல்பு: அப்போதுதான் அது நன்கு பயன்படும். உண்மையாய் அறிவாய் ஆனுல் தம்முள் இணக்கமாய்ச்சேர்ந்திருப் பதுதான் இரண்டு திருவடிகள்!

குருமார் தாம் அறிந்த உண்மைகளை (உபதேசங்களை) வழங்கத்தக்க பக்குவிகள் எங்கே எங்கே என்று தேடிக்கொண்டே இருப்பார்கள். சொத்துத் தேடிவிட்டால் அதை யாரிடம் ஒப்படைப்பது என்று மக்கள் கவலைப்படுகிருர்கள் அல்லவா? தேடுவதே பெருமுயற்சி; அதைத்தக்கபடி வைப்பது அதனினும் முதன்மையானது

அல்லவா? புறப்பெருளுக்கே இப்படியா னுல் அகப்பொருளுக்கு இது இன்னும் எவ்வளவு முதன்மையாகின்றது. அதனுல் அடிகளாரும் தாம் பெற்ற அருள் மொழியை, திருவடி ஞானத்தை எங்கே வைத்தால் நலமாக இருக்கும் என்று கலங் கினுர் போலும். 'கலங்காமலே வந்து காட்டினுய்கழுக்குன்றிலே'என்றுஅவ்வாறு கலங்காதபடி (திருவடிவைப்புக்குரிய பதி இதுவே என்று தெளியப்படுத்தும் முறை யில்) திருக்கழுக்குன்றத்திலே வந்து நின் திருக்கோலக் காட்சியைக் காட்டியரு ளினுய்!

திருக்கழுக்குன்றம் :

நல்லகாலமாக நமக்கு அருகில், "சான் ருேர் உடைத்து" என்று ஔவைப் பிராட்டியாரால் சிறப்பிக்கப்பெற்ற தொண்டை நாட்டில், திருக்கழுக்குன்றத் திருப்பதியில் திருவடி ஞானம் வைக்கப் பெற்றது. ஆண்டவன் அருளும் நமது பேறும் அப்படி இருந்திருக்கின்றன. ஆகவே, திருக்கழுக்குன்றம் நமக்கெல் லாம் ஒரு ஞானவைப்பு. மறைமலே வேதகிரி என்ற பெயருக்கு அது பொருந்தியுள்ளது. இதற்கு இலக்காகி நின்ற அம்மலே இந் நிகழ்ச்சிக்குப்பின் மேன் மேலும் சிறப்பும் புகழும் பெற்றது. பின் வந்த மூவர் பெரு மக்களாலும் பாடப் பெற்றது. அருணகிரி யாரும், நால்வர் பாடலேயும் பெற்றுளிரும் அதனைத் 'தமிழ் வேத வெற்பு' என்று புகழ்ந் தார். பட்டினத்தார் முதலிய மற்றும் பலர் பாடல்களும் நூல்களும் நன்கு அமைந் தன. ஆகவே திருநெறிச் சிறப்புக்கும் திருமறை விளக்கத்துக்கும் உரிய நிகழ்ச் சிகள் எல்லாம் அவ்விடத்தை நடு இடமா கக்கொண்டு நடைபெறுமாறும், ஆண்டுக் கொருமுறையேனும் அங்கே அன்பர்கள் எல்லாரும் ஒன்றுபட்டு வழிபாடு ஆற்றிப் பல்வகைத் தொண்டுகளேயும் எங்கும் பரவ இயற்றுமாறும் செய்வது, மிகவும் நல்லது. அடியார்களுக்கு இது கடமையா கின்றது. (தொடரும்.)

மதிப்புரை :

திருக்கேதீச்சுரத் திருப்பதிகங்கள் :

இலங்கையில் திருக்கோணமலே, திருக்கேதீச்சுரம் என்னும் இரண்டும், தேவாரப்பாடல்பெற்ற சிறப்புடைய பழம்பெரும் சிவத்தலங்கள் ஆகும். அவற்றுள், சம்பந்தரின் பாடல் பெற்றது திருக்கோணமலே. சம்பந்தர், சுந்தரர் ஆகிய இரு வருடைய பாடலும் பெற்றுத் திகழ்வது திருக்கேதீச்சுரம்!

ஈழ நாட்டில், வடமாகாணத்திலுள்ள மன்னுர் மாவட்டத்தில், மாதோட்டம் என்னும் இடத்தில் அமைந்துள்ள **திருக்கேதீச்சுரம்** என்னும் சிவத்தலம், இன்று பெருமக்கள் பலரின் முயற்சியினுல், திருப்பணிகள் செய்யப்பெற்றுச் சிறந்தோங்கி வளர்ந்துயர்ந்து வருகின்றது. அத்தலத்தின் தேவாரத் திருப்பதிகங்கள் இரண்டிற்கும் 'சித்தாந்தக் கலேச் செல்வர்' திரு. க. **வச்சிரவேல் முதலியார், B.A.,L.T.** அவர்கள் எழுதியுள்ள எளிய இனிய தெளிவுரையும்; வண்ணுர்பண்ணே நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலேயின் முன்னுள் தலேமை ஆசிரியர், வித்துவான் பண்டிதமணி திரு. ந. சுப்பையா பிள்ளே அவர்கள் எழுதிய உரைக்குறிப்புக்களும்; இத்தலத்தைக் குறிக்கும் பெரிய புராணப் பாடல்களுக்கு ஆறுமுகத்தம்பிரான் அவர்கள் எழுதிய வுரையும்; இந்நூலின்கண் தொகுத்துத்தரப் பெற்றிருக்கின்றன.

இதனைப் பேராசிரியர் திரு சி. சிவகுருநாதன், M.A., அவர்கள், செம்மையாக வும் திருத்தமாகவும் நன்கினிது பதிப்பித்திருக்கின்ருர்கள். கிடைக்கும் இடம்: "யாழ்ப்பாணக் கூட்டுறவுத் தமிழ்நூற்பதிப்புக்கழகம், செட்டியார் மடம்; வட்டுக் கோட்டை, சிலோன். விலே சதம் : 60.

— ஆசிரியர்.

மகாபாரதம்

அருண்மொழியரசு

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

(முற்றொடர்ச்சி)

(1) தாய்தந்தையர் அலங்காரத்துடன் கன்னிகாதானம் செய்து தருவது பிராம்மம்.

(2) யாகத்தின் முடிவில் யாகஞ்செய்யும் ஆச்சாரியனுக்குக் கன்னிகையைத் தானஞ் செய்வது தைவம்.

(3) இருவருஞ் சேர்ந்து தருமஞ்செய்யட்டும் என்று மனத்தால் தானஞ்செய்து விட்டுவிடுவது பிராஜாபத்யம்.

(4) வரனிடமிருந்து இரண்டு பசுக்களை வாங்கிக்கொண்டு கன்னியைத்தருவது ஆரிஷம்.

(5) மிகுந்த பொருளை வாங்கிக் கொண்டு கன்னியைத் தருவது ஆசுரம்.

(6) கன்னிகையும் வரனும் தனியே மனம் இசைந்து கலந்துகொள்வது காந்தர்வம்.

(7) தூக்கத்தில் கன்னிகையைக் கவர்வது பைசாசம்.

(8) வலிமையால் போரிட்டுக் கன்னிகையைக் கொண்டு போவது இராக்கதம்.

இனியவளே! மன்னவருக்கு இராக்கத மணமும் காந்தர்வ மணமும் சிறந்தவை. ஆசுரமணமும் பைசாச மணமும் சிறந்தவை யன்று. நீ என் விருப்பத்தைச் செய். காந்தர்வமணத்தினல் நாம் ஒன்றுபடுவோம் என்ருன்.

சகுந்தலை "பூருகுலப் பூமானே! என் பால் தோன்றுகின்ற புதல்வன் இளவரசனுகவேண்டும். இதற்குநீர் உடன்படுவீராஞல் என்னை மனைவியாக அடையும்" என்ருள்.

தருமத்தின்மீது ஆணையிட்டு மன்னன் அவளைத் தழுவினுன். இன்பக்கடலில் மூழ்கினுன்.

பின்னர் மன்னன் அவளைப் பார்த்து, "என் வாழ்க்கைத் துணைவியே; நான் அவசரமாக நகரஞ் செல்லவேண்டும். இப்போது உன்னை இவ்விதம் அழைத்துக் கொண்டு போவது என்தகுதிக்கு ஏற்றதன்று. நான் நாளை உன்னை என் அன்னை, அமைச்சர்கள், அணிகலன்கள், ஆடைகள், பல்லக்கு, மேளதாளங்கள் முதலியன அனுப்பி அரசமரியாதையுடன் அழைப்பேன். நீ வருந்தாதிரு" என்று கூறினுன். சகுந்தலை அவன் பாதமலரில் விழுந்து பணிந்தாள். அவளைப் பன்முறை தழுவி ஆறுதல் கூறி, அவளை விட்டு நீங்கினுன். நீங்கிச் செல்லும்போது கண்ணுவர் ஒருவேளை சீற்றங்கொள்வாரோ? என்ற அச்சம் அவன் உள்ளத்தில் ஏற்பட்டது. கண்ணுவரை எப்படிக் காண்பது? அவருடைய கருணை மன்னிக்கும் என்று கருதினுன். தன்நகரம் போய்ச் சேர்ந்தான்.

சகுந்தலை மன்னவன் பிரிந்த பின்னர்ப் பெரிதும் அச்சத்தையடைந்தாள். கண்ணுவர் என்ன சொல்லுவாரோ? தன்மீது கோபஞ் செய்வாரோ? என்றெண்ணி நாணி நின்ருள்.

கண்ணுவர் மாலினி நதியில் நீராடி வழிபாடுகளை முடித்துக்கொண்டு வந்தார். சகுந்தலை நாணத்துடன் வந்து அவரை வணங்கினுள். அவளுடைய முகத்தைப் பார்த்துக் கண்ணுவர், தனது ஞானவிழியால் நிகழ்ந்தவையனைத்தும் உணர்ந்தார். உலகம் புரக்கும் உத்தமஅரசனுக்கு மனைவியான பெருமையையும், அலகில்புகழுடைய அரிய மைந்தனைக் கருவுற்றஅருமையையும் உணர்ந்து, அவர் அகமிக மகிழ்ந்தார்.

''கண்ணே! இங்கே என்ன நிகழ்ந்தது; இங்குள்ள என்சீடர்கள் அறிய நீ சொல். அஞ்சற்க.'' என்று வினவினர்.

''அப்பா! என்னை மன்னிக்க வேண்டும். இம்மண்ணுலகையாளும் மதிகுல மன்னர் வந்தார்......இனி பிறக்கும் தங்கள் பேர னுக்கு அரசு தருவதாக வாக்களித்துவிட் டுச் சென்ருர்'' என்ருள்.

''மகளே! காந்தர்வ மணம் அரசருக்கு உரியது தான். நான் காட்டில் உன்னை வளர்த்தேன். தக்க வரனை எங்கே தேடு வது என்று கவன்று கொண்டிருந்தேன். தெய்வத்திருவருள் கூட்டி வைத்தது. துஷ்யந்தன் உத்தமமான அரசன். அவன் உனக்குக் கணவனுக ஆனது நீ செய்த புண்ணியம். உன் மகன் பேரரசனுக விளங்குவான். என் அன்புக் குழந்தையே! உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள் தருகிறேன்'' என்ருர். அப்பா தங்கள் மாப்பிள்ளைக்கு எல்லா நலன்களும் வளர ஆசீர்வதியுங்கள். எனக்கு அவருடைய நலனையன்றி வேறு வரம் வேண்டியதாக இல்லை'' என்ருள். கண்ணுவர் மகளைத் தடவிக் கொடுத்து வாழ்க வாழ்க என்று வாழ்த்தியருளினர்.

சகுந்தலை கணவனையே நினைத்துக் கொண்டிருந்தாள். நாள், பட்சம், மாதம், இருது, அயனம், ஆண்டு கடந்தன. அவள் சங்கல்பத்தினுற் கரு வயிற்றி லேயே தங்கியது. மூன்று ஆண்டுகள் கருச் சுமந்தாள். கண்ணுவர் மகளைப் பார்த்து 'அம்மா! என்ன காரணமோ உன் கணவனுர் அழைக்காமல் இருக்கின் ருர். துஷ்யந்தன் உத்தமமானவன். நீ இனியும் தாமதிக்க வேண்டாம். மைந் தனைப் பெறுவாய்' என்று கட்டளையிட் டார்.

சகுந்தலை தனியே சென்று தெய்வத் தைச் சிந்தித்தவுடன் உத்தமமானமகனைப் பெற்ருள். பூமழை பொழிந்தது. தேவ துந்துபி முழங்கியது. அரம்பையர் ஆடினர். இமையவருடன் இந்திரனே நேரில் வந்து 'அம்மா! சகுந்தலையே! உன் மகன் சக்ர வர்த்தியாகப் போகின்ருன். இவனுடைய ஆற்றல் நிகரில்லாதது. நூறு அசுவமேத யாகங்களும் ராஜசூயம் முதலிய அனேக ஆயிரம் ஆயிரம் யாகங்களும் செய்வான். இவனுல் உலகமே விளக்கமெய்தும்' என்று கூறினுன்.

முனிவர்கள் ஆசி கூறினுர்கள். அக் குமாரன் சிறு வயதில் புலி, கரடி, சிம்மம் முதலிய விலங்குகளை அடக்கினுன். பல விலங்குகளைக் கொணர்ந்து ஆசிரமங் களில் உள்ள மரங்களில் கட்டி வைத்தான். பல அரக்கர்களை எளிதாகக் கொன்ருன். பெரிய வலிமையுள்ள ஒரு அரக்கன் அவனை எதிர்த்தான். ஆறு வயதுடைய பரதன் அவனை இறுக்கிப் பிடித்துக் கசக் கினுன். அரக்கன் தப்பிக்கமுடியாது ஓ என்று கதறினுன். அவன் மூக்கு காது களில் உதிரம் வழிந்தது. முனிவர்கள் வந்து இந்த வேடிக்கையைப் பார்த்துப் புன்னகை புரிந்தார்கள். குழந்தையின் அடியால் அரக்கன் மாண்டான். மனித ருக்கு எட்டாத செயல் அம்மைந்தனிடம் அமைந்திருந்தது. எல்லாவற்றையும் அடக்குவதனுல் 'சர்வ தமனன்' என்று பேரிட்டார் கண்ணுவர்.

துஷ்யந்தன்:

கண்ணுவர் அம்மைந்தனுக்கு வேத வேதாங்கங்களையும் விற் பயிற்சியையும் போதித்தார். பரதனுக்குப் பன்னிரண்டு ஆண்டுகள் நிறைந்தன. சகுந்தலை கண வனை நினைந்து துயரமுற்ருள். கணவன் சென்ற திசை நோக்கி அழுவாள். அழுக் குள்ள ஆடையுடுத்து மெலிந்து போனுள். பேரனுடைய திறத்தையும் மகளுடைய கற் பின் அறத்தையும் கண்ட கண்ணுவர் புதல்வியை அழைத்துக் கூறுவார்:

''மகளே! என்ன காரணமோ உன்பதி உன்னை அழைக்காமல் இருக்கின்ருன். இருப்பினும் நீ அவனிடம் சென்று அவனுக்கு மனவாக்குக் காயத்தால் நற் பணி புரிந்து வாழ்வதுதான் உத்தமமான அறம். நீ மறுக்காதே. என்மீது ஆணை. நீ உன் மகனுடன் கணவரிடம் போய்வா'' என்று கூறிவிட்டுப் பேரனை அழைத்து ''என் செல்வமே! உன் அன்னையுடன் சென்று உன் பிதாவைச் சேர்ந்து உலகை நன்கு அரசு புரிவாயாக. உனக்கு எல்லா நலன்களும் உண்டாகும்'' என்ருர்.

சர்வதமனன் பாட்டனுருடைய பாதமலர் மீது வீழ்ந்து பகர்வான். கருணை வடிவான கண்கண்ட தெய்வமே! எனக்குத் தாயும் நீர்; தந்தையும் நீர்; இரட்சகரும் நீர்; உம் மைவிட வேறு எனக்கு ஒருவருங் கிடை யாது. உமக்குத் தொண்டு செய்வதுதான் எனக்கு இகபர நலம். கணவன் மீது அன்

புள்ள என் அன்னை போகட்டும்; அடியேன் உங்கள் காலடியில் பணிவிடை புரிந்து கொண்டிருக்கின்றேன். இனி நான் கொடிய விலங்குகளுடன் விளையாடமாட்டேன். தங்கள் கட்டளைக்கு அடங்கி வேதம் ஓதிக் கொண்டிருப்பேன். என்னை மன்னியும்'' என்று அவர் பாத மலரைப் பற்றிக் கொண்டு நின்ருன்.

மகன் சொல்லைக் கேட்டுச் சகுந்தலைகண்ணீர் வடித்தாள். கணவனைக் காண்பதில் மகிழ்ச்சியும் பிதாவைப் பிரிவதில் வருத்தமும் அடைந்தாள்.

குமரன் ''அம்மா! ஏன் அழுகிருய். உனக்குக் கணவனிடம் அன்பிருந்தால் காலையில் எழுந்து நீ போய்வா'' என்ருன்.

சகுந்தலை ''குழந்தாய்! ஒருவன் பாவஞ் செய்கின்ருன். அதன் பயனை மக்கள் நுகர்கின்ருர்கள். தினம்தினம் நான் தடுத்தும் நீ என் சொல்லைக் கேளாமல் யானைகளைக் கசக்கியும், புலிகள் சிம்மங்கள் நிறைந்த வனத்தைக் கலக்கியும், தாத்தாவுக்குக் கோபம் உண்டாக்கினுய். அதனுல் உன்னையும் என்னையும் அனுப்புகின்ருர். நான் மன்னவரிடம் போக மாட்டேன். ஆதரவு இன்றி ஆற்றங்கரையில் அழுது கொண்டிருந்தஎன்னை அன்னையிலும் பன்மடங்குபட் சங்காட்டி இதுவரை கண்ணை இமை காப்பதுபோலக் காத்தருளிய இக்கருணைத் தெய்வத்தை எவ்வாறு பிரிந்திருப்பேன்? இவர் கருணைக்கு நிகர் உண்டா? இவருடைய பாத வணக்கம் பதினுறு உலகங்களை யுந்தரும்'' என்று கூறி அழுது நின்ருள். அருந்தவ முனிவர் அடிமலர் மீது வீழ்ந்தாள்.

பந்த பாசம் இல்லாத பரமஞானியின் உள்ளம் கருணையினுல் தவித்தது. மகளைத் தூக்கி எடுத்து ''அம்மா! நீ அழாதே. அழுவதினுல் என் மனம் கலக்கமுறுகிறது. பதிவிரதைகள் நடையை நீ அனுசரிக்க வேணும். பதியின் அருகில் இருப்பது உனக்கு அறம். அதை நீ நழுவவிடக் கூடாது. ஆதலால் நீ சென்று பதிக்குப் பணிவிடை செய்'' என்று கூறிவிட்டுப் பாலனைப் பார்த்துப் பகர்வார்.

''குழந்தாய்! நீ எனது தௌகித்திரன். இலிலனுடைய பௌத்திரன். உன் தாய்க்குக் கணவனிடம் போவதில் அதிக விருப்பம் இருக்கின்றது. நீ முறைப்படி உன் பிதாவிடம் சேர்ந்து இப்பூமியை அறநெறி வழுவாது அரசாட்சி செய். நான் அடிக்கடி வந்து உன்னைப் பார்த்து ஆசீர்வதிப்பேன். என் சொல்லைத் தட்டாதே'' என்று கட்டளையிட்டார். சீடர்களை அழைத்து ''முனிவர்களே! பெண்கள் பிதாவின் வீட்டில் நெடுங்காலம் வசித்தால் அது புகழை யழிக்கும். இங்கிருந்து இரண்டு யோசனையளவு தொலைவில், கங்கையும் யமுனையும் சந்திக்கும் இடத்தில் பிரதிஷ்டான புரம் என்ற நகரம் உளது. இந்தப் பெண் வனத்தில் பிறந்து வனத்தில் வளர்ந்தவள். ஒன்றும் அறியாதவள். இவளை அழைத்துக் கொண்டு போய் அரண்மனையில் சேர்த்துவிட்டு வாருங்கள். வழியில் காய் கனிகளை யருந்துங்கள். தாமதிக்க வேண்டாம்'' என்ருர்.

சகுந்தலை, கண்ணுவர் பாதமலர் மீது வீழ்ந்து, ''அப்பா! நான் அறிந்தோ அறியாமலோ குற்றங்கள் புரிந்திருந்தால் பிதா என்ற முறையில் பொறுத்துக்கொள்ளும். போய் வருகிறேன்'' என்ருள். கண்ணுவர் பதில் கூறமுடியாமல் திணறினர். அவர் கண்களில் இருந்து முத்து முத்தாக நீர் சொரிந்தது. சிறந்த முனிவராக இருந்தும் மானிடத் தன்மையினுல் வருந்திப் பிரியாவிடை தந்தார்.

தண்ணீரை மட்டும் பருகுபவர்களும், வாயு பட்சணம் புரிபவரும், சருகுகளை மட்டும் புசிப்பவர்களும்,காய் கிழங்குகளை யுண்பவர்களும், இலைத்தவர்களும், நரம்பு தோன்றி எலும்புக் கூடாக இருப்பவர்களும், மரவுரி தரித்தவர்களும், சிறந்த தவமுள்ளவர்களுமான சடைமுடியுடையவர்களும், முண்டனம் புரிந்து கொண்டவர்களுமான முனிக் கூட்டத்தினர், சகுந்தலையையும் பரதனையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். வழியில் மலை, வனம், நதி இவைகளைக் கடந்து புதபகவானுக்காக இந்திரன் அமைத்த பிரதிஷ்டான புரஞ் சேர்ந்தார்கள்.

நகர மாந்தர்கள் சகுந்தலையையும் மைந்தனையும் பார்த்து ''சயந்த குமாரனுடன் சசிதேவி வருகின்ருள்போலும். குமாரக்கடவுளுடன்உமாதேவி வருகின்ருள் போலும். இம்மாதரசியின் பெருமை இமயமலையிலும் உயர்ந்தது. இக்குமாரன் நம் மன்னவனைப்போல் விளங்குகின்ருன்'' என்ருர்கள். சில மூடர்கள் முனிவர்களின் வற்றல்

உடம்பைக் கண்டு ஏளனம் புரிந்தார்கள். முனிவர்கள் உடனே மறைந்து போனார்கள். சகுந்தலை முனிக்குலம் மறைந்து நீங்கியதைக் கண்டு அழுதாள். பரதன் முன் பார்க்காத உயர்ந்த மாளிகைகளையும் கோபுரங்களையும் அரண்மனையின் தனிச் சிறப்பையுங் கண்டு அதிசயம் அடைந்தான்.

சகுந்தலையையும் பாலனையும் பார்த்து மக்கள் பலவாறு புகழ்ந்து துதி கூறினார்கள். சகுந்தலை நாணத்துடன் அரசவை சேர்ந்தாள். ஒளி மயமான மணித்தவிசில் மந்திரிகள் புடைசூழ வீற்றிருக்கும் மன்னவனைப் பார்த்துப் பணிந்தாள்.

மன்னவன் "மாதரசே! நீ யார்? உன் கணவனார் யார்? இங்கு ஏன் வந்தாய்? கூறு" என்றான்.

அதற்குச் சகுந்தலை, "மகனே! உன் பிதாவை வணங்கு" என்று கூறினாள்.

அதுவே அவன் வினாவுக்கு விடையாக அமைந்தது. அவளைத் தன் மனைவி யென்றும், அவனைத் தன் மகன் என்றும் உணர்ந்த மன்னவன் ஒரு கருமத்தை உள்ளத்தில் வைத்து, வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் கூறுவானாயினன்.

"ஏ பெண்ணே! இவன் என் மகனா? இவன் அன்னையாகிய நீ என் மனைவியா? இது ஒரு புதுமை. எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே?" என்றான்.

சகுந்தலை கலக்கமுற்றாள். "காவலரே! பதினைந்து ஆண்டுகட்கு முன் தாங்கள் கண்ணுவருடைய தவவனம் வந்து, என்னைக் கண்டு என்னை மனைவியாக அடைந்தீர். அப்போது நீர் சொன்ன சொல்லைக் காப்பாற்றும்" என்றாள்.

துஷ்யந்தன், "மாதே! உன்னைப் பார்த்ததாக எனக்கு நினைவில்லை. நான் ஒரு போதும் உண்மைக்கு மாறாக நடக்கமாட்டேன். நீ கூறுவது பிழையெனக் கருதுகின்றேன். நின்றாலும் நில்; சென்றாலும் செல்" என்றான்.

துக்கமும், வெட்கமும் அடைந்த சகுந்தலை உணர்வு குன்றித் தூண்போல் நின்றாள். சினத்தினால் அவளுடைய உதடுகள் துடித்தன. பார்வையால் எரிக்கின்றவளைப் போல் மன்னவனைக் குறுக்காக நோக்கினாள். தவவலிமையை அடக்கிக் கொண்டாள். சிறிது நேரம் மௌனமாகவே நின்றாள். ஒருவாறு தேறி உரைக்கலானாள்.

மன்னவரே! சத்திய நெறி தவறாத நீர் என் பொருட்டு அஞ்சாமல் பொய் புகலுகின்றீர். மனச்சாட்சியைக்கொன்றுவிட்டுப் பேசுகின்றீர். நல்லற முணர்ந்த நீர் நாடோடியைப் போல் நவில்கின்றீர். உண்மையை மறைப்பீராயின் உமது தலை நூறு துண்டுகளாக உதிர்ந்துபோம். இதோ பாரும்; இவன் தங்களைப் போலவே இருக்கின்றான். ஆத்மாவே புத்திரனாய்ப் பிறக்கின்றது என்பது வேத மொழி. கற்புடைய மனைவி இம்மைக்கும் மறுமைக்குந் துணையாகின்றாள். மனைவி கணவனையும் குலத்தையுங் கரையேற்றுகின்றாள். பொதிய மலையில் விளையும் சந்தனத்தை விட மகனைத் தழுவுவது குளிர்ச்சியாகும். சதானந்தத்திற்கு அடுத்தது சுதானந்தம். இவன் பிறந்தபோது இவன் நூறு அசுவமேத யாகங்கள் செய்து பூரு குலத்தைப் புகழால் வளர்ப்பான் என்று வானொலி பிறந்தது; இவன் உம்முடைய குமாரன்.

பிரம்மாவின் மகளான மேனகை விசுவாமித்திரரிடம் என்னைப் பெற்றாள். என் பிதா விசுவாமித்திரர். சிறந்த காதிபுத்திரர். மேனகை, மாலினி நதிக்கரையில் என்னைவிட்டுவிட்டுச் சுவர்க்கஞ் சென்றாள். சகுந்தம் என்னும் பறவைகள் காத்ததனால் சகுந்தலை என்று பேர் பெற்றேன். வேதங்களில் கரைகண்ட கண்ணுவ முனிவர் கருணையினால்என்னை எடுத்து வளர்த்தார். வேட்டையாடி இளைத்த நீர் ஆருமில்லாத ஆச்சிரமத்தில் என்னைக் கண்டீர். இனிய சொற்களைக் கூறிக் காந்தர்வம் என்ற மணத்தால்என்னை மருவினீர்.உமது மனம் கல்லா? இரும்பா? பெண் என்றால் பேயும் இரங்குமே? நீர் இரங்காமல் இருக்கிறீர். முற்பிறப்பில் நான் என்ன பாவஞ் செய்தேனோ? குழந்தைப் பருவத்தில் தாய் தந்தையரால் விடப்பட்டேன். இப்போது உம்மால் விடப்படுகின்றேன். நான் செல்கிறேன். உமது புதல்வனை விடாதீர்" என்றாள்.

துஷ்யந்தன் "சகுந்தலையே! பெண்கள் பொய் புகல்வார்கள். உன் சொல்லை

எவன் நம்புவான்; உன்னை நான் சந்தித்த தில்லை. விச்வாமித்திரர் எங்கே? மேனகை எங்கே? அநாதையான நீ எங்கே? இந்த உன் மகன் வயதுக்கு மீறிய வளர்ச்சியை யடைந்துள்ளான். ஆதலால் அரசனிடம் பொய் சொல்லக்கூடாது. விருப்பப்படி செல்'' என்ருன்.

சகுந்தலை ''மன்னவரே! நீர் அஞ்சாமல் பொய்யைக் கூறுகின்றீர். கொற்றவனுக்கு வேண்டியது குற்றமற்ற மனைவியும், நற்ற வப் புதல்வனும், உண்மை நெறியும் ஆகும். என்னை மறுப்பதனல் இந்த மூன்றையுமே நீர் மறுக்கின்றீர். நூறு கிணற்றைவிட ஒரு குளம் சிறந்தது; நூறு குளங்களைவிட ஒரு வேள்வி சிறந்தது. நூறு வேள்விகளைவிட ஒரு புதல்வன் சிறந்தவன்; நூறு புதல்வர்களைவிட ஒரு மெய்ம்மை சிறந்தது. ஆயிரம் அசுவ மேதயாகங்களையும் ஒரு சத்தியத்தையும் துலாக்கோலில் வைத்தால் சத்தியமுள்ள தட்டேதாழும். எல்லா வேதங்களையும் ஓது வதும், எல்லாப் புண்ணிய நதிகளிலும் ஆடுவதும், சத்தியத்தின் பதினுயிரத்தில் ஒரு பாகத்துக்கு ஈடாகாது. நீர் என்னை விடவில்லை; சத்தியத்தை விடுகின்றீர். கண்ணுடியில் நிழல் தெரிவதுபோல் இவன் உம்முடைய உருவத்தை யொத் திருக்கின்ருன் பாரும். உண்மையை ஒளிக் கின்ற உம்மை விட்டுச் செல்கின்றேன். ஆனல், நெருப்பை ஒளிக்கமுடியாது. என் கற்புத் தீயை மறைக்க முடியாது. நீர் சுகமாக இரும். நான் போகின்றேன் என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள். அவள் தலையில் அக்கினி புகையுடன் வெளிப் பட்டது. அவள் அத்தீயை உள்ளுக்குள் அடக்கிக் கொண்டாள். அப்பொழுது அந்த சபை அசைவற்று இருந்தது. அமைச்சர் முதலியோர் தயக்கமுற்ருர்கள். இடி இடிப்பதுபோன்ற ஒரு ஒலி வானில் தோன்றியது.

''துஷ்யந்தனே! தாய் தோற்பை போன்றவள். மைந்தன் தந்தையைச் சேர்ந்தவன். இவன் உன்னுடைய குமா ரன், சகுந்தலை கூறியது உண்மை. இவள் கற்புக்கரசி. இவளை ஏற்றுக்கொள்.''

நாலு திசைகளிலும் தேவர்கள் ''அர சனே! உத்தமமான கற்புள்ளவள் சகுந் தலை. இவன் உன் மகன். இவள் மனம் நொந்தால் உலகம் அழியும். இவனை நீ தாங்கிக் கொள். தாங்கிக்கொள்வதனுல் இவன் பரதன் என்ற பெயர் பெறக்கட வன். பரதனுலுண்டான புகழ் பாரதி எனப்படும். இவனல் இந்தக் குலத்துக்கே பாரதம் என்ற பெயர் வரும். இவனுக்கு முந்தினவர்களும் பிந்தினவர்களும் பாரதர் களேயாவார்கள்'' என்று கூறினர்கள். அப்போது பரதன்மீது பூமாரி பொழிந்தது.

இந்தத் தெய்வ வாக்கைக் கேட்டு மன்னன் எழுந்து மகனைத் தழுவி எடுத் தான். ''சபையோர்களே! நான் சகுந் தலையைக் கண்டவுடன் அங்கீகரித்திருப் பேனுயின் இவனை என் மகன் என்பதில் உலகம் சந்தேகப்படும். அதனல் தான் தாமதித்தேன். என் மகன்மீது ஜனங் கட்குச் சந்தேகம் வரக்கூடாது. தேவ வாக்குவரும் என்றே நான் காத்திருந் தேன்.'' என்று கூறி, சகுந்தலையைக் கருணையுடன் பார்த்து அவள் கரத்தைப் பற்றி அரியணைமீது ஏற்றி அமர்த்தினுன். அவையில் ஆனந்தம் ஏற்பட்டது.

''மாதரசே! உன்னைக் கண்டவுடன் நான் வரவேற்றிருப்பேன். உலகம் உன்னை நம் பாது. உனக்கும் எனக்கும் இரகசியத்தில் ஏற்பட்ட நட்பையும் நம்பாது, பின்னே பழிவரக்கூடும். தேவ வானெலி மூலம் உலகிற்கு உணர்த்தவே நான் இப்படிச் செய்தேன். என் செல்வமே! நீ பொறுத் துக்கொள். இதுமுதல் நீ பட்ட மகிஷி'' என்ருன். எல்லோரும் சகுந்தலையை வணங்கினர்கள்.

அரண்மனைக்கு அழைத்துச் சென்று ''அம்மா! இவள் உன் மருமகள்; இவன் உன் பேரன். இவர்களை ஆசீர்வதியுங்கள்'' என்று தன் தாய் ரதந்தரியிடம் கூறி னுன் மன்னன். வணங்கிய மருமகளையும் பேரனையுந் தழுவி அவள் ஆனந்தமுற் ருள். ''அம்மா! மருமகளே! உன் உத்தம மான குணங்கள் உலகம் புகழத்தக்கவை. இவனுல் இந்தக் குலம் வளர்ச்சியடைக. எல்லா நலன்களையும் நீ பெற்றுச் சுகமாக இருப்பாயாக!'' என்று கூறினுள்.

சகுந்தலை உயர்ந்த ஆடை அணிகலன் களால் அலங்கரிக்கப்பட்டாள். பட்டமகிஷி யாக விளங்கினுள். மகனுக்குப் பரதன் என்ற பேரிட்டு இளவரசுப் பட்டங்கட்டி னுன். பரதனுல் நாடு நலம் உற்றது. பின்னர் நூறு ஆண்டுகள் துஷ்யந்தன் அரசு புரிந்து வனம் புகுந்து தவஞ் செய்து நற்கதி பெற்ருன்.

சந்தனு :

பரதன் சரத நெறி நின்று உலகை இனிது அரசு புரிந்தான். எல்லா அரசர்களும் அவனைப் பணிந்தார்கள். சக்கரவர்த்தியாக இருந்தான். கண்ணுவ முனிவரைத் தலைவராகக் கொண்டு பல அசுவமேத யாகங்களைச் செய்தான். ஆயிரங்கோடி பொன் தட்சிணையாகக் கண்ணுவருக்குத் தந்தான். இப்படி யமுனைக் கரையில் நூறு அசுவமேத யாகங்கள் புரிந்தான். சரஸ்வதி நதிக் கரையில் முந்நூறு அசுவமேதங்களைச் செய்தான். கங்கைக் கரையில் நானூறு அசுவமேத வேள்விகளைச் செய்தான். பரத வம்சத்திற்கு அவன் காலம் முதல் பெரும்புகழ் பரவியது.

பரதனுக்குப் பல மனைவியர்களிடம் பல புதல்வர்கள் பிறந்தார்கள். அவர்கள் தன் தகுதிக்குத் தக்கவர் அல்லர் என்று அம் மைந்தர்களை அவன் ஆதரிக்கவில்லை. அதனால் அவனுக்குப் பிள்ளைகள் பிறந்தது வீணாகிவிட்டது. அதன் பின் பெரிய யாகங்களைச் செய்து பரத்துவாச முனிவர் அருளினால் புமன்யு என்ற புத்திரனை யீன்றான். அவனுக்கு உரிய காலத்தில் இளவரசுப் பட்டம் ஈந்தான்.

புமன்யுவுக்கு சுகோத்திரன் முதலிய ஐந்து புதல்வர்கள் பிறந்தார்கள். சுகோத்திரன் ராசசூயம் அசுவமேதம் முதலிய பல வேள்விகளைச் செய்தும், எங்கும் ஆலயங்களை யமைத்தும் உலகத்தை நன்முறையில் அரசு புரிந்தான்.

சுகோத்திரனுக்கு அஜமீடன், ஸுமீடன், புருமீடன் என்று மூன்று மைந்தர்கள் பிறந்தார்கள். அஜமீடனுக்கு ரிட்சன் பிறந்தான்.

ரிட்சனிடம் சம்வருணன் தோன்றினான். சம்வருணன் உலகையாளும்போது குடிகள் பல வகையில் அழிவு அடைந்தார்கள்.

மழையின்மை, பிணி, மரணம் ஆகிய பற்பல இடர்கள் விளைந்தன. அதனால், தேசம் சிதறிப் போயிற்று. பாஞ்சால தேயத்தரசன் பத்து அக்ரோணி சேனைகளுடன் எதிர்த்து சம்வருணனை வென்றான். சம்வருணன், மனைவிமந்திரிகள் நண்பர்களுடன் அஞ்சி அத்தேசத்தை விட்டு சிந்து என்ற நதத்தின் கரையில் உள்ள புதர்களில் உறைந்தான். ஆயிரம் ஆண்டுகள் துன்புற்று மலைகளில் வசித்தனன்.

பின்னர் அவன் சிறந்த வசிட்டரைச் சந்தித்தான். அவரை அடி வணங்கித் தனக்கு நன்மை புரியுமாறு வேண்டினான். அந்த அருந்தவ முனிவருடைய அருட் சக்தியால் சம்வருணன் பகைவரை வென்று இனிது அரசு புரிந்தான். வசிஷ்டருடைய உதவியால் சூரிய குமாரி தபதியை சம்வருணன் மணந்து ஒரு குமாரனைப் பெற்றான். குருவருளால் எல்லா நலன்களுந் தனக்குக் கிடைத்தபடியால் தன்மகனுக்குக் "குரு" என்று பேர் சூட்டினான்.

குரு மிக்க மேன்மையாக ஆண்டான். அதனால், அந்த நாடு குருநாடு என்றும், அக்குலம் குருகுலம் என்றும் பெரும் புகழ் பெற்றன. குரு, குருக்ஷேத்திரம் என்ற புண்ணிய க்ஷேத்திரத்தையும் உண்டாக்கினான்.

குருவின் மகன் அசுவவான்.

அசுவவானின் மகன் பரிட்சித்து.

பரிட்சித்தின் புதல்வன் திருதராட்டிரன்.

திருதராட்டிரனுடைய மகன் அத்தி.

அத்தி, ஒரு நகரை அமைத்தான். அது அத்தினபுரம் என்று பேர் பெற்றது.

அவனுக்கு ப்ரதீபன் என்ற அரிய புதல்வன் பிறந்தான். பிரதீபன் மிகப் புகழ் பெற்று அத்தினபுரத்தில் இருந்து உலகை ஆட்சி செய்தான்.

மகாபிஷக் என்ற இட்சுவாகு குலத்து மன்னன் முன்னொரு காலம் பூமியைப் பரிபாலித்து வந்தான். அவன் ஆயிரம் அசுவமேத வேள்விகளையும் நூறு இராச சூய வேள்விகளையும் செய்து பிரமலோகம் அடைந்தான். பிரம சபையில் அமர்ந்திருக்கும் பதவி பெற்றான். பிரமதேவரைச் சேவிக்க முனிவர்களுந் தேவர்களும் வந்தார்கள். கங்காதேவியும் வந்தாள். காற்றினால் கங்கையின் ஆடை சற்று விலகியது. தேவமுனிவர் கூட்டம் தலைகுனிந்தது. மஹாபிஷக் மட்டும் கங்கையைப் பார்த்தான். அது கண்டு பிரம்மதேவர் சீறி "மூடனே, மூவுலகுக்கும் அன்னையாகிய கங்கையை நீ விரும்பிப் பார்த்தாய். மனிதத்தன்மையால் மதி கெட்டாய் அதனால் நீ மண்ணுலகில் பிறக்கக் கடவது. இக் கங்கையின் ஒரு கூறு மண்ணில் பெண்ணாகப் பிறக்கும். அவள் உன் மனம் நடுங்குங் கருமத்தைச் செய்வாள். அவளுடன் மருவி, பின் இங்கு வரக்கடவாய்" என்றார்.

அந்த மஹாபிஷக் பூலோகத்தில் யாரைப் பிதாவாக அடையலாம் என்று சிந்தித்தான். சந்திரகுல மன்னனாகிய பிரதீபனைத் தந்தையாக நினைத்தான்.

பிரம தேவரின் ஏவலால் கங்கையும் பூமியில் பிறக்கும்படி கட்டளை யிடப் பட்டாள்.

—தொடரும்

ஸ்ரீராமாயண ரசப்பிரவாகம்

மகாவித்துவான். ஸ்ரீமத். பி.ப. அண்ணங்கராசாரிய சுவாமிகள்

(காஞ்சிபுரம்.)

ஸ்ரீ ராமாயணத்தில் வான்மீகி நாரத சம்வாதத்தில், பதினைந்தாவது வினா இனி விவரிக்கப்படுகிறது. அசூயையில்லாதவன் யாவன்? என்பது இந்த வினாவின் பொருள். நற்றங்களையும் குற்றமாகக் கொள்ளும் துர்க்குணம் அசூயை எனப் படும். அஃதில்லாதவன் இராமபிரான் என்று தேறி நிற்கும்.

அசூயையின் பிரபாவம்:

உலகில் மனிதருடைய தன்மைகள் ஒவ்வொருவரிடம் ஒவ்வொருவிதமாய் இருக்கும். குணங்களைக் குணமாகவே கொள்வது சிலருடைய இயல்பு. குணங்களையும் குற்றமாகக் கொள்வது பலருடைய இயல்பு. குற்றங்களையும் குணமாகக் கொள்வது மிகச் சிறந்த குணவாளரின் இயல்பு. குற்றங்களைக் குற்றமாகவும், குணங்களைக் குணமாகவும் கொள்வது கூட, ஒரு சிறந்த குணமென்று சொல்லலாம். ஏன் என்னில்; குணங்களையும் குற்றமாகவே கொள்ளும் இயல்பினர் மலிந்த இந்நில வுலகத்தில், உள்ளதை உள்ளபடி கொள்வாருளரேல் வியக்க வேண்டியதேயாகும். அப்படிப்பட்டவர் ''மநுஷ்யாணும் ஸஹஸ்ரேஷு கச்சித்'' என்று கீதையிற் சொன்னபடி, பல்லாயிரவரில் ஒருவர் இருவரே தேறக் கூடும். குணங்களையும் குற்றமாகக் கொள்வதே அசூயையாதலால், அந்தத் தீய குணத்தை வென்றவர்கள், உலகில் தேடிப் பிடிக்க வேண்டிய நிலையில் தான் உள்ளார்கள். உலகில் சகலவிதமான வியாதிகளுக்கும் மருந்துண்டு; அசூயை என்னும் வியாதிக்கு மட்டும் மருந்தே கிடையாது.

சங்கல்ப சூர்யோதயத்தில் வேதாந்த தேசிகர் அற்புதமாக இரண்டு சுலோகங்கள் பணித்துள்ளார்; (1) ''மயிதத்தாவதாநாயாம்'' (2) ''நிரவதி குண க்ராமே'' என்பன. இவற்றுள் முதல் சுலோகத்தின் கருத்தாவது; அசூயா தேவி சோர்வு சோம்பலால் உறங்கிப் போனால் பகவான் குணசாலியென்று பேர் பெறமுடியும்; அந்த அசூயாதேவி கண்ணுறங்காதிருக்குமளவில் பகவானாலும் குற்றமற்றவன் என்கிற பெயர் பெற முடியாது என்பதாம். இரண்டாவது சுலோகத்தின் கருத்தாவது; தோஷம் என்பது சிறிதுமில்லாதவனும் எல்லை கடந்த திருக்குணங்களுக்குக் கடல் போன்றவனுமான இராமபிரானிடத்தும் அன்றோ, சில பாபிகள் வசை கூறுகின்றார்கள். எவ்வித வசை கூறுகின்றார்கள் என்னில்; முதல் முதலாகத் தாடகாவதம் ஆகிற பெண் கொலையைச் செய்தான் என்றும், குற்றம் அற்றவனை வாலியை மறைந்து கொன்றான் என்றும், கரவதத்தில் மூன்றடி பின் வாங்கினான் என்றும், இங்ஙனே வசை கூறுகிறார்கள். குணக்கடலான இராமன் திறத்திலேயே இங்ஙனேயாம்போது, மிகச் சில குணங்களையுடையராய்க் குற்றமே வடிவெடுத்திருப்பவர்களான நம்போல்வார் திறத்து உலகம் வசை கூறுவது வியப்போ? என்பதாம்.

ஆக, நற்றங்களையும் குற்றமாக நினைப்பதும், அப்படி பிறர்க்கு உரைப்பதுமான தன்மைக்கு அசூயை யென்பது பெயராய், இதற்கு எதிர்த் தட்டான குணத்திற்கு வாத்சல்யம் என்று பெயராயிருக்கும். 'வத்சலன் யார்?'' என்னுங்

கேள்வியின் ஸ்தானத்தில்தான் இங்கு "அசூயை இல்லாதவன் யார்?" என்னுங் கேள்வியுள்ளது. அசூயை இல்லாமை என்பது மாத்திரம் உயர்ந்த குணம் ஆக மாட்டாது. ஆதலால், குற்றங்களைக் குற்றமாகக்கொள்ளாத அளவோடு நில்லாமல், நற்றமாகவும் கொள்ளுகையாகிற வாத்சல்யம் உடையவன் யாவன்? என்று கேட்பதே இங்குற்றது.

குற்றங்களை நற்றமாகக் கொள்வதன் சிறப்பு:

அன்பின் மிகுதியினல் குற்றங்களைக் காணுமலிருந்து விடுவது உண்டே ஒழிய, குற்றங்களை நற்றமாகவும் கொள்வது உண்டோ? நம்முடைய செல்வக் குழந்தைகள் குற்றங்கள் செய்தால் அதுகண்டு சீறித் தண்டிப்பதும் சிலபோதுண்டு; சில போதுகளில் குற்றங்களைக் காணுமல் (தண்டியாமல்) இருந்து விடுவதுமுண்டு. இவ்வளவே யொழியக் குற்றங்களையும் நற்றமாகக் கொள்வதென்பது உண்டோ? என்று சிலர் கலங்கியிருப்பார்கள். அவர்கள் தெளிவதற்கு ஒரு சிறு விஷயம் சொல்லுகிறேம்; தகப்பன் வெளியே சென்றிருக்கும்போது குமாரன் பல தீம்புகள் செய்கிருன். தகப்பனுர் வீட்டுக்கு வந்தவுடனே கோள் சொல்லித் தருமவர்கள் அத்தீம்புகளைச் சொல்லும் போது, தகப்பனுர் குமாரனைத் தூணில் கட்டியடிப்பதுமுண்டு, கிடக்கட்டுமென்று வாளாவிருந்து உபேட்சை காட்டுவதுமுண்டு; செய்த தீம்புக்கு உகந்து எடுத்தணைத்து அன்புமிக முத்தமிட்டு உச்சிமோந்து, உள்ளம் பூரித்திருப்பதைக் காட்டுவதுமுண்டு.

கண்ணபிரான் "மச்சொடு மாளிகையேறி மாதர்கள் தம்மிடம் புக்குக் கச்சொடு பட்டைக் கிழித்துக் காம்பு துகிலவை கீறித் தீமைகள்" செய்தவற்றை முறையிடும்போது, யசோதைப் பிராட்டி ஓர் நெடுங்கயிற்றல் தீரா வெகுளியளாய்ச் சிக்கன ஆர்த்தடிப்பதுமுண்டு; "நானுமுரைத்திலேன் நந்தன் பணித்திலன் நங்கைகாள் நானென்செய்கேன்" என்பது முண்டு; "அஞ்சவுரப்பாள் அசோதை ஆணடவிட்டிட்டிருக்கும்" என்னும்படி "என்குட்டனே முத்தந்தா" என்பதுமுண்டு. குற்றத்தை உகந்து நற்றமாகக் கொள்ளும் அன்பு நிலை இதுவே காணீர். இத்தகைய நிலை எம்பெருமானுக்குச் சேதனர்களில் சிலர் திறத்தில் சிற்சில சமயங்களில் தோன்றுவதுண்டு; "தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல், என்னடியாரது செய்யார், செய்தாரேல் நன்று செய்தாரென்பர்போலும்" என்கிற பெரியாழ்வார் பாசுரத்தின் சுவைமிக்க பொருளைச் சொல்லவல்லாரிடத்து, இதன் விரிவு கேட்டுணரத்தக்கது.

விபீஷணுழ்வானிடத்தில் காட்டிய வாத்சல்யம் :

ஸ்ரீராமாயணத்தில் ஸ்ரீராமபிரான் இப்பெருங்குணத்தைக் காட்டின இடங்களில் தலையான இடமொன்று கேண்மின்;— விபீஷணுழ்வான் "ஸர்வலோக சரண்யாய ராகவாய மகாத்மனே" என்று பெருமிடறு செய்து கூப்பிட்டு, அடைக்கலம் புகுந்தவன்று இரண்டு பக்ஷங்கள் தோன்றின; 'இவன் துஷ்டனுகையாலே அங்கீகரிக்கத் தக்கவன் அல்லன்' என்று சுக்ரீவன் முதலானேர் கூறினர். இவன் 'அதுஷ்டனுகையாலே (யோக்யனுகையாலே) அங்கீகரிக்கத்தக்கவனே' என்று அனுமன் கூறினன். இது அனைவரும் அறிந்ததே. சக்ரவர்த்தித் திருமகனுர் சுக்ரீவ பட்சத்தைக் கண்டித்து மாருதி பட்சத்தை ஆதரித்ததாக எல்லாரும் கிரகித்திருப்பார்கள். அப்படியல்லாமல் ஸ்ரீராகவன் சுக்ரீவ பட்சத்தோடொப்ப மாருதி பட்சத்தையும் கண்டித்து, மூன்ருவதாக ஒரு விலட்சண பட்சத்தைத் தான் வெளியிட்டருளினதாக அபயப்ரதானசாரத்தில் வேதாந்ததேசிகர் அற்புதமாக அருளிச் செய்கிருர். அந்த மூன்ருவது பட்சம் எதுவாயிருக்கும் என்று, அறிஞர்கள் தம்தம் உள்ளத்தில் சற்று ஆராய்ந்து பார்க்கவேணும். எவ்வளவு ஆராய்ந்தாலும், அது நம்போல்வாருடைய மேதைக்கு எட்டாது. விபீடணனைக் கைக்கொள்ளலாகாதென்று, சுக்ரீவாதிகள் கூறினுர்கள்; அவனைக் கைக்கொள்ள வேணும் என்று அனுமன் கூறினன்; முடிவாகப் பெருமாள் அவனைக் கைக்கொண்டார்; ஆகவே, சுக்ரீவ பட்சத்தைத் தள்ளி மாருதி பட்சத்தையே பெருமாள் ஆதரித்தார் என்று, இவ்வளவுதான் நம்போல்வாரால் கிரகிக்க முடியும்.

சுக்ரீவாதிகள் சொன்ன வார்த்தையைப் பெருமாள் பூர்த்தியாகக் கண்டித்தாரா? மாருதியின் வார்த்தையைப் பூர்த்தியாக ஆமோதித்தாரா? என்று பார்க்கவேணும். பார்க்குமளவில் இரண்டும் இல்லையென்றே

தேறும். சுக்ரீவனுடைய வாதத்தில் "விபீஷணன் துஷ்டனாகையாலே கைக்கொள்ளத் தகாதவன்" என்றுள்ளது; இதில் கைக்கொள்ளத் தகாதவன் என்பதை மாத்திரம் பெருமாள் கண்டித்தாரே ஒழிய 'துஷ்டனாகையாலே' என்கிற ஏதுவையும் கண்டித்தாரல்லர். மாருதியின் வாதத்தில் 'விபீஷணன் யோக்யனாகையாலே கைக்கொள்ளத்தக்கவன்' என்றுள்ளது. இதில் கைக்கொள்ளத் தக்கவனென்பதை மாத்திரம் பெருமான் ஆதரித்தாரே யொழிய 'யோக்யனாகையாலே' என்கிற ஏதுவையும் ஆதரித்தாரல்லர். ஆகவே, இரு கட்சியினும் ஆதரித்த அம்சமும் உண்டு, கண்டித்த அம்சமும் உண்டு என்று தேறிற்று. இனி, பெருமாளுடைய மூன்றாவது பட்சமாகத் தேறினது யாதெனில், 'விபீஷணன் தோஷவான் ஆகையாலேயே கைக்கொள்ளத் தகுந்தவன்' என்பதுதான். இது சுக்ரீவ பட்சமும் அன்று. மாருதி பட்சமும் அன்று என்பதை நாம் சொல்லவேணுமோ?

வேதாந்ததேசிகர் விளக்கம் :

உலகில் ஆச்சரியமாக ஸ்ரீராமாயணப் பிரவசனம் செய்வார் பலருளர். ஆனால், இத்தகைய ரஸ்யமும் ரகசியமான அர்த்த விசேஷம், வேதாந்த தேசிகருடைய திருவாக்கில் அவதரித்திருந்தும், இதையெடுத்துரைப்பார் மிகச் சிலரே. இப்படி அர்த்தம் செய்யும் படியாக ஸ்ரீராமாயண மூலத்தில் என்ன இருக்கிற தென்னில் "மித்ர பாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந" என்றும், "தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேதத கர்ஹிதம்" என்றுமுள்ளது. இவற்றைச் சிறிது விவரிப்போம்.

'மித்ரபாவேந' என்ற விடத்தில் மித்ர சப்தம் பக்தனென்னும் பொருளிலாயது. நேசனென்னும் பொருளையே கொண்டாலும் குற்றமில்லை. விபீஷணன் மெய்யன்பனாக வந்தானல்லன்; அன்பனென்று வேஷம்பூண்டு (பாவனை கொண்டு) வந்தவனே; அப்படிப்பட்டவனை நான் கைவிட மாட்டேன் என்கிறார் பெருமாள். இனி, "தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத்" என்ற விடம் உயிரானது. இதில், 'யத்யபி' என்றதை வார்த்தைப்பாடாக விட்டொழித்து 'தோஷ; தஸ்ய ஸ்யாத்'—நான் கைக்கொள்ளுமளவில் அவனுக்குத் தோஷம் இருந்து தீரவேண்டும். (அதாவது) அவன் துஷ்டனாகவே யிருக்கவேண்டும் என்றபடி. (இவ்விதமாக வேதாந்த தேசிகர் பொருளுரைக்கிறார்). குணங்கள் நிரம்பியிருப்பவனையே பெருமாள் கைக்கொள்வதென்று விரதம் கொண்டால், அதிகாரி ஒருவனும் கிடைக்கமாட்டானென்பது தவிர, பெருமாளுடைய கருணைக்கும் மேன்மையில்லையாகும். சரணாகதர்களின் குணங்களுக்காக அருள் செய்ததாகுமே யொழிய, தம்முடைய கருணையால் காரியம் செய்ததாக ஆகாதன்றோ. குற்றங் குறைகளையே பச்சையாகக் கொண்டு சரணாகதர்களைக் கைப்பற்றுகிறாரென்பதே பெருமாளுக்கு ஏற்றம்.

வாத்சல்ய குணம் பற்றிய ஐய நீக்கம் :

இப்படிக் கொண்டால் அடியவர்களான நாம் குற்றங்களை மனஸ்கரித்தே செய்ய வேண்டியதாக நேர்ந்து விடாதோவென்று இங்குப் பல சங்கைகளைச் செய்வர் சிலர். நாம் சாஸ்திரக் கட்டளையின் படியே வர்த்திக்கக் கடமைப்பட்டவர்களென்பது, அசைக்க முடியாதபடி தேறியிருப்பதாதலால். நாம் புத்தி பூர்வகமாகவே குற்றஞ் செய்ய நேர்ந்து விடுமென்பது தவறு. நெருப்பானது வீட்டைக் கொளுத்துமென்று ஒருவர் நெருப்பின் பெருமையைச் சொன்னவளவால் நம் வீடு நெருப்பிற் கொளுந்தி யொழிந்ததாக வருந்தி விடுவதுண்டோ? இராமனை "க்ஷமயா ப்ருதிவீஸம:" என்று மிக்க பொறுமைக் குணமுள்ளவனாகச் சொல்லியிருக்கிறது. "நாம் எவ்வளவு குற்றங்கள் செய்திடினும் இராமன் பொறுத்தருள்வன்' என்று நம்பிக்கை கருதி, யாவரும் மனஸ்கரித்துக் குற்றங்களைச் செய்யத் துணிவர்களென்று கருதி, இராமனைப் பொறுமையாளனல்லன் என்று சொல்லிவிட முடியுமோ?

இராகவனது திருக்குணங்களில் எந்தக் குணம் எந்தச் சமயத்தில், எந்த அதிகாரியின்மீது எவ்விதமாகப் பெருகுமென்று, நம்மால் காணமுடியுமோ? சுக்ரீவ மகாராஜனிடத்தில் அக்நி சாட்சிகமாகச் சிறந்த நட்புசெய்து "இளையவர்கட்கு அருளுடையாய்!" என்று குலாவி நின்ற இராகவன் அந்த சுக்ரீவன் குறிப்பிட்ட காலத்தில் படை திரட்டிக்கொண்டு வந்து சேரவில்லை என்று சீறிச்சிவந்து "ந ச சங்குசித: பந்தா யேந வாலி ஹதோ கத:" என்றும், "ஹநிஷ்யாமி ஸபாந்தவம்" என்றும்,

(அதாவது, என்னம்புக் கிலக்காகிமாண்ட வாலி போனவழி இன்னும் மறையவில்லை; அதே வழியில் சுக்ரீவனையும் சுற்றத்தாருடன் செலுத்துவேன் என்று) கூறின இராகவன், எப்போதுமே பொறுமைக்கடலென்றும், எப்போதுமே குற்றங்களை நற்றமாகக் கொள்பவன் என்றும், நினைக்கத் முடியாதவனு யிருப்பதால் குற்றஞ்செய்ய அஞ்சியிருக்க வேண்டியது சேதனர்களின் கடமையாகும். அவன் பக்கலில் விளங்கும் திருக்குணங்களை யெடுத்துரைக்கும் அளவால் எவ்விதமான ஆபத்தும் சங்கிக்கத் தகாது.

சிமாலிகன் கதை :

கண்ணபிரானுடைய சரித்திரங்களில் ஒன்று கேள்விப்படுகின்றோம்; "சிமாலிகனவனோடு தோழமைக் கொள்ளவும் வல்லாய், சாமாறு அவனை நீ யெண்ணிச் சக்கரத்தால் தலைகொண்டாய்'' என்ற பெரியாழ்வார் பாசுரத்தினுல் அறியும் வரலாறு விசித்திரமாகவுள்ளது. உயிர்த் தோழனுகக் கொள்ளப்பெற்றவனையே தலையறுப்பதுஞ் செய்ததாகக் கதை காண்கிறது. இப்படிச் செய்வது பெரும் பாதகமல்லவாவென்று சங்கிப்பவர்களுடைய கலக்கம் தீருமாறு, அவ்வாழ்வார் தாமே அப்பாசுரத்திலேயே ''ஆமாறு அறியும் பிரானே !'' என்கிருர். எந்தெந்தச் சமயத்தில் யார்யாரிடத்தில் எப்படிப் பழகவேணுமென்பது அப்பெருமானுக்கே தெரியுமாதலால், அவனது செயல்களில் யாரும் எவ்விதமான குறையும் நினைக்கத்தகாது என்பதையே, ''ஆமாறறியும் பிரானே !'' என்பதனுல் ஆழ்வார் காட்டினுராகிருர்.

ஆக, இராமபிரான் குற்றங்களையும் நற்றமாகக் கொள்பவனென்பதே, அசூயை அற்றவன் யார் என்பதில் விளங்கும் குணமென்றும், இது மிகச் சிறந்த குணமென்றும், இதில் எவ்விதமான ஆட்சேபமும் செய்யப் பொருந்தாதென்றும், சொல்லிற்றுயிற்று.

பிறர் பெருமை கண்டு உகத்தல் :

'நற்றங்களையும் குற்றமாக்குவது அசூயை' என்றுகொண்டு, கீழ் விவரணம் காட்டினேம். 'பிறர்க்குண்டான பெருமையைப் பொறுக்குந் தன்மையில்லாமை அசூயை' என்றுஞ் சொல்லுவதுண்டாகையால், அப்பொருளின்படியும் சிறிது விவரணம் காட்டுகிறேம். பிறருடைய மேன்மையைக்கண்டு பொருமையாகிற அசூயை இல்லாதவன் யாவன் ? என்பது இந்த வினு. பிறருடைய மேன்மை கண்டு பெருமகிழ்ச்சி கொள்ளுமியல்வினரிடத்தில், அசூயை யென்னும்துர்க்குணம் தலைகாட்டமாட்டாது. தன்னை அடிபணிந்தார்க்கெல்லாம் பல்வகையான பெருமைகளையும் அளிப்பவனுன இராமபிரான், அப்பெருமைகளைக் கண்டு பொருமைகொள்ளப் பிரசக்தியில்லை. இவனது திருக்குணங்களைத் தசரத சக்ரவர்த்தி பக்கலில் எடுத்துரைக்கின்ற அயோத்தி நகர மக்கள் ''உத்ஸவேஷு சஸர்வேஷு பிதேவ பரிதுஷ்யதி'' என்று கூறியுள்ளார்கள். அவரவர்களது இல்லங்களில் மகிழ்ச்சிச் செய்திகள் நடைபெறுங்கால், இராமன் ஆனந்தப்படுவதைக் கண்டால், அவர்களுக்கெல்லாம் இவன் தந்தையே ! என்னும்படியாயிருக்குமாம்.

இராமனுல் பெருமை பெற்றவர்கள் :

ஏழை ஏதலன் கீழ்மகன் என்று பிரசித்தனுனவொரு வேடர் தலைவனை இராமன் பெருமைப்படுத்தியதில் இருந்து, அவன் ஆசாரியர்களால் குகப்பெருமாள் என்று வழங்கப்பட்டு வருகிருன். சபரியானவள் ''சட்சுஷா தவ ஸௌம்யேந பூதாஸ்மி ரகுநந்தன'' என்னும்படி, இராமனது திருக்கண்ணேக்கமொன்றினுல் பரமபரிசுத்தையாயினள். குரங்கினங்களும் இப்பெருமானது மகாநுக்ரகத்தைப் பெற்றுச் சுக்ரீவமகாராஜன் என்றும், அங்கதப் பெருமாள் என்றும், ஸ்ரீவானர முதலிகளென்றும் பெருமைபொலிய வழங்கப்பட்டு வருகிருர்கள். அனுமானுக்குத் திருவடியென்னும் வியபதேசத்தைத் தந்தருளினன் இராமபிரான். தன்னுடைய அபிமானத்தினுல் கழுகரசன், ஜடாயு மகாராஜர் என்றும், பெரிய வுடையாரென்றும் வழங்கநின்ருன். ராட்சச ஜாதீயனுனவொரு பக்தன் விபீஷணுழ்வானென்று விருதூதநின்று ''என்னிலங்கு நாமத்தளவும்அரசு'' என்னப் பெற்று ''மன்னுடைய விபீடணற்காய் மதிளிலங்கைத் திசைநோக்கி மலர்க்கண் வைத்த'' என்னவும் பெற்றுக் காலதத்துவமுள்ளதனையும் பெருமைபெற்று வாராநின்ருன். இங்ஙனே எத்தனை காட்டவேணும்! இப்படி பலர்க்குப் பலவிதமான பெருமைகளை விளைத்து இதனுலேயே உள்ளம் பூரித்திருக்கின்ற இராமபிரான், பிறர்

பெருமையைக்கண்டு பொறுமையாகிற அசூயை என்னும் துர்க்குணத்திற்கு அவகாச லேசமும் அற்றவனன்றோ.

முமுட்சுப்படி திவ்யசூக்தி :

மானிடர்க்குண்டாகும் தீயகுணங்களில் அசூயையொன்றே தலைமை பெற்றது. இதனை வென்றவர்கள் உலகில் கிடைப்பது மிகவுமரிதே. பிள்ளைலோகாசாரியர் தாமருளிச்செய்த முமுட்சுப்படியென்னுமொரு திவ்விய நூலில் "இப்படியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களின் ஏற்றமறிந்து உகந்திருக்கை" என்று பணித்தவிடத்திலே வியாக்கியான கர்த்தாவான மணவாளமாமுனிகள், "மற்றைக் குணங்கள் எல்லாம் உண்டானாலும், உண்டாக அரிதாய் இருப்பது, ஒன்றன்றோ இது" என்று அருளிச் செய்கிறார். ஆகவே இத்தீயகுணம் மானிடர்க்கு மருந்தில்லா வியாதியே என்னத் தட்டில்லை. இராமபிரான் "ரிபூணமபி வத்ஸல :" என்று அடிக்கடி கொண்டாடப்படுகிறான். பகைவரிடத்தும் குற்றம் பாராதவன், பகைவர்க்கும் பெருமையை விளைக்க நினைப்பவன் என்று பிரசித்தி பெற்ற இராமபிரான் ஒருவனே, அசூயை அற்றவன் யார்? என்கிற வினாவுக்கும் விடைக்கும் இலக்காகத் தகுமவன்.

கீதாபாஷ்யம் :

பகவத்கீதையில் (9—1), "ப்ரவக்ஷ்யாமி அநசூயவே" என்னுமிடத்தில் பாஷ்யம் செய்தருளாநின்ற ஸ்ரீராமாநுஜர் "சாஸ்த்ரோக்தங்களான விஷயங்களைக் கேட்டால் இது பொருந்தாதென்று குதர்க்கம் செய்பவன் அசூயையுடையவன்; பொருந்துமென்று உகந்திருப்பவன் அசூயையில்லாதவன்" என்று கருத்துரைக்கிறார். இவ்விதமான பெருமையும் இராமபிரானுக்கே ஏற்கும்.

இராம ஜாபாலி சம்வாதம் :

இராமனைக் காட்டில் நின்றும் திருப்பித் திருவயோத்திக்கு எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போகவேணுமென்று, சித்திர கூடத்திற்கு வந்த பரதாழ்வானுக்குப் பரிந்து ஜாபாலியென்னும் முனிவன், இராமன் பக்கலில் சில நாஸ்திக வாதங்களைச் செய்யத் தொடங்கினன்:—"ஆச்வாசயந் தம் பரதம் ஜாபாலிர் ப்ராம்மணோத்தம :, உவாச ராமம் தர்மஜ்ஞம் தர்மாபேதமிதம் வச:" என்று (அயோ: 108—1). வான்மீகி முனிவரும், (தர்மாபேதம் வச: உவாச) என்று சொல்லுமாறு சாஸ்திரவிருத்தமான வார்த்தைகளைச் சொன்னான். அப்போது இராமன், "அம்ருஷ்யமாண : புநருக்ரதேஜா : நிசம்ய தந் நாஸ்திக வாக்ய வேஷம், அதாப்ரவீத் தம் ந்ருபதேஸ் தநூஜோ விகர்ஹ மாணோ வசநாநி தஸ்ய." (அயோ. 109—30) என்றபடியே, பெரிய ப்ராம்மணோத்தமனை ஜாபாலி சொன்ன சொல்லாயிற்றே! என்றும் பாராமல், நாஸ்திக வாதத்தைச் சிறிதும் சகிக்கமாட்டாமல், அந்த முனிவனைச் சீறி வெறுத்ததாகவுங் காண்கிறது. ஆக, எல்லாப் படிகளாலும் இராமன் அசூயையற்றவன் என்றதாயிற்று.

(தொடரும்)

மதிப்புரை

பன்னிரு திருமுறைத்திரட்டு : இந்நூல் 'திருப்புகழ் அமிர்தம்' ஆசிரியர், 'அருண்மொழியரசு' திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்களால், தொகுக்கப் பெற்றது. எளிய இனிய சிறந்த பாடல்கள், திறம் தெரிந்து தேர்ந்தெடுக்கப்பெற்று, தொகுத்துப் பெற்றுள்ளன. சற்றேறத் தாழ 400 பாடல்கள், சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் இருந்தும் முறையே தெரிந்தெடுத்துச் சேர்க்கப் பெற்றிருத்தல், அன்பர்கள் அனைவர்க்கும் பயன் தருவதாகும். இப்பாடல்கள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு விழுமிய முழுமணியாக, மதித்துப் போற்றற்பாலன. சிறப்பாக இளஞ் சிறுவர் சிறுமியர்க்கும், பொதுவாகச் சைவ அன்பர்களுக்கும், இப்பதிப்பு பெரிதும் பயன்படும். **விலை:** 50 காசுகள்.

கிடைக்கும் இடம் :

திருப்புகழ் அமிர்தம் அலுவலகம்,
89, சிங்கண்ணச் செட்டித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.